www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 16 ஜனவரி - பெப்ரவரி 2009 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 119



# வெற்றி தோல்வி யாருக்கு?



வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெற்று வரும் யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்து நிற்கிறது. இலங்கையின் முப்படைகளும் கடுமையான யுத்த முனைப்பில் இறங்கியுள்ளன. அதே வேளை தமது முன்னைய நிலைகள் பலவற்றிலிருந்து பின்வாங்கிய புலிகள் இயக்கம் தமது இறுதிப் பலத்தைக் காட்டுவதில் ஈடுபட்டிருக்கிறது. இதில் வெற்றி தோல்வி யாருக்கு என்ற விவாதம் அவரவர் அரசியல் நோக்கிற்கு ஏற்ப நோக்கப்படுகிறது. அதேவேளை இந்த யுத்தத்திற்குள் சிக்கியுள்ள சுமார் நாலு லட்சம் மக்களின் கதி என்ன? அவர்களுக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதே சமூக அக்கறையும் மனித நேயமும் கொண்ட சகலரதும் கவலையாகவும் அக்கறையாகவும் உள்ளது.

இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றதும் அதனை இலங்கையின் இரண்டாவது சுதந்திரம் என அறிவித்து முழு நாடும் குதூகலிக்க வேண்டும் என ஜனாதிபதி ஏற்கனவே கூறி இருக்கிறார். அதாவது இது ஒரு இனத்திற்கோ ஒரு மதத்தினருக்கோ கிடைக்கும் வெற்றியல்ல முழுநாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் உரிய வெற்றியாக இருக்கும் என்பதே அவரது கருத்தாகும்.

ஆனால் ராணுவ ரீதியில் வென்றெடுக்கப்படும் வெற்றி என்பது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் நிரந்தர வெற்றியாகி விட முடியுமா? யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பதிலாகவே யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. முப்பது வருடகால ராணுவ முனைப்புகளும் யுத்தத்திணிப்புகளும் போராட்ட வடிவங்களும் வடக்கு கிழக்கையும் மக்களையும் சின்னாபின்னப்படுத்தி விட்டன.

இத்தனைக்கும் மத்தியில் அரசியல் தீர்வு என்பது வெற்றுப் பேச்சுக்களாகவே அமைந்து கொண்டன. உண்மையான வெற்றி என்பது அரசியல் தளத்தில் கண்டிருக்க வேண்டும். வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட்டிருப்பின் அதுவே இலங்கையின் எதிர்காலத்திற்குரிய நிரந்தர வெற்றியாக அமைந்திருக்கும். அதற்கு பேரினவாத முதலாளித்துவ உயர்வர்க்க மேட்டுக்குடி சக்திகள் எச் சந்தர்ப்பத்திலும் இணங்கவோ முன்வரவோ இல்லை. முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி அதிகாரப் போட்டிக்கு தேசிய இனப்பிரச்சினையைக் கருவியாக்கி பேரினவாதத்தை நச்சுத்தனமாக வளர்த்தெடுத்து விரிவுபடுத்தனர். அதன் எதிர் விளைவே தமிழ் மக்களின் போராட்டங்களாகி இறுதியில் ஆயுத வடிவம் பெற்றது.

2ம் பக்கம் →

## மலையகத்தில் மாற்று அரசியலை முன்னெடுக்க

### புதிய - ஜனநாயக கட்சிக்கு வாக்களிப்போம்

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வென்றெடுக்க
அரசியல் கைதிகளை விடுவித்துக் கொள்ள
மலையக மக்களுக்கு வீடு, காணி உரிமையைப் பெற்றுக் கொள்ள
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வென்றெடுக்க
மலையக மக்களின் சுயநிர்ணய சுயாட்சி பெற்றுக் கொள்ள
வெகுஜனப் போராட்டமார்க்கத்தை முன்வைத்தி பலப்படுத்த
நுவரெலியா மாவட்டத்தில் கேத்தல் சின்னத்திற்கு
வாக்களியுங்கள்

அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்போருக்கும்,
சம்பள உயர்வுப் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தோருக்கும்,
மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்திற்கு துரோகமிழைத்தோருக்கும்,
ஆசிரியர் நியமனங்களை முழுமையாகப் பெற்றுத் தர முடியாதோருக்கும்,
இளைஞர் யுவதிகளை சிறையில் இருந்து மீட்க முடியாதவர்களுக்கும்,
பேரினவாதகட்சிகளுக்குத் துணைபோகும் அடிவருடிகளுக்கும்
வாக்களிக்க வேண்டாம்.



தோழர் இ.தம்பையா
தேசிய அமைப்பாளர்

புதிய தலைமுறைக்கு
புரட்சிகர அழைப்பு

X 7

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## நாலு நடக்கும் உலகிலே நன்குணர்ந்து

## நீயே கதி ஹிலரி

டிசெம்பர் மாதத் தினக்குரலில் தமிழ்த் தேசியவாதத்தின் வங்கலோட்டுத் தனத்துக்குச் சப்பைக் கட்டுக் கட்டுவதற்காகவே பல காலமாக எழுதி வருகிறவரான “பீஷ்மர்” என்கிற புனைபேருக்குரியவர், இந்தியா இலங்கை பற்றிக் கடைப்பிடிக்கிற மேலாதிக்கக் கொள்கையை நியாயப்படுத்துகிற விதமாக, இந்தியாவின் நக்சல்பாரி இயக்க எழுச்சிக்கான ஆதரவு இலங்கை மூலமாகவே சென்றதாகக் கருத்துக்கள் இருந்ததாக எழுதிவைத்திருக்கிறார். அதற்கான ஆதாரம் எதுவும் அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அது அவரது வரலாற்று அறிவின் லட்சணம்.

இப்போது ஹிலரி கிளின்ற்றன் பயங்கரவாதம் என்று எல்லா ஆயுதப் போராட்டங்களையும் சொல்ல இயலாது என்று குறிப்பிட்டுள்ளதில் எதிர் காலத்தில் தமிழீழ விடுதலைக்கான வாய்ப்புக்களைத் தேடிக் கொட்டாவி விட்டுள்ளார். ஹிலரி பலஸ்தீனத்தில் யார் தரப்பில் நிற்கிறார் என்பது விளங்காத அரசியல் ஞான சூனியங்களால் மட்டுமே ஹிலரியிடம் தமிழர் விடுதலைக்கான ஆதரவைத் தேட இயலும். இந்த மேதை தான் சிலகாலம் முன்பு சோனியா கைகொடுப்பார் என்று நமக்கு நம்பிக்கையூட்டியவர் என்பதையும் இங்கு சொல்லாமல் விட இயலாது.

## மழுப்பல் மன்னர்கள்

இலங்கை அரசாங்கம் வவுனியாவில் தனது படை முகாமைப் பார்வையிட அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் என்பன உட்பட்ட நாடுகளின் உயர் ராணுவ அதிகாரிகளை அழைத்த படத்துடன் கட்டுரை எழுதியிருந்த முன்னாள் “லண்டனிலிருந்து” அந்த நாடுகளைப் பேர் குறிப்பிடாமல் திரும்பத் திரும்ப இலங்கை மீது சீனாவின் செல்வாக்கு ராணுவ உதவி என்பன பற்றி வீரகேசரியில் மீண்டும் மீண்டும் எழுதி வருகிறார். அந்தப் படத்தில் சீன ராணுவத்தின் சார்பில் யாரும் இல்லை. எனினும் சீனச் சாயலுடன் ஒருவர் நிற்கிறார். அவர் தென் கொரிய நாட்டவர். இந்த விதமாக ஏன் முக்கியமான தகவல்கள் மூடி மறைக்கப்பட வேண்டும்?

## நல்லதொரு கூட்டணி

இந்தியாவுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சனையில் அக்கறை தொடர்ந்தும் இருந்து வருகிறது என்று சம்பந்தன் டெய்லி மிரருக்கு வழங்கிய நேர்காணலில் சொல்லியிருக்கிறார். இந்தியாவுக்கு ‘அக்கறை’ இருக்கிறது என்று எல்லாருக்கும் தெரியும். ஆனால் என்ன விதமான அக்கறை என்பது தான் பிரச்சனை. சம்பந்தன் நமக்கு எப்போதாவது அது பற்றிய உண்மையைச் சொல்லுவாரா? அதிகம் வேண்டாம். ஈழத் தமிழரைக் கொண்டு செக்கிழுக்கவா அல்லது செக்கிலிட்டு அரைக்கவா என்பதைச் சொன்னாற் போதும்.

## அவருக்கு சம்பந்தமான அக்கறை

ரவூஃப் ஹக்கீம், மனோ கணேசன், மங்கள சமரவீர, ரணில் விக்ரமசிங்ஹ ஒன்றாக நின்று படமெடுத்தால் அதில் ஒரு பெரிய புதினமும் இல்லை. அது இருந்து வருகிற கூட்டணி. 22-12-2008 பத்திரிகையில் இந்த நாலு பேருடன் சிறிதுங்க ஜயசூரியவும் மாத்தறையில் ஒரே மேடையில் நிற்கிற படம் கொஞ்சம் வியப்பூட்டியது. அவர்கள் ஒரு கூட்டணி அமைத்திருக்கிறார்களாம். ஐக்கிய சோஷலிஸக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஒரு சொல் தான் வித்தியாசம். அதையும் இல்லாமல் செய்யலாம். இரண்டையும் சேர்த்தால் தேசிய சோஷலிஸ்ற் என்று வரும். ஹிற்லரின் கட்சிக்கும் அதுதான் பேர்.

ட்ரொட்ஸ்கியத்தின் பிதா யூ.என்.பியில் இணைந்தார். ட்ரொட்ஸ்கியத்தின் தங்க மூளையும் வெள்ளி நாக்குமான என்.எம்மும் கொல்வினும் யூ.என்.பியுடன் ஒட்டாது போனாலும் தமது இறுதி ஆண்டுகளில் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அன்புக் குரியவர்களாக இருந்தார்கள். இப்போது சிறிதுங்க ட்ரொட்ஸ்கியத்திலிருந்து என்.ஜீ.ஓ. வழியாக யூ.என்.பியுடன் போய் ஒட்டிக் கொண்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து கலாநிதி விக்கிரமபாகுவும் கூட்டிற்குள் புகுந்துள்ளர்.

ட்ரொட்ஸ்கிவாதிகள் எந்தத் தரப்புடன் நின்றாலும் புரட்சிக்குத் துரோகமிழைத்தவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.



## சிறை மதில்களுக்கு சிறைக் கம்பிகளும் நமக்குத் தடைகள் அல்ல!

நமது தோழர்கள் ஐவர் கடந்த 22 மாதங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். விடுதலையும் இல்லை விசாரணையும் இல்லை. இவர்கள் மட்டுமா? ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் சிங்கள முஸ்லீம் கைதிகள். மகிந்த சிந்தனை அரசே! நம் தோழர்கள் குற்றம் என்ன செய்தனர். கொலையா கொள்ளையா ஆட்கடத்தலா கப்பமா சதித்திட்டமா இவற்றில் எவற்றைச் செய்தனர். ஆனால் அவசர காலச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத முலாம் பூசி அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எமது தோழர்கள் மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனையால் உறுதி பெற்றவர்கள். மக்களின் விடுதலைக்காகச் செயற்பட்டவர்கள். அதனால் அவர்கள் சிறையில் தவம் இயற்றி வருகிறார்கள். அந்தத் தவம் வீண்போகாது. மக்களுக்காக மக்களிடம் சமூக மாற்றம் நோக்கி கடுமையாக வேலை செய்தவர்கள். அரசியல் விழிப்புணர்வை மலையகத்தில் உருவாக்க இரவு பகலாக வேலை செய்தவர்கள் நமது தோழர்கள். எனவே சிறை இருப்பு அவர்களது மனஉறுதியைக் குலைக்க மாட்டாது. அவர்கள் சிறைக் கூண்டில் இயற்றி வரும் தவத்திற்குரிய வரத்தை மக்கள் வழங்குவர். அவர்கள் வெளி வரும் போது அந்த வரத்தின் பெறுமதி மக்கள் மத்தியில் பலம் மிக்க சக்தியாக மாற்றமடையும். அதற்கான நாட்கள் அதிக தூரத்தில் இல்லை. தோழர்களே! சிறை மதில்கள் மறைத்தாலும் சிறைக் கம்பிகள் தடுத்தாலும் நாம் புரட்சிகரக் கொள்கையால் நடைமுறைகளால் உணர்வால் ஒற்றுமையால் உங்கள் அருகிருந்தே எம்பணி தொடர்கின்றோம். உங்களுக்கு தோழமையான வாழ்த்துக்கள். நாம் விரைவில் ஒன்றிணைந்து முன்னேறிச் செல்வோம். தோழர்களே

## வெற்றி தோல்வி

1ம் பக்க தொடர்ச்சி

இரு தரப்பிலும் ஒன்றுக் கொன்று உதவுவது போன்று தொடர் செயற்பாட்டின் மூலம் இனப் பகை வளர்க்கப்பட்டது. யுத்தத் தீ மூட்டப்பட்ட சூழலில் அந்நிய ஆதிக்க சக்திகள் தத்தமது நலன் தேவை கருதி அதற்கு எண்ணெய் ஊற்றி மூண்டெழச் செய்தனர். அதன் முழு வீச்சை இன்று முல்லைத்தீவில் காணமுடிகிறது.

இந்த யுத்தத்தின் மொத்த விளைவுகளை இன்று இந்த நாடும் மக்களும் அனுபவித்து நிற்கின்றனர். இதில் வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் மிகக் கடுமையான கொடுமையான இழப்புகளையும் அழிவுகளையும் கண்டு கொண்டனர். அத்தகைய தொடர்ச்சியின் உச்ச கட்டமே இன்று முல்லைத்தீவின் நிலப்பரப்பில் ராணுவ முற்றுகைக்குள் அகப்பட்டுள்ள நாலு லட்சம் மக்களின் பேரவல நிலையாகும். அவர்களது உயிர்வாழ்வுக்கும் பாதுகாப்பிற்கும் அரசாங்கம் உரிய உத்தரவாதத்தை வழங்க வேண்டும். அதே போன்று அம் மக்கள் மத்தியில் இருந்து வரும் புலிகள் இயக்கமும் பொறுப்பும் உத்தரவாதமும் கூறியாக வேண்டும்.

தற்போதைய “இறுதி யுத்தத்தில் ஜனாதிபதியும் ராணுவத் தளபதியும் வெற்றி பெற்றதாகக் கூறிக் கொள்ளலாம். வரலாற்றில் இரண்டாவது சுதந்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஜனாதிபதி வெற்றி விழா நடாத்திக் கொள்ளலாம். எதிர்வரும் பெப்வரி 4ம் திகதி இலங்கையின் சுதந்திரத்திற்கு அறுபத்தியொரு வயதாகிறது. இந்த அறுபத்தியொரு வருடங்களுக்கும் முன் பெற்ற சுதந்திரத்திற்கு இதுவரை அர்த்தமே இருக்கவில்லை. அப்படியாயின் இப்போது சொந்த நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் மறுத்து நிராகரித்து ராணுவ ரீதியில் இரண்டாவது சுதந்திரம் எனப் பிரகடனம் செய்வதால் நாட்டிற்கும் மக்களுக்கும் வெற்றி வந்து விடாது. இத்தகைய ராணுவ வெற்றி அடிப்படையில் இந் நாட்டுக்கும் மக்களுக்கும் பயன் அற்றதாகும். அதுதோல்வியாகும். இலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்க மேட்டுக்குடியினருக்கும் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆட்சியாளர்களுக்கும் மட்டுமே அது வெற்றியாகும். ஆனால் இந் நாட்டின் உழைக்கும் ஏகப்பெரும்பான்மை மக்களுக்கு தூர நோக்கில் தோல்வியேயாகும்.

ஒரு இனத்தை அடக்கி ஆள முயலும் எந்த வொரு இனமும் சுதந்திரமுடையதாக இருக்க முடியாது என்பது நினைவு கொள்ளப்பட வேண்டியதாகும்.

எனவே இன்றைய பேரினவாத ஒடுக்குமுறை வெற்றி பெற்றுள்ளது என்பதன் பின்னால் இருக்கும் சமூக வர்க்க முரண்பாடுகளின் அடிப்படைகளையும் அவற்றின் எதிர்கால வளர்ச்சிகளையும் நோக்கும் எவரும் இலங்கை எங்கே இழுத்துச் செல்லப்படுகின்றது என்பதை உணரவும் காணவும் செய்வர். எனவே வெற்றி தோல்வி யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் விடயத்தை எதிர்காலத்திடம் ஒப்படைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

## சிறைக்குள் நீயாகவும் நாமாகவும்

நீ யாராக இருந்தால் என்ன!
நீ யாரென்ற முடிவு
உன்னிடம் இல்லை
ஊர் பேர் உறவு சுற்றம்
தொழில் உடனுழைப்போர்
நண்பர் தொடர்புகள்
எவ்வாறு உன்னைச் சுட்டினாலும்
நீ யாரென்ற முடிவு அங்கே இல்லை.
நீ எதைச் செய்தாலும்
செய்யாவிட்டாலும்
எதை எப்படி எப்போது செய்தாய் என
அவர்கள் முடிவெடுத்து
உன்னைக் குறி வைத்துத்
தாம் விரும்பியவாறு உன்னை
வடிவமைத்தனர்
உன் சொல்லும் செயலும் எண்ணமும்
எவையென்று
அவர்களே முடிவெடுத்த பின்
உன் மறுப்புக்கள் பெறுமதி இழந்தன
அவர்கள் அங்கேயே இருக்கும் வரை
நீ இங்கேயே இருக்க இயலும்
அவர்களே முடிவுகளை எடுக்கும் வரை
நீ நீயில்லை
நீ யாருமேயில்லை
நீ ஆளேயில்லை
அவர்களை அங்கிருந்து பெயர்ப்பது தான்
உன் முடிவென்றால்
நீ யாரென்ற முடிவை நீயே எடுக்கத்
துணிந்து விட்டால்
இனி நீ
நீயாகவும் நாமாகவும்
எல்லாருமாகவும் இருப்பாய்.

-புவனம்-


**புதிய பூமி**

2009ம் ஆண்டுக்கான சந்தா ஒரு வருடம் - 400 ரூபா
ஆறு மாதங்கள் - 200 ரூபா (தபாற் செலவு உட்பட)

**வெளிநாடுகள்**

ஐரோப்பா - 30 ஈரோ ஏனைய நாடுகள் - 40 டொலர்

வங்கி மூலம் அனுப்புவோர் S. Thevarajah Bank of Ceylon A/C No 452868 Central Super Market Branch Petta. என்பதற்கு அனுப்பவும்.

தபால் நிலையம் மூலம் அனுப்புவோர் K. Senthivel என்ற பெயரில் Grandpass தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பவும்.

புதிய பூமியின் தொடர் வரவிற்கு தங்களின் மேலதிக நிதி உதவி பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம்.

நன்றி.

The Manager Puthiya Poomi
47, 3rd floor, C. C. S. M Complex, Colombo- 11 Sri Lank.


## மற்றொரு சிங்கள பத்திரிகை ஆசிரியருக்கு வெட்டு


சிங்கள மொழி ஏடான ரிவி ரவின் பிரதம ஆசிரியர் உபாலி தென்னக்கோன் வெட்டுக்குத்துக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்தின் போது அவரது மனைவியும் காய மடைந்தார். தெற்கில் சிங்கள ஆங்கில ஊடகங் களுக்கும் அவற்றின் ஊடகவியலாளர்களுக்கும் குறிப் பாக பிரதம ஆசிரியர்களுக்கும் எதிரான கொலைகள் தாக்குதல்கள் வேகமடைந்து செல்வதைக் காண முடிகிறது. எழுதினால் எமக்காக எழுதுங்கள் இல்லையேல் ஆட்சியை கண்டித்தால் விமர்சித்தால் கை கால்களை எடுப்போம் தேவையானால் உயிரையும் குடிப்போம் என்கிறது. ஆட்சியின் மறைகரங்கள். 2006ம் ஆண்டிற்குப் பின் ஒன்பது ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக பொறுப்பான அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். ஆனால் ஊடக அமைப் புகள் 12 பேர் எனக் கூறுகின்றன. 26 பேர் தாக்கப்பட்டு காயங்கள் அடைந்தனர். இத்தனைக்கும் இடம் பெற்ற விசாரணைகள் யாவும் பூச்சியமே. இது தான் மகிந்த சிந்தனையின் கீழான ஊடக சுதந் திரமும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு லட்சண முமாகும். தமிழ் ஊடகவியலாளர்களையும் ஊடகங்களையும் வேட்டையாட ஆரம்பித்த அரசின் மறைகரங்கள் இப்பொழுது சிங்கள ஆங்கில ஊடகங்களையும் வேட்டையாடுவதில் நிற்கின்றன. இது இத்துடன் முடிவுக்குப்போவதில்லை. அடக்குமுறை ஆட்சியை கண்டித்து விமர்சிப்பவர்கள் அனைவருக்கும் ஏற்படப் போகும் கதி ஆகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஆளும் கட்சி எதிர்க்கட்சி கூட்டணியை நிராகரிப்போம்!

## புதிய- ஜனநாயகக் கட்சியை வெற்றிபெறச் செய்வோம்
## தோழர் இ. தம்பையா முதன்மை வேட்பாளர்



மலையக சமூக விடுதலைக்கு மாற்று அரசியலும் தலைமையுமே தேவை. மாற்று அரசியலும் தலைமையும் என்பது தற்போதிருப்பவர்களுக்கு பதிலாக வேறு பிரமுகர்களை அரங்கிறக்கு கொண்டு வருவதல்ல. மாறாக அரசியல் கொள்கை நடைமுறை போன்ற எல்லாவற்றிலும் பேரினவாத முதலாளித்துவ கட்சிகளுக்கு சோரம் போகாத அடிபணியாத எல்லாவற்றிலும் மக்கள் நலன் சார்ந்த அடிப்படைகளை கொண்ட அமைப்பும் தலைமையுமே வேண்டும். அவை யாவும் புதிய- ஜனநாயக கட்சியிடம் இருக்கிறது. அதனை பலப்படுத்தும் நோக்கில் தான் இந்த மாகாணசபை தேர்தலிலும் நாம் போட்டியிடுகின்றோம்.

இவ்வாறு மத்திய மாகாண சபைக்காக நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக "கேத்தல்" சின்னத்தில் போட்டியிடும் குழுவின் முதன்மை வேட்பாளரும் புதிய- ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளருமான தோழர் இ. தம்பையா தெரிவித்தார்.

கொட்டகலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது. முதலாளித்துவ கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கும் புதிய- ஜனநாயக கட்சி போட்டியிடுவதற்கும் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன. ஜனநாயகம் என்ற பேரில் பலவிதமான மோசடிகளை செய்து அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதே முதலாளித்துவ கட்சிகளின் நோக்கமாகும். அர்த்தமுள்ள மக்கள் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காகவே புதிய- ஜனநாயக கட்சி தேர்தலில் போட்டியிடுகிறது.

மலையகத் தேசிய இனம் 200 வருடங்களாக உரிமை மறுக்கப்பட்ட, நீதி மறுக்கப்பட்ட, மறக்கப்பட்ட இனமாக நடத்தப்பட்டு வருகிறது. தேர்தல் காலங்களில் மட்டும் அரசியல் கட்சிகள் அனுதாப மழை பொழிவதுண்டு. ஐ.தே. கட்சியின் "இலங்கையை மீளக்கட்டியெழுப்பு போம்" என்ற திட்டத்தினாலோ ஐ.ம.சு. முன்னணியில் "மஹிந்த சிந்தனையினாலோ" மலையக மக்களுக்கு உரிய பயன் கிட்டவில்லை. ஆனால் மலையக கட்சிகளோ அவற்றிடம் வேலைத்திட்டம் எதுவுமின்றி ஐ.தே. கட்சிக்கு வக்காலத்து வாங்குவனவாகவோ, அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்குவனவாகவோ இருக்கின்றன. மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்கள் தேர்தல் காலத்து தரகர்களே யன்றி தமது மக்களுக்குரிய அரசியல் வாதிகளல்ல.

நாட்டில் நிலவுகின்ற தற்போதைய ஜனநாயக மறுப்பு சூழ்நிலையால் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மலையக இளைஞர்கள் யுவதிகள் பாதுகாப்பற்றவர்களாகவே இருக்கின்றனர். மலையகத்திலும் மலையகத்திற்கு வெளியிலும் பெரும் எண்ணிக்கையான மலையகத்தவர்கள் கைது செய்யப்படுகின்றனர். மறியலில் வைக்கப்படுகின்றனர். ஆனால் மலையகத்து அரசியல்வாதிகள் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்து கொண்டு வெறும் கதை பேசிக் கொண்டிருக்கின்றனர். காணாமல் போனவர்களை தேடிக் கொண்டிருப்பதாகவும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதாகவும் கூறுகின்றனர். அரசாங்கத்துடன் இருந்தாலும் அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். இதை நியாயம் என்று மக்களை நம்பச் சொல்கின்றனர். 30 வருடங்களுக்கு மேலாக அரசாங்கங்களில் அங்கம் வகித்து வருகின்றனர். ஆனால் தோட்டத்தொழிலாளர்களுக்கோ இன்னும் நியாயமான சம்பளத்திட்டமொன்றில்லை. மலையகத்தின் தொழிற்சங்கங்கள் தோட்டக் கம்பெனிகளுடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. அவ்வொப்பந்தத்தில் காலத்திற்கு காலம் நியாயமான சம்பள உயர்வை உறுதி செய்வதற்கான ஏற்பாடு இல்லை. இன்றும் தோட்டத்துறையில் வேலைவாய்ப்புகளும் இல்லை. இன்றும் தோட்டத்துறையில் வேலைவாய்ப்புகளும் இல்லை. பெருந்தோட்டத் தொழிற்துறை இன்றும் லாபம் ஈட்டித்தரும் துறையாக இருக்கிறது. தொழிலாளர்களின் வாழ்நிலை மிகவும் தாழ்ந்ததாகவே இருக்கிறது.

இந் நிலையில்தான் மலையக அரசியல் வாதிகள் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருப்பதால் தான் மலையகம் அபிவிருத்தியடைந்துள்ளதாகக் கூறுகின்றனர். எத்தகைய அபிவிருத்திகள் எனக் கூறுவார்களா?

அரசாங்கத்துடன் இணைந்து வாக்கு கேட்கும் போது ஒரேயடியாக அரசாங்கத்தை புகழ்வார்கள். எதிர்க்கட்சியுடன் இணைந்து வாக்கு கேட்கும்போதும் அதனை ஒரேயடியாகப் புகழ்வார்கள். மக்கள் கேள்வி எழுப்பினால் நிபந்தனையுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதாகவும் கூறுவார்கள். இவையெல்லாம் மக்களின் வாக்குகளை பேரினவாத கட்சிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான பம்மாத்து விளையாட்டுகளாகும். இந்தத் தேர்தலில் தத்தமது சொந்த தேர்தல் சின்னங்களைக் கைவிட்டு யானையிலும் வெற்றிலையிலும் நிற்கும் நிலைக்கும் தாழ்ந்து போய்விட்டனர். இது பேரினவாதத்திற்கு அடிபணிந்த செயலே ஆகும்.

இந்த பம்மாத்து விளையாட்டுக்களை அம்பலப்படுத்தி சரியான அரசியலை மக்களிடம் பிரசாரப்படுதவும் மக்களை அணிதிரட்டி மக்களின் பலத்தை பெற்றுக் கொள்ளவும் இந்த தேர்தலை சந்தர்ப்பமாகக் கொண்டு மாற்று அரசியலை பலப்படுத்தவும் நாம் முயற்சிப்போம். தேர்தலையும் தேர்தல் வெற்றிகளையும் கூட நாம் வித்தியாசமாகவே கொள்கிறோம். வலப்பனை பிரதேசசபையில் எமக்கு இருக்கும் பிரதிநிதித்துவத்தை கொண்டு நாம் செய்துவரும் சேவையும், அரசியலும் மக்கள் நலனை மேலாகக் கொண்டதாகும். அச்சேவையும் அரசியலும் தொடரவும் பலம் பெறவும் மாகாணசபையிலும் மக்களின் வாக்குகளை பெற்று வெற்றி பெறுவோம். எமது வெற்றி மக்களின் அரசியல் விழிப்புணர்விலும் ஐக்கியத்திலுமே தங்கயுள்ளது. பணம் பதவி அதஸ்து போன்ற குறுக்கு வழிகளில் அல்ல. மலையக மக்கள் குறிப்பாக இளம் தலை முறையினர் சிந்தித்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம் என்றும் கூறினார்.

# மலையக மக்களின் விடுதலைக்காக உழைப்பவர்களுக்கு வாக்களியுங்கள்!

மலையக மக்களின் உண்மையான விடுதலைக்காக உழைப்பவர்களுக்கே இம்முறை மக்கள் வாக்களிக்க வேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலை தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு மலையக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய சகல அம்சங்களிலும் சமவுரிமை என்பவற்றை வலிறுத்தி மத்திய மாகாணத் தேர்தலில் போட்டியிடும் புதிய- ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான இ. தம்பையா அவர்களை ஆதரித்து சூரியகாந்தியில் நடந்த தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதேச சபை உறுப்பினர் ச. பன்னீர்செல்வம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

கட்சியின் உறுப்பினர்களும் ஆசிரியர்களுமான வெ. மகேந்திரன் இரா. ஜெயசீலன், சு. சுகேசனன், ச. மோகன்ராஜ் கிருஷ்ணபிரியன் ஆகியோர் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மட்டுமன்றி இன்னும் பல நூற்றுக்கணக்கானோர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஆக இவர்களின் விடுதலைக்காக பதவிகளில் இருந்த எந்த தலைவரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அக்கைய நடவடிக்கைகளை கண்டிக்கக் கூட முன்வரவில்லை. மலையக மக்கள் மிகத் துன்பமான வாழ்க்கையை அனுபவித்து வருகின்றார்கள் என்று தெரிந்தும் சம்பளவுயர்வு குறித்து இவர்கள் வாயே திறக்கவில்லை மேல் கொத்மலை நீர்த் தேக்கத்திட்டம் மலையக மக்களுக்கும் இயற்கைக்கும் எதிரானதெனத் தெரிந்தும் அத்திட்டத்தை ஆதரித்து நிற்பதுடன் அங்கு சீமெந்திலும் கல்லிலும் மணலிலும் கொமிஸன் வாங்கி சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். மலையக மக்களுக்கு இன்று வரை விலாசம் இல்லாத நிலையே தொடர்கிறது. மக்களின் வாழ்க்கை எவ்வித முன்னேற்றமுமன்றி பாதாளத்திலேயே இருக்கிறது. ஆகவே பதவியில் இருந்த போது எதுவித அக்கறையும் காட்டாதவர்கள் தேர்தல் காலங்களில் பெரும் வாய்ச் சவாடல் செய்கிறார்கள். மலையக இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பற்றி அமைச்சரவையில் குரல் எழுப்ப முடியாதவர்கள் மேடைகளில் ஏறி வாக்கு கேட்கிறார்கள். மேலும் இன்றைய அரசாங்கம் போலவே ஐக்கிய தேசிய கட்சியும் இன்றைய யுத்தத்தை ஆதரித்து நிற்பதுடன் மலையக மக்களின் சம்பள உயர்வு குறித்து குரல் எழுப்பாது கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மக்களை மேலும் வறுமையில் தள்ளிவிட்டுள்ளது. எனவே படுமோசமான யுத்தச் சூழ்நிலையில் இவ்விரு பெருங்கட்சிகளுடன் பட்டியலில் போட்டியிடுகின்றவர்கள் மக்களை காட்டிக் கொடுக்கின்றவர்கள் என்பதை மக்கள் புரிந்துக கொள்ள வேண்டும்.

ஆதலால் மலையக மக்கள் இத்தகைய ஏமாற்றுக்காரர்களை இத் தேர்தலில் நிராகரிக்க வேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் சம்பளவுயர்வு உட்பட மக்களின் விடுதலைக்காகவும் போராடுகின்ற உண்மையான மக்கள் விசுவாசிகளுக்கு வாக்களிக்காது விட்டால் மீண்டும் மக்களுக்காக பேசவும் போராடவும் கூடியவர்கள் அன்றி ஏமாற்றுப் பேர்வழிகளே வெற்றி பெற வாய்ப்பு ஏற்பட்டு விடும். இம் முறைத் தேர்தலில் இதுவரைப் போராடிவந்த "கேத்தல்" சின்னத்தில் போட்டி யிடும் புதிய- ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ. தம்பையா அவர்கள் தலைமையிலான சுயேட்சை குழு விற்கு (4) வாக்களித்து வெற்றிபெற வைப்பது மக்களின் தலையாகக் கடமையாகும். இக் கூட்டத்தில் தோழர்கள் விஜி. ஏகாந்தராஜ் உட்பட வேட்பாளர் குட்டிமணியும் உரை நிகழ்த்தினர்.

## இந்த இரவு

ஒய்வெடுக்கும் ஓரங்கள்
அசந்து தூங்கும் வீதி
நிலவோடு இரவுக்கு
முதலிரவு
ஓய்ந்த மழைக்குப் பின்
உறையும் குளிர் ∴ பனி
ஒற்றையில் நானும்
என் கால்களும்
தூரத்தில் நாய்கள்
குரைத்துக் குதறும் சப்தம்
குழந்தையின் அழுகுரல்
வீதித்தடையில்லாமலே நிற்கும்
என் கால்கள்
தாவிச் செல்கிறது பார்வை
வாரச் சந்தை
முடிந்த நாள் அன்று.

நிலவோடு சேர்ந்து - உணவுக்காய்
கழிவுப் பொருட்கள்
சேகரிக்கும்
சிறுவரும் தாயும்
வயிற்றுப் பிழைப்புக்காய்
உழைத்து விட்டு
போதை ஏற்றி -
வீடு திரும்பளூ
கூடும் கூலியாட்கள்.

பட்டினி கிடந்தே
பசியை வெல்லும்
ஏழைக் குடிசைகள்
ஒழுகிய கூரைகள்
ஓய்வெடுக்கும் வேளை
பசியோடு லந்தர் ஒளியில்
புத்தகம் புரட்டும்
ஏழை மகன்.

எதிர்பார்ப்புக்களை
நெஞ்சிலே சுமந்தபடி
ஆழ்ந்த சிந்தையில்
ஏழைத்தாய்.

உடுதுணியோடு
கப்பலேறும் வடக்கு மக்கள்
உணவுக்குத் தவிக்கும்
வன்னி மக்கள்
பாலுக்கு ஏங்கும்
(பாசத்துக்கு ஏங்கும்)
தாயிழந்த சிசு -
மௌனம் காக்கும்
மக்கள்
மூக்கைப் பிளக்கும்
பிண நாற்றம்

அடுத்த நாள் பற்றி
கணக்கில் கொள்ளாமல்
உறங்கும் - கொழுத்த
கொள்ளைக்காரர்(கள்)


இன்றைய
அடாவடிகளை முடித்துக் கொண்ட
சோதனைச் சாவடி
தூக்கி வைத்திருந்த
துப்பாக்கியை
இறக்கி வைக்கும்
படைவீரர் - நாளை
மக்களை ஏமாற்ற
திட்டம் தீட்டும்
அரசியல்வாதி
உலாவித்திரியும்
வெள்ளை வேன்.

மக்களை குறிவைக்கும்
யுத்த விமானம்
உழைப்பை திருட
திட்டம் தீட்டும்
உலக வங்கியும்
கள்வனும்.

தொலைக்காட்சி தொடர்களுள்
தொலைந்த சனம்
புத்தகத்துள் புதைந்த
பல்கலைக்கழக மாணவனின்
புத்தாக்கம்.

தவழும் காற்று
நகரும் - என்
கால்கள்
நகர் நீங்கி
ஊர் சேர்கின்றன
நேரமோ
இரவு 11.45 மணி.

- இராகலை மோகன் -



கொழும்பில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் 01-01-09 அன்று இடம் பெற்ற கியூபா தேசிய தின நிகழ்வில் தோழர்கள் இ.தம்பையா, சோ. தேவராஜா, வசந்த திஸாநயக்க, இலங்கைக்கான கியூபா தூதுவர் திருமதி. நிர்சியா கஸ்ரோ குவேரா உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தலைமைகள் வெற்றி பெற்று எதைக் கிழிக்கப்போகிறார்கள்

## மலையக மக்கள் மத்தியில் விசனம்

மத்திய மாகாண சபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் ஆளும் ஐ.ம.சு. முன்னணியிலும் யானைச் சின்னத்தில் ஐ.தே. கட்சியிலும் மலையகத் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் போட்டியிடுகின்றன. இத்தலைவர்களும் போட்டியிடும் வேட்பாளர்களும் பேசும் பேச்சுக்களையும் விடும் அறிக்கைகளையும் பார்க்கும் போது சிரிப்பு ஒரு புறம் ஆத்திரம் மறுபுறமுமாக வருகின்றன. வாழ்க்கையில் ஒரு மனிதனுக்கு குறைந்த பட்ச நேர்மையாவது இருக்க வேண்டும். அது மலையகத் தொழிலாளர்கள் மக்களிடம் உண்டு. ஆனால் அதனை மலையகத்தின் தொழிற்சங்க அரசியல் தலைமைகளிடம் துளியளவும் காண முடியாது. அவ்வப்போது தமது சுயநலன் சுயலாபம் சுயசம்பாதிப்புக்காக எந்தக் குத்துக்கரணமும் அடிப்பதில் பின்னிற்காதவர்கள் தான் இந்த அரசியல் தொழிற்சங்கப் தலைமைகள். ஊழல், பணம் சம்பாதிப்பு, பகட்டு, வாய் கூசாது பொய்யுரைத்தல், ஏமாற்றுதல் இவர்களது இயல்பாகும். இது பற்றி அத்தகையோர் வெட்கப்படுவதில்லை. அவையாவும் மலைய கத்தின் தொழிற்சங்க அரசியல் வாதிகளுக்குரிய லட்சணங்கள் என்று கருதியே செயல்படுகிறார்கள். தொண்டமான் ஆறுமுகம், சந்திரசேகரன், சதாசிவம், அருள்சாமி, திகாம்பரம்,முத்து சிவலிங்கம், புத்திரசிகாமணி இப்போது போதாக்குறைக்கு மனோ கணேஷனும் தம்பிமாரும் எவ்வழியோ அவ்வாறே தொண்டர்களும் என்ற நிலை தான்.

இவர்கள் கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் மாகாண சபைகளில் உள்ளூராட்சி சபைகளின் எவற்றை வெட்டிக் கிழித்தார்கள். மலையக மக்களின் துன்ப துயர வாழ்வு மாற எதனைச் சாதித்தார்கள். சம்பள உயர்வு விடயத்தில் இவர்களால் எதையாவது செய்ய முடிந்ததா? வீடு நிலம் வேலைவாய்ப்பிற்காக எத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டனர். தத்தமக்கு வீடுகள் நிலங்கள் உறவினர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் தாராளமாகப் பெற்றுக் கொண்டனர். நன்கு உண்டு உடுத்து களித்து தம்மை வளப்படுத்தினர். ஆனால் மலையக மக்கள் உழைத்துழைத்து ஓடாகிப் போயினர். உரிய சம்பள உயர்வு இல்லை. இன்றும் பழைய லயன்களில் தான் வாழ்க்கை. கல்வி பண்பாட்டு நிலைகள் மோசமாகவே தொடர்கின்றன. தோட்ட நிலங்கள் சொந்தமில்லை. நவீன கொத்தடிமை வாழ்க்கை தான் மலையகத்தில் தொடர்கிறது.


இந்நிலையில் எந்தவொரு மலையகத்தின் தொழிற்சங்க அரசியல் தலைமையிடமும் மலையக மக்களின் விமோசனத்திற்கான கொள்கை வேலைத்திட்டமோ இல்லை. வாக்குகளை ஏமாற்றிக் கொள்ளையடித்து பதவிகள் பெறுவதிலேயே கவனமாக இருந்து வருகிறார்கள். இத்தகைய ஏமாற்றுக்கு தம்மைச் சுற்றி ஒவ்வொரு கூட்டத்தையும் வைத்திருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகள் கொடுக்கவும் மக்களின் அறியாமை வறுமையைப் பயன்படுத்தி கிள்ளித்தெளித்து மயக்கி வாக்குகள் பெறுவதிலுமே இத்தலைமைகள் முன்நிற்கின்றன.

இந் நிலை மாற வேண்டுமாகில் சமூகம் பற்றியும் அரசியல் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்கும் சக்திகள் அரங்கிற்கு வரவேண்டும். பாராளுமன்ற வாக்களிப்பு ஏமாற்றுக்கள் பற்றி மக்களுக்கு அறிவூட்ட வேண்டும். வாக்களிப்பது தமது வென்றெடுத்த உரிமை என நம்பினால் மலையக மக்கள் தமது உரிமைகளுக்காக போராடி வரும் நேர்மையான அரசியல் சக்திகளுக்கு வாக்களிக்க முடியும். புதிய- ஜனநாயக கட்சி கடந்த கால் நூற்றாண்டுக்கு மேல் மலையகத்தில் தொழிலாளி வர்க்க அரசியலை முன்னெடுத்து வரும் போராட்ட சக்தியாகும். வெறுமனே வாக்குச் சீட்டு அரசியல் செய்யும் கட்சியல்ல. அதனை நம்பி குறுக்கு வழிகளில் செல்லும் கட்சியும் அல்ல. மலையகத்தில் மக்களின் தொழிலாளர்களின் அடிப்படை மாற்றத்தை நோக்கி அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்களில் வெகுஜன மார்க்கத்தில் மக்களை அணிதிரட்டி வரும் கட்சியுமாகும்.

ஆதலால் மலையகத்தில் மக்கள் அரசியல் விழிப்புணர்வுடன் குறிப்பாக இளந்தலை முறையினர் சிந்தித்து வாக்களிப்பார்களானால் அதே போராட்ட அரசியலுக்கு பலம் சேர்ப்பதாகவே அமையும். மலையக இளைஞர் யுவதிகள் அரசியலில் தூர நோக்குடன் செயல்படுவதற்கு இத் தேர்தலில் புதிய ஜனநாயக கட்சியின் சுயேட்சைக் குழுவிற்கு (4) கேத்தல் சின்னத்தில் வாக்களித்து மாற்று அரசியல் தலைமை பலம் பெற வழி வகுக்க வேண்டும்.

# கறுப்பு ஜனாதிபதி மீது மயக்கம் வேண்டாம்

## அவர் ஏகாதிபத்திய முன்னெடுப்பாளனே!



2009 ஜனவரி 20ம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் 44வது ஜனாதிபதியாக பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் குடியேறியுள்ளார். அவர் ஒரு கலப்பினத் தாய் தந்தையருக்குப் பிறந்து கறுப்பு இன அடையாளத்துடன் வளர்ந்து செனட்டராகி ஆளுனராகி இப்பொழுது ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதியாக வந்துள்ளார். அமெரிக்காவின் வரலாற்றையும் அதன் அரசியலமைப்பையும் முதலாளித்துவ ஏகாதிபத்திய வளர்ச்சியையும் காணமுடியாதவர்கள் ஒபாமாவின் பதவி ஏற்பை ஆகா ஓகோ என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

இத்தகையோர் எதிர்பார்ப்பது போன்று பெரிய அளவில் இடம் பெறுவதற்கு எதுவுமில்லை. அமெரிக்காவின் அரசியலமைப்பும் அதன் கீழான நிறுவனங்களும் முதலாளித்துவத்தையும் அதன் உச்ச நிலையான ஏகாதிபத்தியத்தையும் நிலை நிறுத்தும் அடிப்புடைகளைக் கொண்டு நடாத்தப்படுவதாகும். மிகப் பெரிய முதலாளித்துவ நிறுவனங்களும் அவற்றின் ஊடகங்களும் அவற்றின் சொந்தக்காரர்களும் தான் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள். இவர்கள் குடியரசுக் கட்சியாகவும் ஜனநாயகக் கட்சியாகவும் செயல்பட்டு மாறிமாறி ஆட்சியதிகாரத்தின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து வருகிறார்கள். பல கட்சி ஜனநாயகம் என்ற பெயரில் இவ்விரு கட்சிகளுமே முதலாளித்துவ ஜனநாயக சர்வாதிகாரம் செய்து வருகின்றன. இதன் உச்ச நிர்வாகப் பதவி தான் ஜனாதிபதிப் பதவியாகும். அப்பதவிக்கு கட்டுப்பாடுகள் அனுமதிகள் இருப்பினும் சில சந்தர்ப்பங்களின் தனித்த முடிவுகளை எடுக்க சந்தர்ப்பம் உண்டு. அத்தகைய சூழலில் ஜனாதிபதியை சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது விடின் அதற்கு அப்பால் ஆளையே இல்லாது செய்து விடும் "ஜனநாயகப் பண்பும்" ஐக்கிய அமெரிக்காவில் உண்டு. அதற்குரிய முதலாளிகளின் முதலாளித்துவத்தின் ஏகாதிபத்தியத்தின் நிறுவனமான மத்திய உளவு நிறுவனம் (CIA) என்பது அமெரிக்காவில் சக்தி மிக்கதாக இயங்கி வருகின்றது. இந்த சீ.ஐ.ஏ என்பது ஏற்கனவே சில ஜனாதிபதிகளை களையெடுக்கவும் பலியெடுக்கவும் செயலாற்றியது தொடர் கதைகள்.

இத்தகைய பின்னணியில் நோக்கும் போது ஒபாமா என்ற கறுப்பின ஜனாதிபதி தனது எண்ணப்படி முடிவெடுக்க செயலாற்ற அனுமதிக்கப்பட மாட்டார் என்பது உறுதியானது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கும் போக்கும் உலக மேலாதிக்கம் தான். உலகப் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுக் கூறுகளை எல்லாம் தனது வல்லாதிக்கப் பிடியின் குடைக்குக் கீழ் கொண்டு வருவது தான். இதனை உலக மக்கள் நன்கு அறிவர். அமெரிக்க மக்களும் இப்போது அடையாளம் காண ஆரம்பித்துவிட்டனர். பொருளாதார நெருக்கடிகளும் ஈராக் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு யுத்தங்களும் அமெரிக்க மக்களைச் சிந்திக்க வைத்துள்ளன. கொடியவனான ஜோர்ஜ் புஷ்சின் அகங்காரத்தாலும் அவரது கொள்கை வகுப்பாளர்களாலும் வெறுப்புற்ற அமெரிக்க மக்களுக்கு ஒரு வகை மாற்றம் தேவைப்பட்டது. அதனை ஜனநாயக கட்சியின் பிரதிநிதியான பராக் ஒபாமா தனதாக்கி "மாற்றம் தேவை" என்பதைத் தேர்தல் முழக்க வாக்குறுதியாக்கிக் கொண்டார். ஆனால் எத்தகைய மாற்றம் என்பது தான் பிரச்சினைக்குரியது.

ஈராக்கிலிருந்து படிப்படியாக ஆக்கிரமிப்பு இராணுவத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளும் அதே வேளை ஆப்கானிஸ்தானில் துருப்புகளை அதிகரிக்க இருப்பதாக ஒபாமாவே கூறி உள்ளார். பாலஸ்தீனப் பிரச்சினையில் யார் பக்கம் நிற்கப் போகிறார். சியோனிச இஸ்ரேலிய ஆளும் வர்க்கம் பக்கமா அல்லது மண்ணையும் வாழ்வையும் இழந்து நிற்கும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவா என்பதை அறிய அதிக நாட்கள் தேவை இல்லை.

உலகின் பழைமைவாதிகள் முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகள் நமது நாட்டின் தமிழ் மேட்டுக்குடி வந்த உயர்வர்க்க சக்திகள் ஒபாமாவைத் தமது புதிய உலக ரட்சகராகவும் மேய்ப்பராகவும் ஏற்றிப் போற்றி ஓடோடி வருமாறு மன்றாட்டக் கடிதம் எழுதுவது முரண் நகை அல்ல. வர்க்க நிலை சார்ந்த ஏகாதிபத்திய விசுவாசமாகும்.

இதுவரையான ஒபாமாவின் பேச்சுக்களும் செயற்பாடுகளும் அல்ல. இனிவரப்போகும் முடிவுகளும் செயற்பாடுகளும் தான் எதிர் காலத்தை நிர்ணயிக்கப்போகிறது. ஒவ்வொரு விடயத்திலும் எத்தகைய நடைமுறைகளை ஒபாமா என்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவர் முன்னெடுக்கப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்க விரும்புவோர் பார்க்கட்டும். அதே வேளை அரசியல் தெளிவு மிக்கோருக்கு ஒபாமா விடயத்தில் மாயையோ மயக்கமோ இருக்க முடியாது.




# கூட்டு ஒப்பந்தமும் சம்பள உயர்வும்

தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் எல்லாம் முடிந்து விட்டது. பொங்கல் கொண்டாட சம்பளம் போதுமானதாக இருக்கவில்லை என்று சொன்னால் தோட்டத் தொழிலாளர்கள் எப்போதுமே இப்படித்தான் சொல்வார்கள். என்றைக்குத்தான் சம்பளம் போதுமானதாக இருந்தது என்றார்கள். இப்படிக் கூறுவோர் உள்ளனர்.

அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் சம்பளம் போதுமானது என்று கூறமுடியாவிட்டாலும் அவர்களுக்கு அவ்வப்போது சம்பள உயர்வுகள் வழங்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் ஏன் சம்பள உயர்வு வழங்கப்படுவதில்லை என்று கேட்டால் தோட்டத் தொழிற் சங்கங்களுக்கும் தோட்டக் கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கு மாறாக சம்பள உயர்வு வழங்கப்பட முடியாது என்ற வசதியான பதில் கூறப்படுவதுண்டு. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே சம்பள உயர்வு வழங்குவது பற்றி தோட்டத் தொழிற்சங்கங்களும், கம்பெனிகளும் பேச்சுவார்த்தை நடாத்தி முடிவுக்கு வரவேண்டும் என்பது கூட்டு ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டை வைத்துக் கொண்டு தோட்டக் கம்பெனிகள் இரண்டு வருடங்களுக்கு முன்பு சம்பள உயர்வு பற்றி நினைப்பதே இல்லை. இரண்டு வருடங்கள் முடியும்போது சம்பள உயர்வு வழங்குவது பற்றிய பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வருவதில்லை. தேயிலைக்கும் றப்பருக்கும் நல்ல விலை கிடைப்பதில்லை. பெருந்தோட்டத்துறை நட்டத்தில் இயங்குகிறது என்ற வாய்ப்பாட்டையே திரும்பத்திரும்ப கம்பெனிகள் பாடுவதுண்டு.

தோட்டத் தொழிற்சங்கத் தலைமைகளுக்கு தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதென்பது பெரிய சவாலான விடயமாகவே இருந்தே வருகிறது. ஒவ்வொரு முறையும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தொழிற்சங்கங்களான இ.தொ.கா., இ.தே.தோ.தொ. சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பன பெரியதொரு சம்பள உயர்வை வாங்கிக் கொடுக்கப் போவதாக கூறினாலும் இறுதியில் அற்ப சொற்ப சம்பள உயர்விற்காக ஒத்துக் கொள்வதுண்டு. அதை யாரும் விமர்ச்சித்தால் விமர்சிப்பவர்களே முடிந்தால் சம்பள உயர்வை வாங்கிக் கொடுக்கட்டும் என்று சவால் விடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளன.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் பெரியளவில் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறுவதும் எந்தவொரு அடிப்படையும் இல்லாது கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகக் கூறுவதும் அதனை கிழித்தெறியப்போவதாகவும் வீரவசனங்கள் பேசுவதுண்டு. அற்ப சொற்ப சம்பளத்திற்காகக் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டப் பிறகு அச் சங்கங்கள் மௌனமாகிவிடுவன.

மத்திய மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் இ.தொ.கா. வை தவிர வேறெந்த சங்கத்திற்கும் சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க முடியாதென இ.தொ.கா. தலைவர்கள் வாய்ச்சவடால் விடுகின்றனர். நேற்றுவரை ஐ.ம.சு.மு. அரசாங்கத்துடன் இருந்து மத்திய மாகாண தமிழ்க்கல்வி அமைச்சராக இருந்த எஸ். அருள்சாமி மீண்டும் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டால் கூட்டு ஒப்பந்தத்தை ஒரு கை பார்க்கப்போவதாக தெரிவித்துள்ளார். ஐ.தே. கட்சியின் பட்டியலில் போட்டியிடும் சதாசிவமும், திகாம்பரமும் கூட்டுஒப்பந்தத்தை கிழித்தெறியப்போவதாகச் சூளுரைக்கின்றனர். கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு அடிப்படை இல்லையென்று கூறப்பட்ட போதும் அவர்கள் இருவரும் நீதிமன்றத்திற்கு சென்றனர். பிரசாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட அவ்வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்பதை வெளியில் சொல்ல அவர்களுக்கு வெட்கம். அருள்சாமியும் கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகச் சொல்லித்திரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மனோ கணேஷனும் கூட்டு ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டுமென்றே கூறிவந்தார். அருள்சாமியிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி யாதெனில் அவர் போட்டியிடும் பட்டியலில் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இ.தொ.கா. இருக்கும்போது அவர் யாரிடம் கூட்டு ஒப்பந்தத்தை ஒரு கை பார்க்கப்போகிறார். அதே போன்று சதாசிவம், திகாம்பரம், மனோகணேஷன் போன்றோரிடம் கேட்கப்படவேண்டிய கேள்வி யாதெனில் நீங்கள் போட்டியிடும் பட்டியலின் சொந்தக்காரக் கட்சியான ஐ.தே. கட்சியினுடைய சங்கமான இ.தே.தோ.தொ. சங்கமும் கூட்டு ஒப்பந்தத்தில் பிரதானமாக கையெழுத்திட்டு வரும்போது யாரிடம் போய் கூட்டு ஒப்பந்தம் பற்றி முறை யிடப் போகின்றனர் என்பதாகும். சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்காமல் தோட்டத் தொழிலாளர்களிடம் வாக்கு கேட்டு போக முடியாத நிலையில் ஒவ்வொருவரும் சம்பள உயர்வு பற்றியும் கூட்டு ஒப்பந்தம் பற்றியும் ஒவ்வொரு விதமாகப் பிதற்றுகின்றனர். இவையெல்லாம் வாக்கு கேட்பதற்கான பம்மாத்து வித்தைகள்.

உண்மையில் செய்யப்பட வேண்டியது யாதெனில் நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தத்திற்கு பதிலாக தொழிலாளர்களின் உரிமையை உறுதிசெய்யும் பலமான கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு அனைத்து தொழிற்சங்கங்களினதும் பங்களிப்பு பெறப்பட வேண்டும். இப்பொறுப்பை ஒரு சில தொழிற் சங்கங்களிடம் ஒப்படைக்க முடியாது. அவை கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை அவற்றின் ஏகபோகமாக்கிக் கொள்வதை அனுமதிக்க முடியாது.

அதற்கு மாகாணசபை தேர்தலில் அரசாங்கத்துடன் இருப்போருக்கோ எதிர்க்கட்சியுடன் இருப்போருக்கோ வாக்களித்து முடிசூடுவதை கைவிட வேண்டும். உண்மையாக, நேர்மையாக மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பக்கூடிய போராட்டங்களை முன்னெடுப்போரை பலப்படுத்த வேண்டும். அவர்களினூடாக பலமான தொழிற்சங்க இயக்கம் கட்டப்பட வேண்டும். பலமான தொழிற்சங்க இயக்கத்தின் மூலம் தொழிலாளர்களுக்கேற்ப கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்த முடியும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



அடுத்தடுத்து ஊடகவியலாளர்களும ஊடகங்களும் தாக்கப் படுவதனால் இலங்கையின் ஜனநாயகம் மரணப்படுக்கையில் கிடக்கிறது. அதற்கு உடன் சிகிச்சையளிக்க மக்களின் எழுச்சி என்ற அவசர சிகிச்சையும் மக்களின் ஐக்கியம் என்ற மருந்தும் அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகிறது.

'சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சிரேஷ்ட சட்டதரணியுமான லசந்த விக்கிரமதுங்க சனநடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் நிறைந்த காலி வீதியில் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு சிலதினங்களுக்கு முன்பு எம்.ரி.வி ஊடக நிறுவனம் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. லசந்த விக்கிரமதுங்கவோ, எம்.ரி.வி நிறுவனமோ முதலாளித்துவ

புதிய பூமி

சுற்று 16 ஜனவரி- பெப்ரவரி 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 119

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

ஜனநாயக சூழ்நிலைக்கேற்ப ஆளும் வர்க்க அரசியலுக்குரிய அளவிற்கான பணியை விட விரிவாக எதையும் செய்யவில்லை. அவராலும், அந்நிறுவனத்தாலும் இயங்க முடியவில்லையென்றால் முதலாளித்துவ வரையறுக்குள்ளும் இயங்கக் கூடியளவிற்கும்

அளவில் "எதிர்ப்பை" காட்டுகிறது. சில இடதுசாரி கட்சிகளும் ஐ.தே. கட்சியின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் எந்தவொரு தெளிவான நிலைப்பாடோ வேலைத்திட்டமோ தூரநோக்கோ இன்றி கலந்து கொள்கின்றன.

வடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள போது அதற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையிலும் மக்கள் ஈடுபடக் கூடாது என்ற பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கிறது.

இவற்றுக்கு மத்தியில் கவனிக்கப்படாமல் விடப்படுகின்ற அபாயம் இருக்கிறது. அதாவது நாட்டின் நிர்வாகத்துறை நீதித்துறையாலும் கூட கேள்விக்குட்படுத்த முடியாதவாறு ஏதேச்சாதிகாரமாக செயற்படுவதை அவதானிக்க தவறக் கூடாது. பெற்றோலின் விலையை குறைக்குமாறு உயர்நீதி மன்றம் விதித்த இடைக்கால உத்தரவை இலங்கையின் அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனியாக இயங்க வேண்டுமென உயர்நீதிமன்றம் பிறப்பித்த கட்டளை உடனே நடைமுறைப்படுத்தப்பட்டதும், சுனாமி புனரமைப்பு கட்டமைப்பை இரத்து செய்யும்படி பிறப்பிக்கப் பட்ட கட்டளை உடனே நடைமுறைப்படுத்தப் பட்டதும் கவனிக்கத் தக்கன.

எம்.ரி.வி நிறுவனம் மீதான தாக்குதலில் ஈடுபட்டவர்களை கண்டறிய வேண்டிய புலன் விசாரணையை திசைத்திருப்பும் நோக்கில் பொலிஸாரின் நடவடிக்கை அமைந்திருப்பதாக அவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் கூறியிருந்தார்.

பல சம்பவங்கள் பற்றி விசாரித்து அறிவதற்கு முன்பு பாதுகாப்புத் துறைகள் அச்சம்பவம் பற்றிய கருத்துக்களை தெரிவித்து விடுகின்றனர். இதுவும் விசாரணைகளை பாதிப்பதாகவே இருக்கும்.

முதலாளித்துவ அமைப்புகளில் பெரிதாக சொல்லப்படுகின்ற சட்டமும் ஒழுங்கும் இலங்கையில் குலைந்தே போயிருக்கிறது. சட்டவாட்சி என்பது கேள்விக் குறியாகியுள்ளது. அவசரகாலச்சட்டம் (சிலசில இடைவேளைகள் இருந்தபோதும்) கடந்த மூன்று தசாப்தங்களாக அமுலில் இருந்துவருகிறது.

சிவில் நிர்வாகத்திலும் பாதுகாப்புப் பிரிவு குறிப்பாக இராணுவத் தலையீடுகள் இருக்கின்றன. பொலிஸ் சேவையிலும் இராணுவமயமாக்கல் இடம் பெற்று வருவதாக சொல்லப்படுகிறது.

யுத்தச் சூழ் நிலையில் இதெல்லாம் சகஜமென்று எவ்வளவு நாட்களுக்கு சொல்லப்படப் போகிறது. எவ்வளவு நாட்களுக்குத் தான் ஜனநாயகமில்லாத மனித உரிமைகள் இல்லாத சூழ்நிலையில் இருக்க முடியும். யுத்தம் முடிவிற்கு வருவதாயும் இல்லை. ஜனநாயக மறுப்பும் மனித உரிமைகள் மீறல்களும் முடிவிற்கு வருவதாயும் இல்லை.

மீண்டும் நாட்டில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீட்டெடுக்க சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத்தமிழ் மக்களினது ஏனைய சமூகத்தினதும் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் அவசியம்.

# கேள்விக்கு உட்படுத்தப்படும் சட்டத்தின் ஆட்சி

ஜனநாயகம் இல்லை என்பதே உண்மை.

இச் சூழலில் பிரபல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அவர்களுக்கிருந்த அச்சுறுத்தல்களே அவர்களின் வெளியேற்றத்திற்கு காரணமாகும்.

புத்த நிலைவரங்கள் பற்றி செய்தி வெளியிடும் ஊடகவியலாளர்கள் அனைவரும் 'ஊடகப் புலிகள்' என்று அழைக்கப்பட்டு துரோகிகளாக காட்டப்படுகின்றனர். அரசாங்க இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களாகக் காட்டப்படுகின்றனர். அத்துடன் கருத்துக்களை துணிந்து வெளியிட முடியாத அளவிற்கு மக்கள் அச்சத்தில் வாழ்கின்றனர்.

கடத்தல்கள், கைதுகள், காணாமல் போதல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவற்றை தட்டிக்கேட்கக் கூடிய அளவிற்கு பலமான சிவில் சமூகம் இல்லை. சிவில் சமூகம் என்று தம்மை தாமே அழைத்துக் கொள்ளும் என்.ஜி ஓக்களும் மௌனமாக இருக்கின்றன. மௌனமாக்கப்பட்டுள்ளன.

தூரநோக்கில்லாத அரசாங்கத்தின் பிரதிபிம்பமாக இருக்கும் ஐ.தே. கட்சி அடுத்தமுறை தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான

சில மாதங்களுக்கு முன்பு வெலியம்முன்ன என்ற மனித உரிமை வழக்குகளில் ஆஜராகும் சட்டத்தரணியின் வீட்டிற்கு கைக்குண்டு வீசப்பட்டது. சட்டத்தரணிகள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகள் யாவும் 1988- 1994 வரையான காலகட்டத்தினை நினைவு படுத்துகின்றன. அக்காலத்தில் தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வீட்டிற்கும் குண்டு வீசப்பட்டது. 17 வருட ஐ.தே.கட்சியில் இதேபோன்று நடவடிக்கைகள் இடம் பெற்றன. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இயக்கங்கங்களை முன்னெடுத்த ஒருவரின் தலைமையில் ஆட்சி நடக்கின்ற இக்காலகட்டத்தில் மீண்டும் அதைவிட மோசமான விடயங்களை அவதானிக்க முடிகிறது.

ஐ.தே.கட்சி காலத்தில் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் அன்றைய ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மீது பலமான எதிர்ப்புணர்வு இருந்தது. இன்று அவ்வாறான எதிர்ப்புணர்வு பெரும் பான்மை சிங்கள மக்களிடம் ஏற்படாமல் 'அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய பிரசாரங்கள்' தடுக்கின்றன.

"நாட்டை பிரிவினைவாதிகளிடமிருந்து" காப்பாற்றுவதற்கான நட

# இந்திய மத்திய அரசும் இலங்கைத் தமிழர்களும்

இந்திய மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தனது பிராந்திய நலனை முதன்மைப்படுத்திய கொள்கையை எப்பொழுதும் முதன்மைப்படுத்தியே வந்திருக்கிறது. தென் ஆசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி முழு ஆசியாவிலும் தனது ஆதிக்கத்தை விரிவாக்கும் நோக்குடனேயே அதன் கொள்கை வகுப்பு இருந்து வருகிறது. குறிப்பாக தென்னாசிய நாடுகள் ஒவ்வொன்றும் தனது பெரியண்ணன் பாத்திரத்தை ஏற்று நடக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறது. அதற்கு மறுத்தால் ஏதாவது ஒரு காரணம் காட்டி மிரட்டல் தாக்குதல் என இறங்கும். இதற்கான உதாரணத்தை இலங்கை கடந்த காலத்தில் கண்டிருக்கிறது. இலங்கையின் இந்து சமுத்திர அமைவிடம் இப்பிராந்தியத்திற்கு முக்கியத்துவம் வழங்குகிறது. உலக மேலாதிக்க அமெரிக்காவிற்கும்- மேற்குலக்கும் இந்தியாவிற்கும் இலங்கை தேவைப்படும் தீவு நாடாகும். ஜே.ஆர். அமெரிக்க விசுவாசம் காரணமாக இத் தீவை அமெரிக்காவிற்குத் தரை வார்க்க முயன்ற வேளையிலேயே இந்தியாவும் இந்திராவும் இலங்கை விடயத்தில் அக்கறைப்பட்டனர். அதற்குக் கிடைத்த சந்தர்ப்பமே 1983ன் தமிழர்கள் மீது கட்டவீழ்த்து விடப்பட்ட இனவன்முறையாகும். அதன் பேரில் இந்தியா இலங்கையில் நுளைந்து கொண்டது. இந்தியா அதனை ஒரு கருவியாகப் பயன் படுத்த ஆரம்பித்தது.

இந்தியா ஏன் அக்கறைப்படுகிறது என்பதை ஆராயவோ தூர நோக்கில் அதனை எடைபோடவோ முடியாத பழைமைவாத பிற் போக்கு தமிழர் தேசியவாதத் தலைமை குறுந் தேசியவாத நிலைப் பாட்டில் இந்தியாவை விசுவாசத்துடன் நம்பியது. 1971ல் இந்திராவின் தலைமையில் இந்திய ராணுவம் பங்காளதேசத்தை பாகிஸ்தானில் இருந்து பிரித்தெடுத்து தனிநாடாக்கியது போன்று இலங்கைத் தமிழர்களுக்கு தமிழீழத்தைப் பிரித்துத் தரும் என நம்பப் பட்டது. பாவம், ஏகப் பெரும்பான்மையான தமிழ் மக்களைத் தமிழர் கூட்டணியினர் நம்பவும் வைத்தனர். அவ்வேளை உண்மைகளையும் யதார்த்த நிலைமைகளையும் எடுத்துக் கூறி தமிழீழம் சாத்தியமற்றது என்பதை உறுதிபடக் கூறிய மாக்சிச லெனினிச வாதிகளின் தர்க்க ரீதியான கொள்கைகளை இத் தமிழ்த் தேசிய வாதிகள் எள்ளி நகையாடினர். மாக்சிச சோஷலிச நிலைப்பாடுகளைத் தூற்றி இந்திய விசுவாசத்தை உச்சமாக வெளிப்படுத்தினர். இன்னொரு தரப்பினர் இஸ்ரேலை உருவாக்கிய மேற்குலக அமெரிக்க விசுவாசத்தில் மூழ்கினர்.

இச் சூழலில் இந்தியா தனது பிடியை முழு இலங்கை மீதும் கொண்டிருக்கக் கூடிய நிலைப்பாட்டை வலுப்படுத்தி வந்தது. அதற்கு இன்றைய மகிந்த சிந்தனை அரசு வாய்ப்பாக அமைந்தது. இந்தியாவின் பொருளாதார ஊடுருடுவல் வேகமாக இலங்கைக்குள் பாய்ந்து வந்துள்ளது. விரைவில் இலங்கை இந்தியாவின் வலுவான ஒரு கொல்னி நாடு என்ற இடத்தை எடுத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. இதற்குத் தடையாக இருக்கம் எதனையும் இந்தியா சகித்து கொள்ள மாட்டாது. இந்த இடத்தில் இலங்கையின் பேரினவாத அரசினதும் இந்திய மேலாதிக்க அரசினதும் புள்ளி ஒன்றாகவே உள்ளது. இதன் செயற்பாட்டை கடந்த மூன்று வருட மகிந்த சிந்தனை 'அரசின் நடவடிக்கைகளில் இருந்து கண்டு கொள்ள முடியும். இலங்கை இனப் பிரச்சினையில் அமெரிக்க மேற்குலக யப்பானியச் செல்வாக்கையும் தலையீட்டையும் இந்தியா அறவே விரும்பவில்லை. இது இப்பிராந்திய ஆதிக்கப் போட்டியின் உள்ளர்ந்த சாரம்சமாகும். புலிகள் இயக்கத்தின் சர்வ தேச நேச சக்திகள் அமெரிக்க மேற்குலகில் கால் பதித்துள்ளதை

இந்தியா ஏற்கனவே விளங்கிக் கொண்டது. நோர்வேயின் அனுசரணை முயற்சியின் உள்ளார்ந்தம் எத்தகையது. அதில் ரணில் விக்கிரமசிங்காவின் பாத்திரம் யாவற்றையும் விளங்கிக் கொண்ட இந்தியா தனது காய்களை நகர்த்த ஆரம்பித்தது. அதற்கு மகிந்த சிந்தனை அரசு தகுந்த இடத்தை வழங்கியது. இந்திய மேலாதிக்க இராஜதந்திரம் பொருளாதார அரசியல் ராணுவ விடயங்களின் ஊடாக செயலாற்றத் தொடங்கியது. நோர்வே அனுசரணை அரங்கில் இருந்து அகற்றப்பட்டது. அதன் தொடர்ச்சி ராணுவ அரசியல் விவகார நெருக்கங்களின் ஊடாக வன்னி மீதான தாக்குதல்களும் வெற்றிகளும் புலிகள் இயக்கத் தடையாகவும் விரிவு பெற்றுக் கொண்டது.

இந் நிலையில் அமெரிக்க மேற்குலகம் இந்தியாவுடன் நட்பு வலுவடைந்த நிலையில் இலங்கையில் எதுவும் செய்ய முடியாமல் திண்டாட்ட மௌனம் காத்து வருகிறது. இலங்கை அரசின் பயங்கரவாத எதிர்ப்பு யுத்தம் என்ற முழக்கத்தின் முன் அமெரிக்க மேற்குலகம் அடக்கி வாசித்து வருகிறது. ஏனெனில் ஏற்கனவே புலிகள்

வெகுஜனன்

இயக்கத்தை அவர்கள் தடைசெய்து விட்டனர். இறுதியாக இலங்கையும் தடைசெய்து கொண்டது.

இந் நிலையில் தமிழ் நாட்டு ஆதரவு மட்டுமே தமிழர் தரப்புக்கு ஆறுதல் தரும் குரலாக ஒலித்து வருகிறது. ஆனால் அந்தக் குரல் நேர்மையான ஒருமுகப்படுத்தப்பட்ட குரல் அல்ல என்பது தமிழ் நாட்டு குத்துக்கரண அரசியலைப் புரிந்து கொண்டவர்களுக்குத் தெரியும். இந்திய மத்திய அரசை மன்றாட முடியுமே தவிர வற்புறுத்தி காரியம் எதனையும் தமிழ் நாட்டுக் கட்சிகளால் சாதிக்க முடியாது. இதுவரை அவ்வாறு நடந்ததும் இல்லை. இனிமேலும் அவர்களால் நடக்கவும் முடியாது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்த மத்திய அரசு ஒருபோதும் முன்வர மாட்டாது. ஏனெனில் அதன் சைகை மீதே வன்னி யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயுத மற்றும் ராணுவ உதவிகள் வழங்கப் பட்டன. இத்தனைக்குப் பின்பு மத்திய அரசையும் மாநில அரசையும் தமிழர் தரப்பு கெஞ்சி நிற்பது சுயசார்புப் போராட்டக் கொள்கை அற்ற பலவீனத்தின் வெளிப்பாடாகும். அடித்தாலும் உதைத்தாலும் காறி உமிழ்ந்தாலும் நீங்களே எங்கள் எசமானர்கள் எனத் தமிழர் தரப்பினர் நடந்து கொள்வது "தன்மானத் தமிழினத்தை" இழிவு செய்ததாக அமையாதா? எவ்வாறாயினும் தமிழர் தரப்பிலிருந்து இத்தகைய எதிர்ப்பார்ப்பு நிலைப்பாட்டை மாற்ற முடியாது. அது அவர்களது பிற்போக்கு அரசியலில் ஊறி உறைந்து போன விடயமாகும். பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திக்க கூட்டமைப்பினர் எத்தனை தடவைகள் சென்று திரும்பினர். ஒரு ஐந்து நிமிடம் கூடச் சந்திக்க முடியவில்லை. கருணாநிதிக்கு வாக்குக் கொடுத்து பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவதாகக் கூறினாராம் சோனியா காந்தி. ஆனால் இங்கு வந்து தமது உள் விவகாரங்கள் பற்றிப் பேசித் திரும்பியவர் சிவசங்கர் மேனன். இவற்றின் உள்ளார்



ந்தங்களைப் புரிந்து கொள்ளாது கூட்டமைப் பினர் மீண்டும் மீண்டும் மன்றாட்டப் பாடல் பாடுவது இலங்கைத் தமிழர் களுக்கு அவமானமே அன்றி வேறில்லை. இத் தகைய போக்கிலிருந்து தமிழர் தலைமைகள் விடுபடமாட்டாது. ஆள் மாறி ஆள்மாறி இந்திய விசுவாசிகளாகத் தம்மை தகவமைத்துக் கொள் ளவே செய்வர். அந்தளவுக்கு இந்திய மேலாதிக்கம் சகல நிலைகளின் ஊடாகவும் ஊடுருவி நிற்கின்றது.

இந் நிலைக்கு எதிராகத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து நேர்மையும் தூரநோக்கும் கொண்ட அரசியல் சக்திகள் எழ வேண்டும். கடந்த காலப் பட்டறிவுகள் படிக்கப்பட வேண்டும். தூரநோக்கில் சுய நிர்ணய உரிமையை ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் எவ்வாறு வென்றெடுப்பது என்பது பற்றியும் அதற்கான கொள்கை கோட்பாடு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் தெளிவான முடிவுகளுக்கு வரவேண்டும். நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பது தெளிவுடன் வகுக்கப்பட வேண்டும். தேசிய இனங்களுக்கான சுயாட்சி, சுயாட்சி உள்ளமைப்புகள் அரசியல் தீர்வாக உருவாக்கப்படுவதன் மூலம் ஐக்கியமும் பலமும் சுபீட்சமும் கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை தெற்கின் சாதாரண சிங்கள மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். எந்தவொரு போராட்டமும் வெறுமனே பலவான்கள் நவீன ஆயுதங்கள் மூலம் மட்டும் வெற்றி பெறமாட்டாது. மக்களின் போராட்டமாக அமைய வேண்டும். அவர்களது சொந்தத் தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துப் அவர்களே போராட்டத்தின் நாயகர்களாக மாற வேண்டும். அதை விடுத்து அவர்களுக்காக ஒரு சிலர் எவ்வளவு வீரர்களாக இருந்தாலும் போராடிவெற்றி பெற முடியாது. இது தான் வரலாறு கற்பித்துத் தரும் பாடமாகும். □மக்களே மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி□ என்பது மறக்கப்பட முடியாத வரலாறுப் பாடமாக அமைய வேண்டும். உண்மையான மக்கள் போராட்டத்தில் மக்கள் ஒரு போதும் தோல்வியடைவதில்லை. இறுதி வெற்றி அவர்களுக்குரியதாகவே இருக்கும். அதற்குரிய தெளிவானதும் சரியானதுமான போராட்டப் பாதையில் பயணித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அதற்குரிய அடிப்படைகளைத் தேடிக் கொள்வது இன்றைய சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் தேவைப்படும் ஒன்றாகும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இராணுவ வெற்றி முழக்கத்தால் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது

## புதிய- ஜனநாயக கட்சி மத்திய குழு அறிக்கை

போரை ஊக்கிரமாக முன்னெடுத்து வடக்கு கிழக்கின் நகரங்களையும் கிராமங்களையும் உள்ளடக்கிய நிலப்பரப்பைக் கைப்பற்றி வெற்றி முழக்கமிடுவதன் மூலம் போருக்கு மூலகாரணமாக அமைந்த தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. போர் முனைப்பால் பெறப்படும் வெற்றகள் ஆட்சி அதிகாரத்தின் நீடிப்பிற்கும் எதிர்கால நிலைப்பிற்கும் உதவுமே தவிர நாட்டின் சுபீட்சத்திற்கும் வடக்கு கிழக்கின் ஜனநாயகம் சமாதானம் இயல்பு வாழ்க்கை என்பனவற்றுக்கு வழிகாட்டமாட்டாது. எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சுயாட்சித் தீர்வுப் பொதியை முன்வைப்பதும் போருக்குள் அகப்பட்டுள்ள நாலரை லட்சம் மக்களின் உயிருக்கும் வாழ்வுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதும் அரசாங்கத்தின் உடனடிக் கடமையாகும். இன்று வன்னியில் மக்கள் உணவு உடை இருப்பிடம் மருத்துவம் பெற முடியாத நிலையில் உயிர் வாழ்வுக்கு அஞ்சிய நிலையில் பரிதவித்து நிற்கிறார்கள். அவர்கள் தமிழ் மக்கள் என்பதுடன் இலங்கையின் பிரசைகள் ஆவர். ஆதலால் அவர்கள் எவ்வகையிலும் பழிவாங்கப்படக் கூடாது. அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பும் அடிப்படைத் தேவைகளும் ஆறுதலும் வழங்குவது அரசின் கடமையாகும் என்பதை எமது புதிய- ஜனநாயக கட்சி வற்புறுத்தி நிற்கிறது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழு வடக்கில் இடம் பெற்று வரும் போரும் மக்கள் எதிர் நோக்கும் அபாயங்களும் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையானது கடந்த நூற்றாண்டு முழுவதும் பேரினவாத ஒடுக்குமுறை நிலைப்பாட்டின் ஊடாக வளர்க்கப்பட்டு போராக மாற்றப்பட்டது. ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இரு தரப்புக் கட்சிகள் தமது நிலவுடைமை முதலாளித்துவ வர்க்க நலன்களுக்காகவும் ஏகாதிபத்திய அரவணைப்புக்காகவும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களின் ஜனநாயக வாழ்வுரிமைகளையும் இன மொழி பிரதேச அபிலாஷைகளையும் மறுத்து இன ஒடுக்குமுறையினை மேற் கொண்டு வந்தன. கடந்த முப்பது வருட கொடிய போருக்குப் பின்பு கூட இனப்பிரச்சினையின் அரசியல் யதார்த்தத்தை மறுத்து போர் மூலம் தீர்வு காணவே முயற்சிக்கப்படுகிறது. தற்போது அடைந்து வரும் ராணுவ வெற்றிகள் மூலம் இனப்பிரச்சினையின் அடிப்படைகளும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளும் அற்றுப் போய்விடும் என நம்பப்படுகின்றது. இத்தகைய தவறான அரசியல் மதிப்பீடுகள் தொடருமானால் இந்த நூற்றாண்டு முழுவதும் போருக்கான சூழல் மீண்டும் மீண்டும் நீடிக்கவே செய்யும். அதனால் பேரினவாதிகளும் முதலாளித்துவ அதிகார வர்க்கத்தினரும் அந்நிய சக்திகளும் லாபம் பெற முடியுமே தவிர சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து தேசிய இனங்களும் எவ்வகையிலும் மீட்சி பெறப் போவதில்லை. நாடும் மக்களும் மேன் மேலும் அழிவுகளையும் துயரங்களையும் சுமந்த செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடரவே செய்யும்.



எனவே நாட்டையும் மக்களையும் மீட்டெடுத்துச் செல்வதற்குரிய ஒரே வழி ராணுவமயப்படுத்தல் அல்ல. அதற்குப் பதிலாக தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் பாரம்பரிய பிரதேசத்தில் சுயாட்சியை வழங்கி தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களை சமத்துவம் ஜனநாயகம் சமாதானத்துடன் வாழ்வதற்கான அரசியல் தீர்வை முன்வைப்பதே இன்றைய அவசரமான முதன்மைப்பணியாகும் இதனை விடுத்து ராணுவ வெற்றிகளையும் ராணுவ வழி காட்டல்களையும் அரசாங்கம் பிரதானப்படுத்தி முன்னெடுப்பதானது சிங்கள மக்கள் உட்பட அனைத்து மக்களினதும் எதிர்காலத்திற்கு அபாயங்களைக் கொண்டு வரவே செய்யும். இன்று நாடும் மக்களும் எதிர் நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும் அன்றாட வாழ்க்கைத் துயரங்களுக்கும் யுத்தமும் ராணுவ வெற்றிகளும் சாட்டாகக் காட்டப்படுகிறது. ஆனால் இதனை நீண்ட காலத்திற்கு ஆளும் அதிகார வர்க்கத்தால் முன்னெடுத்து மக்களை ஏமாற்ற முடியாது.

எனவே தான் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமானதும் தமிழ் முஸ்லீம் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வுப் பொதியை முன்வைத்து அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலம் உரிய தீர்வு காணப்பட வேண்டும் என எமது புதிய- ஜனநாயக கட்சி வற்புறுத்துகிறது.

15-01-2009
கொழும்பு

சி. கா. செந்திவேல்
பொதுச் செயலாளர்

# லசந்தவின் படுகொலை சர்வாதிகார அறிவிப்பு

நாடும் மக்களும் இருள் சூழ்ந்த சர்வாதிகாரத்திற்குள் இழுத்துச் செல்லப்படும் சூழல் தோன்றியிருப்பதையே நன்கு அறியப்பட்ட ஊடகவியலாளரும் சண்டே லீடர் வாரப்பத்திரிகையின் ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்கவின் பட்டப் பகல் படுகொலை எடுத்துக் காட்டுகிறது. விமர்சனம் செய்யக் கூடிய துணிவான ஊடகவியலாளர்களையும் மாற்றுக் கருத்துடைய அரசியலாளர்களையும் சட்டத்திற்கு அப்பால் இனம் காட்டாத ஆயுததாரிகள் மூலம் ஒழித்துக் கட்டும் போக்கு மீண்டும் முடுக்கி விடப்பட்டுள்ளதா என்ற அச்சம் தரும் கேள்வியே லசந்தாவின் படுகொலை மூலம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. மேற்படி படுகொலையை எமது புதிய- ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அதே வேளை இப் படுகொலை விடயத்தில் அரசாங்கம் உரிய அக்கறையுடன் நடந்து கொள்ளுமா என்ற சந்தேகத்தையும் கொண்டுள்ளது. ஏனெனில் அண்மைக் காலம் வரையான ஊடகவியலாளர்கள் படுகொலைகளுக்கும் ஊடகங்கள் தாக்கப்பட்டமைக்கும் அரசாங்கம் உரிய விசாரணைகளையோ நடவடிக்கைகளையோ எடுத்ததில்லை.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், லசந்த விக்கிரமதுங்கவை ஆசிரியராகக் கொண்ட சண்டே லீடர் ஆங்கில வார இதழ் பல்வேறு அரசியல் விமர்சனங்களையும் மறைவில் உள்ள தகவல்களையும் வழங்கி வந்துள்ளது. அதேவேளை லசந்த பல்வேறு விடயங்களையும் கருத்துக்களையும் வெளியிட்டு வந்துள்ளார். அவற்றையெல்லாம் எவராயினும் ஏற்கவும் நிராகரிக்கவும் முடியும். அக் கருத்துக்களும் விமர்சனங்களும் தவறானவையாகவும் கூட இருக்கக் முடியும். ஆனால் ஒரு ஊடகவியலாளருக்கு பத்திரிகை ஆசிரியருக்கு உள்ள .அடிப்படை உரிமையைத் துப்பாக்கி ரவைகள் மூலம் மறுத்துவிட முடியாது. கடந்த மூன்றாண்டுகளில் தமிழ் ஊடகவியலாளர் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளனர். அதே பாதையில் இப்போது சிங்கள ஊடகவியலாளரும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியருமான லசந்தாவின் பேச்சும் எழுத்தும் துப்பாக்கி ரவைகள் மூலம் முடிவு கட்டப்பட்டிருக்கிறது. இச் செயல் வன்மையான கண்டனத்திற்கும் எதிர்ப்புக்கும் உரியதாகும். யுத்த வெற்றியின் மறைவில் இது போன்ற திட்டமிட்ட படுகொலைகள் தொடர்ந்து அரங்கேறப் போகின்றதா என்ற கேள்வியே மக்கள் மத்தியில் எழுந்துள்ளது என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

09-01-2009

# அன்புள்ள தோழருக்கு

## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

மக்கள் மௌனப் பண்பாடு கலைய மாக்ஸீய சம்மட்டியைத் தூக்குவது பற்றி கடந்த முறை கலந்தோம்.

மாக்ஸீய ஊழியம் புரிவோர் தம்மைச் சூழவுள்ள பழைமைவாத, உலக மயச் சகதிக்குள் சிக்கியுள்ளனர்.

இவற்றிலிருந்து விடுபட்டவாறே வெகுஜன வேலையில் ஈடுபட வேண்டியோராவர். வெகுஜன வேலை என்பது மக்கள் மத்தியில் வாழ்வது, மக்களுடன் பழகுவது, மக்களின் நெருக்கடிகளில் உதவுவது, மக்களின் துன்பங்களைப் பகிர்வது, மக்களின் சாதனைகளை கண்டு பாராட்டுவது, மக்களின் கல்வி விருத்திக்குப் பணி புரிவது, படிப்பது, எழுதுவது, பிரசுரிப்பது, நூல்களை விநியோகிப்பது, கூடிப் படிப்பது, மக்கள் பண்பாட்டுத் தரமுயர கலை-இலக்கிய பங்களிப்புக்களை வழங்குவது, பழைமைவாதச் சடங்குகளை நிராகரிப்பது, நச்சிலக்கியங்களை விமர்சித்து எதிர்ப்பது, உலகமயமாதல் மனநோயிலிருந்து மீள்விப்பது, தனிச் சொத்துடைமைப் பேராசையிலிருந்து விடுவிப்பது, நுகர்வுப் பண்பாட்டு அவஸ்தையிலிருந்து பாதுகாப்பது, உள உடல் ஆரோக்கிய மேம்பாட்டுக்கான விளையாட்டுக்களை ஊக்குவிப்பது, தனிமனித ஆளுமை விருத்தியை மேம்படுத்துவது, கூட்டுச் செயற்பாட்டுக்கான வழிமுறைகளைத் தேடுவது, தேர்வது, திட்டமிட்ட முறையில் செயற்படுத்துவது, வரலாறு, அரசியல், விஞ்ஞானம் போன்ற சகல அறிவியல் விடயங்களைப் படிப்பது, படித்தவை பற்றி பேசுவது, அவற்றை சமகாலத்துக்குப் பொருந்துமாறு பிரயோகிப்பது, தாய் மொழியையும் ஏனைய பிற அயல் மொழிகளைக் கற்பது, அயலவர் பற்றி அறிவது அவர்களிடமிருந்து கற்பது, கற்றவற்றைப் பகிர்வது, பயன்படுத்துவது, உழைப்பில் ஒன்று பட்டு ஈடுபடுவது, உழைப்பாளரை மதிப்பது, போற்றுவது, கௌரவப் படுத்துவது, நோயாளர்களுக்கு உதவுவது, வயோதிபருக்கு முதலிடம் கொடுப்பது என அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்து மக்களுடன் மகிழ்வாயிருப்பது என்பதேயாகும்.

மாக்ஸீய ஊழியர் என்பவர் மக்களுக்கான பணி ஆற்றுகையின் போது அவர் மகாத்மா போல் சகலமும் நானே என்ற மனப் போக்குக்கு உள்ளாவதோ, மற்றவர்களின் ஏற்றிப் போற்றலுக்காளாகித் தன்னை மாய்த்து மாழுவதோ மாக்ஸீய ஊழியனுக்கு இருக்கக் கூடாதன. பொது வேலை செய்யும் பண்புடையவர் என்பதை கண்ணுற்றே அவரின் தலையில் எண்ணெய் தேய்த்து ஏமாற்றி விடும் பக்குவமுடைய சுயநல விஷமிகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதும் மாக்ஸீயரின் அவதானிப்புக்குரியது.

''மக்கள் என்போர் இயல்பாகச் சுயநலமிகள், விஷமிகள். மக்களுக்காக வேலை செய்வதில் பயனெதுவுமில்லை' என்ற மனப்பாங்கில் மக்கள் மத்தியில் வேலை செய்வதைத் தவிர்த்துத் தப்பிக் கொள்வது என்பது அது மேதாவித் தனமே தவிர மாக்ஸீயருடைய மனப்பாங்காகாது.

மக்கள், மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி என்பது வெறும் வெற்றுச் சுலோகமல்ல. மக்கள் மத்தியிலான வேலை, வேலை, வேலை இதுவே மாக்ஸிஸ்ட் ஒருவரின் மறுக்க வொண்ணாப் பணியாகும்.

மக்களை வெறுத்து, மக்களிடமிருந்து ஒதுங்கி, மக்களுக்கு மேலால் சிந்திப்பதும் செயற்படுவதும் மக்களுக்கு மகானாக காட்சியளிக்க முயற்சிப்பதும் மாக்ஸிஸ்டின் மாண்பாகாது.

மக்களை விடுவிக்க வந்த இரட்சகர் போன்று பாவனை பண்ணுவதும் மக்களிடமிருந்து அதற்கான கௌரவத்தை எதிர்பார்ப்பதும் மத்திய தர வர்க்க சுபாவமாகும்.

பாட்டாளி வர்க்க சிந்தனையில் புடம் போடப்படும் மாக்ஸிஸ்ட் இத்தகு மயக்கங்களிலிருந்து தன்னை மீட்டவராவார்.

'காலம் இன்னும் கனியவில்லை. கனியும் போது காரியமாற்றலாம்' என பேசா மடந்தையராய் 'தானுண்டு தன் குடும்பமுண்டு' என்று சாமானியர்களின் நுகர்வியத்தில் நுழைவிடம் தேடி முடங்குவது மாக்ஸீயமாகாது.

மாக்ஸீயத்தின் கடமை வரலாற்றை உந்தித் தள்ள முயற்சிப்பதேயாகும். மதவாதியின் போதனை போல் மாக்ஸீயப் போதனையாளராகி மக்கள் மத்தியிலிருந்து மறைந்து வாழ்வதற்கான மார்க்கமாக மாக்ஸீய அணுகுமுறை என்பது இன்னும் இறுகிவிடவில்லை.

துன்பம், விரக்தி, அழிவு, அநியாயம் என்பன அதிகரித்திருக்கும் போது அதன் பின்னால் அடியளித்து வணங்கும் பக்தர்கள் போல அமைதியாய் வாழ மாக்ஸிஸ்றுக்கு முடியாது.

தனிச் சொத்துடைமை மனநோயில் பாதிக்கப்பட்டிருப்போருக்கு பொதுவுடைமைச் செயற்பாட்டாளனின் செயல்கள் பைத்தியக்காரத் தனமானது தான். பொதுப்பணி செய்யும் பெண்கள் ஆண் ஆதிக்க சமூகத்தின் கண்களில் பொது மகளிர் போல் காமுகக் கண் கொண்டு கணிப்பது சுயநல மேலாண்மைக் குணாம்சமாகும்.

மாக்ஸிஸ்டைத் தேடி வேலை வருவதில்லை. எங்கிருந்தோ எவராலோ மக்கள் மத்தியிலான வேலையெது, எப்படிச் செய்ய வேண்டுமென்ற உத்தரவுகள் கிடைப்பதில்லை. மாக்ஸிஸ்ட் ஒருவர் தானே வேலையைக் கண்டு கொள்ள வேண்டும். வேலையை உருவாக்க வேண்டும். மக்கள் மத்தியில் மகாராஜா போல் குதிரையில் உலாவராமல் காலாற நடந்தால் வேலையெது, எப்படிச் செய்வது என்பதில் சிரமமிருக்க முடியாது.

தற்போதைய சூழலில், வெகுஜன வேலை என்பது பெரிய கூட்டம் கூட்டுவதோ, ஊர்வலம் நடத்துவதோ, ஆர்ப்பாட்டம் செய்வதோ, பாராளுமன்ற திருவிழாக்களில் கோசம் போடுவதோ, வீராவேச வசனங்களைப் பத்திரிகையில், வானொலியில், தொலைக்காட்சியில் முழங்குவதோ அல்ல. பகிரங்கமாக பலரும் பேசும்படி வாய்ப்பேச்சு வீரராய் வலம் வருவதல்ல. இவை முதலாளிய விளம்பர ஆட்சியாளரின் வாய்ச் சவடால் அரசியல். இவற்றில் மயங்க வேண்டிய தேவை மாக்ஸிஸ்டுக்குக் கிடையாது.

அமைதியாய், பொறுமையாய், மக்களின் தேவையிலிருந்து மக்கள் மத்தியில் நீரினுள் வாழும் மீன் போல ஒவ்வொருவராய் அணுகி, அவர்களின் அவசியங்களைத் தெரிந்து அவர்களைச் செயற்படத் தூண்டுவதே வெகுஜன வேலையின் ஆரம்பமாகும். மறுபக்கத்தில் இத்தகைய அமைதியும், பொறுமையுமிழந்து ஆயுதங்களில் அபார நம்பிக்கை வைத்து அநியாயங்களை அகற்ற வங்கிக் கொள்ளையிடுவதோ, துரோகிகளைத் தொலைப்பதோ, தனிமனித பயங்கரவாத சாகசங்களில் மிதப்பதோ வெகுஜன வேலையின் மாற்றாகாது. இவை மத்திய தர வர்க்கத்தின் குட்டி முதலாளிய பழிவாங்கும் மனத்துடிப்பின் அவசரக் கோளாறாகும். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பது நாட்டார் அனுபவச் சான்றாகும்.

மக்கள் செய்ய வேண்டியவற்றை மக்களுக்காக தானே செய்து தனிமனித அதீதத்தை வெளிப்படுத்துவது பயனற்றது.

கூடியுழைப்பது, கூடிச் செயற்படுவது மட்டுமே மக்களை விழிப்படையச் செய்யும்.

ஆளுவோர் எவராயினும் அவரின் பின்னால் அவ்வப்போது அணிவகுத்து ஆராதிப்பதும், அச்சத்தால் சந்தர்ப்பவாதச் சகதிக்குள் சல்லாபம் புரிந்து சமரசம் செய்வதும் ஒன்றுக்குப் பயந்து இன்னொன்றுக்குள் அடைக்கலந் தேடுவதும், அந்த இன்னொன்றுக்கும் பயந்து மற்றொன்றுக்குள் மண்டியிடுவதும் மாக்ஸீயப் போராளிகளின் செயலாகாது.

'பூரண பொருள் முதல்வாதி அச்சமற்றவன்' - என்பது அமைதியான காலத்தில் பாடும் தேவராமல்ல. அட்டுழியந் தலைவிரித்தாடும் பூமியில் விடுதலையை நேசிக்கும் போராளியின் நெஞ்சில் கேட்கும் இதயத் துடிப்பாகும்.

மக்கள் இணைந்து பணியாற்றும் பொது அமைப்பு என்னும் ஸ்தாபனம் என்பது பிரமுகர்களை உருவாக்கும் தொழிற்சாலை அல்ல, சமூக மாற்றம், சமூக நீதி என்பது அலுத்துப் போய்ச் சொல்லும் அரகரமகாதேவாவோ நமப்பார்பதி பதியோ அல்லது பின் தங்கிய சமூக உறுப்பினர்களின் நிவாரணப் பணிமனையல்ல, பலவீனர்கள் கூடி விளையாடும் விளையாட்டுத் திடலல்ல, சோம்பேறிகள் கூடிக் கட்டிய ஆண்டிகள் மடமல்ல, விளம்பர வியாபாரம் செய்யும் தனியார் கொம்பனியல்ல, உதவிகள் பெற்றுப் பதவி கொள்ளும் என்.ஜி.ஓ. காரியாலயங்கள் அல்ல, உத்தியோகத்தில் ஆற அமர இருந்து அலுப்படிக்கும் அரச சேவகமுமல்ல.

அன்புள்ள தோழரே,

அறுபது தேங்காயை எழுபது பேர் அழுது அழுது சுமந்தது போலன்றி பகிர்ந்து சுமந்து ஆடிப் பாடி ஆனந்தமாய் அனைவரும் ஒன்றாய் கூடி மகிழும் காலம் நெருங்கி வருவது கண்டும் கண்ணயர்ந்து கொள்வது சரியாமோ?

மறுமடலில் சிந்திப்போம்
தோழமையுடன்
செண்பகன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் ஏமாற்றும் தலைமைகளும் ஏமாறும் மக்களும்

ஏமாற்றுப் பேர் வழிகள் சமூகத்தின் பல்வேறு தளங்களில் இருந்து வரவே செய்வார்கள். அத்தகையவர்களிடம் ஏமாறுவோர் ஒரு முறை இரு முறையுடன் உண்மை நிலை தெரிந்து ஏமாற்று வோரை அடையாளம் கண்டு நிராகரித்து விடுவார்கள். ஆனால் அரசியல் தொழிற்சங்கத் தளங்களில் ஏமாற்றுத் தலைமைகள் தமது செல்வாக்கைச் செலுத்தியே வருகின்றனர். இதில் நம்ம மலையகம் பெயர் பெற்று விளங்குவதான் கவலை தருகிறது.

மறைந்த தொண்டமான் தொழிற்சங்கத் தலைமை வகித்த காலம் முதல் இன்றைய ஆறுமுகம் தொண்டமான் மற்றும் தொழிற்சங்க அரசியல் தலைவர்கள் எனப்படுவோர் பச்சை ஏமாற்றுக்காராகவே இருந்து வருகிறார்கள். தொண்டமான் தலைமையில் இ.தொ.கா மலையக மக்களை ஏமாற்றுவதாகக் கூறியே அதற்குள் இருந்து சந்திரசேகரன் வெற்றுமுழக்கங்களோடு வெளியே வந்து மலையக மக்கள் முன்னணி என்ற பெயரில் தனித் தலைமை ஆகிக் கொண்டார். ஆனால் முன்னையவர்களின் வழிகளில் மலையக மக்களை ஏமாற்றும் பாதையில் தான் அவரும் பயணம் செய்தார். இலங்கையின் இரண்டு பேரினவாத ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் இணைவதும் அவர்களது தேர்தல் சின்னங்களில் போட்டியிடுவதும் அமைச்சர் பதவிகள் பெறுவதும் மலையக மக்களின் பெயரால் சகல சுகபோகங்களை அனுபவிப்பதும் அவர்களது வழக்கமாகவும் வாழ்க்கையாகவும் ஆகிவிட்டது. இவர்களைப் போன்றவர்களாகவே மலையகத்தின் ஏனைய தொழிற்சங்கத் தலைமைகளும் இருந்து வருகின்றன. ஏதாவது ஒரு பேரினவாதக் கட்சியுடன் இணைந்து கொள்ளாது தமது தொழிற்சங்க அரசியல் வியாபாரத்தை நடாத்த இயலாதவர்களாகி மாறி மாறித்தாவும் அரசியல் செய்து வருகிறார்கள்.

இத்தகைய மலையகத் தொழிற்சங்கத் தலைமைகளின் வேடங்களும் வியாபாரங்களும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வெளிப்பட்டு வந்திருக்கின்றன. தேர்தல் காலங்களில் மட்டுமன்றி சம்பள உயர்வுப் போராட்டங்களின் போதும் இத்தலைமைகள் தமது மக்கள் விரோத நிலைப்பாடுகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. அவ்வேளைகளில் எல்லாம் கொதித்து கண்டனங்கள் தெரிவிக்கும் நமது மலையகத் தொழிலாளர்களும் மக்களும் சிறிது காலம் செல்ல அவற்றை மறந்து விடுவது வழக்கமாகும். குறிப்பாகத் தேர்தல்கள் வரும் போது இதே ஏமாற்றுத் தலைமைகள் தாம் ஏமாற்றித் துரோகம் செய்த மக்களிடம் எவ்வித குற்ற உணர்வும் இன்றி கூச்ச நாச்சமின்றி வந்து வாக்குக் கேட்பார்கள். அறிக்கைகள் பேச்சுகள் விட்டு அழுது மாய்மாலம் செய்வார்கள். பணம் மதுபானங்கள் உணவுப் பொட்டலங்கள் உடுதுணி என்பன மட்டுமன்றி கோவிலுக்கு தகரம் மணி படிக்கட்டுகள் கட்டிக்கொடுக்க முன்வருவர் அல்லது வாக்குறுதி அளிப்பார்கள். வீதி போடக் கற்கள் கொட்டுவார்கள். மின்சாரம் வருவதாகக் கூறிச் சில மின் தூண்களைக் கொண்டு வந்து இறக்குவார்கள்.

இவற்றையெல்லாம் தமக்கானவை என நம்பி மலையக மக்கள் இந்தத்தலைமைகளுக்கு வாக்களிப்பர். அத்தோடு அவர்களது தேர்தல் வெற்றி நிறைவு பெற்றுவிடும். ஆளும் அரசாங்கத்தில் அமைச்சர் பதவியும் கிடைத்துவிடும். ஆனால் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை பழைய பாதையில் துயரங்கள் துன்பங்கள் சுமந்து செல்வதாகவே இருக்கும்.

இப்பொழுது மாகாணசபை தேர்தல் வந்துள்ள இவ்வேளையில் மேற்கூறிய விடயங்கள் தான் மலையகத்தின் பிற்போக்கு தொழிற்சங்க அரசியல் தலைமைகளால் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய ஏமற்றுத் தலைமைகளிடம் இம்முறையும் மலையக மக்கள் ஏமாறப்போகிறார்களா? அல்லது புதிய சிந்தனை தடத்தில் நின்று கேள்விகள் எழுப்பி நிற்கப்போகிறார்களா? அல்லது பழைய படி இத்தலைமைகளின் இறுதிநேர வாக்குறுதிகள் கையூட்டுகள் மாய்மால வார்த்தைகளுக்கு ஏமாந்து வாக்களிக்கப் போகிறார்களா?

பண பலமும் பதவி அந்தஸ்தும் சுகபோக வாழ்வும் மது வகைகள் ஆடம்பரங்கள் அனுபவிப்பும் மக்கள் அளித்த வாக்குகள் மூலமே இத்தலைமைகளுக்குக் கிடைத்தன. பதவிகள் மூலம் சுருட்டிய பணத்தை வைத்தே மக்களின் வாக்குகளுக்கு விலை பேசப்படுகிறது. இது மக்களின் விமோசனத்திற்கு அல்ல. முன்னைய காலங்கள் போன்று வாக்குகளை பெற்று மக்களை ஏமாற்றி அவர்களுக்கு எதுவும் வென்றெடுக்காது பதவிகள் பெற்று தத்தம் பைகளை நிரப்பிக் கொள்வதற்கேயாகும்.

ஆதலால் தான் நமது மலையக மக்கள் தொழிலாளர்கள் இத் தேர்தல் சந்தர்ப்பத்தில் ஆழ்ந்து சிந்திப்பது அவசியமாகின்றது. பழைமைவாத பிற்போக்கு அரசியல் தொழிற்சங்கத் தலைமைகளை நிராகரித்து புதிய சக்திகளை அரசியல் அரங்கில் வளரச் செய்ய வேண்டும். இரண்டு பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளையும் ஆதரிக்கும் எந்தவொரு தலைமையையும் நிராகரிக்கும் துணிவு கொள்ள வேண்டும். மலையகத்தில் அரசியல் தொழிற்சங்க மாற்றுத் தலைமையை தூரநோக்குடன் கட்டி வளர்க்க இத் தேர்தல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். இதனை செய்யத் தவறும் போது தொடர்ந்து மலையகத்தின் பிற்போக்கு தொழிற்சங்க அரசியல் தலைமைகள் விரிக்கும் மாய வலைக்குள் சிக்குண்டு துயர வாழ்வைத் தொடர வேண்டியதாகவே இருக்கும்.

அட்டன் ந. சிவலிங்கம்

# மலையக மக்களுக்கு தொடர்ந்து மொட்டை போடுகிற தலைவர்கள்

ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிடும் கணபதி கனகராஜ் மேல் கொத்மலை நீர் மின்திட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டார் என்று கூறி அதனை அவரது சாதனைகளில் ஒன்றாக ஒரு பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. அவர் செய்த சாதனைகள் ஏராளம்!

ம.ம.மு யிலிருந்து இ.தொ.கா முன்னனிக்கு மாறினார். ஐ.தே. கட்சியை ஆதரித்தார். பின்பு ஐ.ம.சு. முன்னணியை ஆதரித்தார். மேல் கொத்மலை நீர் மின்திட்டத்திற்கு

## மேல் கொத்மலை வீரன்

போராட்டங்களை விட்டு ஓடியமைக்கு பிரதியுபகாரமாக அவருக்கு இலங்கை மின்சார சபையில் இயக்குனராகப் பதவி கிடைத்தது. சம்பளம் வாகனம் எல்லா வசதிகளும் கிடைத்தன.

மாகாணசபை தேர்தலில் ஐ.ம.சு. முன்னணியின் பட்டியலில் போட்டிபிட வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிடுகிறார். இலங்கை மின்சார சபையின் இயக்குநர் பதவியைத் துறக்காமல் தேர்தலில் போட்டியிட முடியாது. அதுமட்டுமல்ல ஐ.தே. கட்சியுடன் சேர்ந்த பிறகு ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் அவரை அப்பதவியில் தொடர்ந்து விட்டு வைக்குமா? இருந்தும் மக்களின் நன்மைக்காக அப்பதவியை இராஜினாமா செய்வதாகத் தெரிவித்துள்ளார். மேல் கொத்மலை திட்டத்தின் பெரும்பகுதி நிறைவேற்றப்பட்ட பிறகு அவர் இராஜினாமா செய்தது அவரின் பார்வையில் தியாகத்தின் மேல் தியாகமாகும். மக்களின் பார்வையில் எல்லாமே காட்டிக் கொழுப்புத்தான்!

ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுவிட்டால் அவர் மேல்கொத்மலைத் திட்டத்தில் விட்டக்குறை தொட்டக்குறை எல்லாவற்றையும் நிரப்பிக் கொள்வார். தலவாக்கொல்லை வாழ் மக்கள் தான் பாவம் !

## விஸ்கி கொடுக்கும் தலைவர்

தோட்டக்கமிட்டித் தலைவர்களும் எல்லா தொழிற்சங்கத் தலைவர்களும்கள் சாராயம் கொடுப்பார்கள். நான் அப்படி இல்லை. அவர்களுக்கு விஸ்கி கொடுப்பேன். இப்படி ஒரு பழைய தொழிற்சங்கத்தின் புதிய தலைவர் கூறிவருகிறாராம். அவருக்கு எல்லாமே போதைவஸ்து சமாச்சாரம்தான். அந்தளவிற்கு தொழிற்சங்க இயக்கத்தையும், அரசியலையும் வியாபாரமாக்கி விட்டார்கள். ஐ.தே. கட்சியில் போட்டியிடும் அவர் விஸ்கி விநியோகிக்க அமைச்சொன்றை கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஐயோ இவர்களிடம் மாட்டிக் கொண்டு மலையக மக்கள் படுகின்றபாடு. அப்பப்பா போதும் போதும்.

## கழுதை தேய்ந்து கட்டெறும்பானது

தமிழ்த் தேசியம் பேசி பின்னர் மேலக தேசியம் பேசி தற்போது ஜனநாயக மக்கள் முன்னணியாகி ஐ.தே. கட்சியின் தேசியத்தை ஏற்றுக்கொண்டார் மனோ கணேஷன். அதன் பட்டியலில் அவரது சகோதரன் நுவரெலியாவில் போட்டியிடுகிறார். ஐ.தே. கட்சி என்ற பேரினவாதக் கட்சியில் போட்டியிட்டுக் கொண்டு தனித்துவ அரசியல் பேசுவது யாரை ஏமாற்றுவதற்காக? ஐ.தே.கட்சிக்கு வாக்குச் சேகரித்து கொடுக்க நல்லதொரு தரகர்தான் தமிழ்த் தேசியம் பேசும் மனோகணேசன்.

## விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை

சிறுபான்மை இனக்கட்சிகள் இலங்கையில் ஒருநாளும் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் புதிதாக கண்டுபிடிதது விட்டார். மத்திய மாகாண சபை தேர்தலில் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவதற்காக கூறும் சாட்டுச் சமாதானம் சப்பிரக முவா மாகாண சபையில் போட்டியிடும்போது இந்த புத்தி ஏன் வரவில்லை. அம்மாகாணத்தில் இ.தொ.கா. தனியாகப் போட்டியிட்டு தோல்வியடைந்த பிறகு ஆறுமுகனுக்கு ஞானம் பிறந்து ள்ளதா?

மத்திய மாகாணசபையின் தமிழ்க்கல்வி அமைச்சராக இருந்தபோது

## விதைத்தவரும் அறுத்தவரும்

விதைத்ததையே தான் இன்று தான் அறுவடை செய்து கொண்டிருக்கிறார் என்று இ.தொ.காவின் வி. இராதாகிருஸ்ணன் கூறியுள்ளார். தமிழ்க்கல்வி அமைச்சராக இருந்த இன்னொருவரான எஸ். அருள்சாமி சொல்கிறார், பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து 500 மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பும் வகையில் தான் எடுத்த முயற்சிகளாலேயே இம்முறை பெருந்தோட்ட மாணவர்கள் உயர் தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். இம்முறை பல்கலைக்கழகத்திற்கு செல்லப் போகும் மாணவர்களின் எண்ணிக்கையில் பெரிய முன்னேற்றம் இல்லை என்பது அவருக்கு தெரியாமல் போயிற்று.

கல்வியமைச்சராக இருந்தபோது தனிப்பட பெறவேண்டிய நன்மைகளை இராதாகிருஸ்னண் விதைத்தார் என்றும் பின்னர் வந்த கல்வியமைச்சர் மூன்று வருடங்களிலேயே தனிப்பட்ட தேவையெல்லாம் அறுவடை செய்து கொண்டார் என்று சொல்வதே பொருத்தமானது.

## பழைய கதை

எப்போதுமே அரசாங்கத்துடனேயே இருக்க வேண்டும். அப்போதே நன்மை கிடைக்கும் என்று கூறி, கூறியபடி இறக்கும்வரை அமைச்சராக இருந்தார் சௌமியமூர்த்தி தொண்டமான். அவரது பேரன் ஆறுமுகன் அவரைத் தொடர்ந்து அரசாங்கத்துடனேயே இருக்கும். வழக்கத்தை மேற்கொண்டு வருகிறார்.

இ.தொ.கா. விற்கு மாற்றுத் தலைமை என்று கூறிய ம.ம.முன்னணி இ.தொ.கா. வழியையே பின்பற்றி அச்சொட்டாக அரசாங்கத்துடன் இருந்து வருகிறது. மத்திய மாகாண சபை தேர்தலில் அரசாங்கத்துடன் இணைத்து போட்டியிடுவதற்கான காரணம் எதிர்க்கட்சியில் இருந்து விமர்சித்துக் கொண்டு இருந்தால் எந்த நன்மையுமில்லை என்று ம.ம.மு தலைவர்கள் கூறுகிறார்கள். உண்மைதான்! அமைச்சுப்பதவி, வாகன வசதி ஆடம்பரமான வாழ்க்கையெல்லாம் அரசாங்கத்துடன் இருந்தால் தானே கிடைக்கும். ஆனால் மலையக மக்களுக்கு?

ம.ம முன்னணியின் பாரதிதாசன் ஐ.ம.சு. முன்னணியில் மத்திய மாகாணசபைக்கு போட்டியிடுகிறார். மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் போராட்டங்களை திசைத்திருப்பும் வகையில் சில இளைஞர்களை கொண்டு தலவாக் கொல்லை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார் பாரதிதாசன். அதைப் பயன்படுத்தி அமைச்சருடன் நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை கைவிட்டார். அத்திட்டத்தின் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரானார். சில உண்ணா

## இன்னொரு ஒப்பந்தக்காரர்

விரதிகளுக்கும் தொழில் போட்டுக் கொடுத்தார். அவர் பாடு படு ஜோர்.

மேல் கொத்மலைத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகளை மக்கள் இன்று உணர்கின்றார்கள். பாதிக்கப்பட்டோருக்கு கொடுப்பதாகக் கூறப்பட்ட சலுகைகளும் கிடைக்கவில்லை. மக்களுக்கு ஏமாற்றமே. பாரதிதாசன் போன்றோருக்கு கொண்டாட்டமே.

## அண்ணன் அமைச்சருக்கு அக்கறை ஏன்?

“விலைவாசி உயர்வுக்கு ஏற்ப மலையகத் தொழிலளார்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும் அநாவசியமாகக் கைதாகும் மலையக இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மலையக மக்கள் முன்னணி உரிய நடவடிக்கை எடுக்கும்” என அமைச்சர் சந்திரசேகரன் அட்டனில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றி உள்ளார். அண்ணன் அமைச்சர் அவர்களே! கடந்த மூன்று வருடங்களில் அதற்கு முன்பு சந்திரிகா அரசாங்கத்தில் நீங்கள் தொடர்ந்து அமைச்சராக இருந்து தானே வந்தீர்கள். அப்பொழுதெல்லாம் சம்பள உயர்வுப் போராட்டம் இடம் பெற்ற போது என்ன பாத்திரம் வகித்தீர்கள். நீங்கள் அமைச்சராக வீற்றிருந்த வேளையிலேயே அன்றும் இன்றும் மலைய இளைஞர் யுவதிகள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு இன்று வரை சிறைகளில் இருந்த வருகிறார்கள். அதில் உங்களை ஆதரித்த பலர் கூட உள்ளே இருந்து வருகிறார்களே. அண்ணன் அமைச்சரே அவர்களில் எத் தனை பேரை விடுவித்தீர்கள். இனி மேல் தான் அது முடிந்த பின் பாராளுமன்றத் தேர்தல் வரப்போகிறதல்லவா? அதற்கும் சேர்த்து இப்பவே மலையக மக்களுக்கு மொட்டை போட ஆரம்பித்து விட்டீர்களா? ஜனாதிபதிக்கு விளக்கவும் நடவடிக்கை எடுக்கவும் உள்ளீர்களா? இது வரை காலமும் ஜனாதிபதியைச் சந்திக்கவே இல்லையா? ஏன் இந்தப் பம்மாத்து இப்பொழுது மட்டும் ஏன் தான் சம்பள உயர்வு இளைஞர் விடுதலை பற்றி அக்கறை வந்துள்ளது. ஓ! அதுவா? மாகாணசபைத் தேர்தல் வருகிறதல்லவா?

### பிற்குறிப்பு

இந்த நிலைமையில் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டம் சம்பள உயர்விற்கான போராட்டம் ஆசிரியர் நியமனங்களுக்கான போராட்டம் போன்றவற்றை நேர்மையாக முன்னெடுத்த புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்களில் ஐவர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அது ஒரு பெரிய சதி. பல சவால்களுக்கு மத்தியில் புதிய ஜனநாயக கட்சி மத்திய மாகாண சபைக்காக நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை சுயேட்சைக்காக “கேத்தல்” சின்னத்தில் போட்டியிடுகிறது. தீர்ப்பு வாக்காளர்களின் கைகளின் தான்.

மொட்டை போடுவோருக்கு வாக்களித்தால் துயரங்கள் தொடரும் போராடும் சக்திகளுக்கு வாக்களித்தால் புதிய ஒளி பிறக்கும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் தீர்வு இன்றி அபிவிருத்தி சாத்தியம் இல்லை

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இன்றைய நிலை மிகமிக மோசமானதாகும். கடந்த முப்பது வருடப் போரினால் உயிர் உடைமைகள் மட்டுமன்றி சகல வளங்களும் தேவைகளும் அழிவுற்ற நிலையிலேயே இருந்து வருகின்றன. இன்றும் கூட வன்னிப் போரும் அதன் மூலமான பேரவலங்களும் இடம் பெற்ற வண்ணமே உள்ளன. ஏற்கனவே குடாநாடும் கிழக்கு மாகாணமும் வன்னியில் பெரும் பகுதிகளும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகின்றன. அங்கெல்லாம் மக்களின் ஜனநாயக இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. வடக்கு கிழக்கில் ராணுவ-சிவில் நிர்வாக இரட்டை நடைமுறைகளே இருந்த போதிலும் ராணுவ நிர்வாகமே யாவற்றையும் தீர்மானித்து வருகிறது. அங்கு ஜனநாயகம் சமாதானம் இயல்பு வாழ்க்கை எதுவும் இல்லை. சுருங்கக் கூறின் ராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் எவ்வாறு மக்கள் நடத்தப்படுகிறார்களோ அவ்வாறான நிலை நீடிப்பதையே காணமுடிகிறது. இதனை பேரினவாத ஒடுக்கு முறையின் உயர்ந்த கட்ட செயற்பாடு என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் மகிந்த சிந்தனை அரசு வடக்கு கிழக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என்றும் அபிவிருத்தி துரிதமாக முன்னெடுக்கப்படும் என்றும் உரத்துக் கூறி வருகிறது. ஜனநாயகம் என்பதன் பொருள் உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகளுக்கு தேர்தல் நடாத்துவதும் அவற்றில் தமக்கு இணங்கக்கூடியவர்களைப் பதவிகளுக்கு கொண்டு வருவதுமாகும். இதன் பாதையிலேயே ஏற்கனவே கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மாகாண சபைத் தேர்தல்கள் இடம் பெற்றன. அத் தேர்தல்களில் எவ்வாறு ஜனநாயகமும் வாக்களிக்கும் சுதந்திரமும் நடைமுறைப்படுத்தப்பட்டன என்பது உலகறிந்த ஏமாற்றாகும். ஏற்கனவே இவ்வகையின் பாராளுமன்ற ஜனநாயகமும் தேர்தல் நடைமுறைகளும் ஊழல்கள் மோசடிகள் வன்முறைகளால் நாற்றமெடுத்து நிற்கின்றன. இதன் மத்தியில் தான் கிழக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனையே யுத்தம் முடிந்ததும் வடக்கில் நிலைநாட்டப் போவதாக ஜனாதிபதியும் அரசாங்கமும் அமைச்சர்களும் முன்னுதாரணப்படுத்திக் கூறி வருகிறார்கள். இதற்கு மகிந்த சிந்தனை அரசாங்கம் சூட்டியுள்ள மகுடம் "கிழக்கின் உதயம்" "வடக்கின் வசந்தம்" என்பதாகும்.

இதன் மூலம் நாம் இன்றைய மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் பேரினவாத நிலைப்பாட்டின் நோக்கையும் போக்கையும் புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களை அந்தந்த மாகாணங்களில் பிரித்து முடக்கி வைத்திருப்பதும் அதிகாரப் பகிர்வு எதுவுமற்ற வெறும் மாகாண சபை நிர்வாகங்களை நடாத்துவதுமாகும். அத்தகைய நிர்வாகப் பதவிகளில் கூட தமக்கு விசுவாசம் மிக்கவர்களைத் தமது கட்சிகளின் மூலம் தேர்ந்தெடுக்கச் செய்து பிடி கயிற்றை தமது கரங்களில் வைத்திருப்பதாகும். இதனூடாக அபிவிருத்தி என்ற பெயரில் கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள் உருவாக்குவதாகும்.

நாம் சற்று ஆழமாக நோக்குவோமாகில் ஜனநாயகம் அபிவிருத்தி ஆகிய இரண்டும் முப்பது வருட அழிவுகரமான போருக்குப் பின் அதி அவசியமானவை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்க முடியாது. ஆனால் அவற்றை ஒரு ராணுவ நிர்வாகத்தின் கீழ் பேரினவாத அரசாங்கத்தின் திட்டமிடலின் மூலம் நிறைவேற்ற முடியுமா? என்பதே பிரதான கேள்வியாகிறது. அரசியல் தீர்வு ஒன்று தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் முஸ்லீம் மக்களின் இணக்கப்பாட்டுடனும் நடைமுறைக்கு கொண்டுவரப்படாது எவ்வாறு வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தை சமாதானத்தை இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்க முடியும். அவ்வாறான சூழலில் அபிவிருத்தி என்பது முன்னெடுக்க முடியுமா?

தமிழ் முஸ்லீம் மக்கள் வடக்கு கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் இரண்டு தேசிய இனங்கள். அவர்களது பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு அடிப்படைகள் தனித்துவமாக முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்குரிய சுயாட்சித் திட்டம் அரசியல் தீர்வாகவும் அரசியலமைப்பின் ஊடாகவும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தாலேயே ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் முஸ்லிம் மக்களின் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் அதிகாரப் பகிர்வைச் சாத்தியமாக்க முடியும்.

இலங்கையில் கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாகப் புரையோடிப் போன இனப்பிரச்சினையின் அடிப்படை பேரினவாத ஒடுக்குமுறை என்பதை நியாய சிந்தை படைத்த எவரும் மறுக்க மாட்டார். கடந்த முப்பது ஆண்டுகளில் கொடிய போராக மாற்றப்பட்டு சுமார் இரண்டு லட்சம் மக்களைக் கொன்றொழிக்கவும் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்படவும் சுமார் 15 லட்சம் மக்கள் இடம்பெயர்வு புலப் பெயர்வுக்கு ஆட்படவும் இன ஒடுக்கு முறையே அடிப்படைக் காரணமாகியது. எனவே அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படாமல் அபிவிருத்தி எனக் கூறுவது அர்த்தமற்ற ஒன்றாகும்.

உலகில் எங்கெனும் மக்களுக்கும் நாட்டிற்குமுரிய உண்மையான அபிவிருத்தி என்பது அரசியலில் உறுதிப்பாடான நிலையும் ஜனநாயகத்தின் குறைந்த பட்ச சூழலில் நிலவும் இயல்பு வாழ்க்கையின் மத்தியிலேயே முன்னெடுக்க முடியும். எனவே ஜனநாயக அரசியல் ஸ்திரத்தன்மையும் அதன் கீழான அபிவிருத்தி என்பதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதாகும். இத்தகை ஒரு சூழலை துப்பாக்கிகளின் பலம் கொண்டு ராணுவக் கண்ணோட்டத்தில் சாதிக்க முடியாது. இதனை ஆயுதப் போராட்டம் நடாத்தும் ஒரு இயக்கத்தால் செய்யவும் முடியாது. அதே போன்று ஆயுத பலத்தால் நிர்வாகம் நடாத்தும் ராணுவத்தாலும் சாத்தியமாக்க முடியாது.

எனவே மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் ராணுவக் கட்டுப்பாட்டின்



கீழான நிர்வாகத்தின் மூலமோ அன்றி அதன் இரும்புச் சப்பாத்துக்களின் கீழான மாகாணசபை உள்ளூராட்சி நிர்வாகங்களை ஜனநாயகம் எனக் கூறி முன்னெடுப்பதாலோ சாத்தியமாக்க முடியாது. அவற்றையும் மீறி வலுக் கட்டாயத்தின் பேரில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி எதுவும் மக்களுக்குரியதாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்குரியதாக இருக்க மாட்டாது. அரசாங்கம் ஊர் உலகுக்கு காட்ட எடுக்கப்படும் ஒரு கண்துடைப்பாக மட்டுமே இருக்க முடியும். எனவே இன்றைய சூழலில் தேசிய இனப்பிரச்சினை என்ற பாரத்துடன் நிற்கும் வண்டிக்கு முன்பக்கத்தில் அதற்குரிய அரசியல் தீர்வு என்ற பலம் மிக்க மாடுகள் கட்டப்பட வேண்டும். அதை விடுத்து அரசியல் தீர்வற்ற பலவீனமான மாடுகளை வண்டியின் பின்னே கட்டுவதால் பயணம் ஒரு அங்குலம் தானும் நகரப் போவதில்லை. ஆதலால் இன்று அவசியம் தேவைப்படுவது உறுதியான நேர்மையான தமிழ் முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வாகும். அதன் நடைமுறைப்படுத்தலின் ஊடாகவே அபிவிருத்தி சாத்தியமாகும். அல்லாதவைகள் யாவும் பேரினவாதத் திணிப்பாகவும் ராணுவ முனைப்பாகவுமே இருக்க முடியும்.

- சண்முகம்




பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவரான தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் (மணியம்) 19வது ஆண்டு நினைவுக் கூட்டம் கொழும்பு இராமகிருஷ்ணன் மண்டபத்தில் இடம் பெற்றது. தலைமைதாங்கி தோழர் ஞா.சிறிமனோகரன் உரையாற்றுவதையும் நினைவுரை நிகழ்த்திய தோழர் இ. தம்பையா மற்றும் தோழர் ந.இரவீந்திரன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# மதங்களால் மக்களுக்கு விமோசனம் கிடைக்காது

## மாக்சிசமும் சோசலிசமும் விடுதலையைத் தரும்

கடந்த 29-11-2008 அன்று தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 19வது நினைவு தினக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி தலைமை உரை நிகழ்த்தும் போது தோழர் ஞா.சிறிமனோகரன் கீழ் வருமாறு கூறினார்.

பத்தொன்பது வருடங்களுக்கு முன்பு மறைந்த தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் நினைவாக நாம் இங்கு கூடியிருக்கிறோம். அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம்.

இங்கு கூடியிருப்பவர்களைப் பார்க்கும் போது எனக்கு ரஷ்யாவின் தற்போதைய நிலை ஞாபகத்திற்கு வருகிறது. அந்தநாட்டில் கம்யூனிஸ்ட்டுகள் கூட்டம் நடாத்தினால் அக்கூட்டத்தில் ஏகப்பெரும்பான்மையினர் தலை நரைத்தவர்களாகக் காணப்படுவார்கள். வயது முதிர்ந்த ரஷ்யர்கள் சோசலிச ஆட்சியின் கீழ் வாழ்ந்தவர்கள். தற்போது முதலாளித்துவ ஆட்சியின் கீழ் வாழுகிறார்கள். அவர்களுக்கு சோசலிச ஆட்சியின் மேன்மையும் முதலாளித்துவ ஆட்சியின் சீரகேட்டையும் நேரிடையாகவே காணமுடிகிறது. சோசலிசத்தின் கீழ் நாடு மீண்டும் செல்லவேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ளவர்களில் அதிகமானோர் வயது முதிர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். இளைஞர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். இன்றைய அரசியல் சமூகச் சூழலின் தவறான வழிகாட்டலால் உலகமயமாதல் மயக்கத்தால் நமது இளைஞர்கள் திசைதவறி நிற்பதையே இது காட்டுகிறது. தோழர் மணியம் என எங்கள் எல்லோராலும் அழைக்கப்பட்ட கே.ஏ. சுப்பிரமணியம் அவர்களை இங்குள்ள இளம் தலைமுறையினருக்கு தெரியாது. ஆனால் அவர் பின்பற்றிய பொதுவுடைமைக் கொள்கையும் அதற்கான நடைமுறையும் இன்றுவரை அவருக்கு பின்பும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு முன்னெடுக்கப்படுவது தோழர் மணியத்தை நினைவு கூர்வதற்கு உரிய முக்கியத்தை வழங்குகிறது. அந்த அளவிற்கு தோழர் மணியம் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக இயங்கி வந்தவர். பொதுவுடைமை இயக்கத்தில் நான் தொடர்புபட்ட அறுபதுகளில் இருந்து தோழர் மணியத்தை நன்கு அறிவேன். அவருடன் இணைந்து வாலிபர் இயக்கத்திலும் கட்சியிலும் வேலை செய்து வந்திருக்கிறேன். அவர் மக்களையும் கட்சியையும் நேர்மையாக வேலை செய்த தோழர்களையும் மதித்து உற்சாகமூட்டி அணிதிரட்டி பல நிலைகளில் வேலைகளை முன்னெடுத்த தோழராக இருந்து வந்தார். அக்காலத்தில் யாழ் நகரப் பகுதியில் நான் இணைந்து வேலை செய்த சில தோழர்களின் பெயர்கள் ஞாபகம் வருகிறது. தோழர்கள் செ. யோகநாதன், பெனடிற்பாலன், நவம், செல்வ பத்மநாதன் யாழ் தபால் நிலையத்தில் கடமையாற்றிய நாதன், கனகரட்ணம், இலட்சியபூபதி, கணேஷ்வேல் குணரத்தினம் இவர்களில் பெரும்பாலானோர் மறைந்துவிட்டனர். அவர்களில் ஒவ்வொரு தோழரினதும் சிறப்புத் திறமைகளை இனங்கண்டு அவரவர் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு ஊக்கம் கொடுப்பதில் தோழர் மணியம் முக்கியமானவராக இருந்தவர். தோழர் நாதன் அரச ஊழியர் என்பதால் அவர் கட்சிக்காக என்ன வேலையைச் செய்யலாமென ஆலோசனை வழங்கி அவரின் சேவையை கட்சிக்காகப் பெறுவதில் வழிகாட்டியமை நினைவுக்கு வருகிறது. என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எழுதுவதற்கு உற்சாகமூட்டி எழுத வைத்தவர் தோழர் மணியம். மொழி பெயர்ப்பு வேலை செய்வதற்கும் உற்சாக மூட்டியவர். இலங்கை சீன நட்புறவு சங்கத்தில் அன்று இணைந்து செயற்படத் தூண்டியவர். இலங்கை சீன நட்புறவுச் சங்கத்தின் தாய்ச் சங்கத்தில் எனது பெயரைச் சிபார்சு செய்து அங்கத்தவராக்கியதும் அவரே. முதலாவது ஆண்டிற்கான எனது சந்தாவையும் அவரே செலுத்தினார் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அச்சங்கத்தின் நிர்வாகக் குழுவில் கடமையாற்றச் செய்து அதன் மூலம் கட்சிக்குரிய நண்பர்களை உருவாக்க ஊக்கம் தந்தவர் தோழர் மணியமாவார்.

தோழர்களே! சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் உலகளாவிய ரீதியில் பல பின்னடைவுகளைச் சந்தித்த மாக்சிஸ்டுகள் தற்போது மீண்டும் உற்சாகமாக செயற்பட ஆரம்பித்துள்ளனர். மாக்சிசம் தோற்றுவிட்டது என்று புலம்பியவர்கள் இன்று உலகப் பொருளாதார நெருக்கடியால் வாய் மூடி நிற்கின்றனர். மாக்சின் "மூலதனத்தை" மீண்டும் படிக்க முற்படுகின்றனர்.

நமது நாட்டின் புத்தி ஜீவிகளில் சிலர் உலக சோசலிச இயக்கம் வெற்றிகளைப் பெற்ற வேளை தங்களையும் சோசலிச அனுதாபிகளாகக் காட்டிக் கொண்டனர். உலக சோசலிச இயக்கம் பின்னடைவுகளை சந்தித்த போது நம்பிக்கை இழந்து பக்கம் மாறி நின்றதுடன் சீரழிவுப் பாதைகளிலும் பயணித்தனர். இங்கு ஒரு பிரபல்யமான விமர்சகர் ஞாபகத்திற்கு வருகிறார். ஒரு காலத்தில் அவர் "இடது" போல் எழுதி வந்தார். பின்பு அந்த முறையை கைவிட்டு சோசலிசம் தோற்றதாகக் குறிப்பிட்டும்வருகிறார். சோசலிசம் தோற்றதெனக் கூறும் சில படித்தவர்கள் உலகில் மதங்கள் தோற்று விட்டதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

ஐயாயிரம் ஆண்டுக்கு மேலான வரலாற்றை உடைய இந்து மதத்தால் உலகில் எந்த ஒரு நாட்டு மக்களின் விடுதலைக்காகவும் வழிகாட்ட முடிந்ததா? ஏகப்பெரும்பான்மையினரை இந்துக்களாகக் கொண்ட நேபாளத்திற்கு விடிவு காட்ட கம்யூனிஸ்ட்டுகளாலே முடிந்துள்ளது என்பது சமகால வரலாறாகும். 2600 வருடகாலப் பழைமை வாய்ந்த பௌத்த மதத்தால் எந்த ஒரு நாட்டிற்காக வேணும் விடுதலை பெற்றுத்தர முடிந்ததா? மியன்மார் (பர்மா) பௌத்த நாடென்று பெருமை பாராட்டுபவர்களால் அந்த நாட்டு மக்களுக்கு விடுதலைக்கான வழிகாட்ட முடிந்ததா?

2000 ஆண்டு பழைமை வாய்ந்த கிறிஸ்தவ மதத்தால் எந்த நாட்டிற்காகவேனும் விமோசன வழிகாட்ட முடிந்ததா? 1400 வருடமாக விளங்கும் இஸ்லாமிய மதத்தால் பாலஸ்தீனத்திற்கோ அல்லது இஸ்லாமிய நாடுகளுக்கோ விடுதலைக்கு வழிகாட்ட முடிந்ததா? எனவே மொத்தத்தில் உலகில் உள்ள நூற்றுக்கணக்கான மதங்களால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகியும் மக்களுக்கு வழிகாட்ட முடியவில்லை. சுருக்கச் சொன்னால் மதங்கள் யாவும் தோல்வி கண்டுள்ளன என்பதே எனது கருத்துமட்டுமன்றி ஏற்றுக் கொள்ளத் தக்கபொதுக் கருத்துமாகும். அதேவேளை மாக்சிசம் உருவாகி 160 வருடங்களில் லெனினிசமாகி மாஓசேதுப் சிந்தனையாகி சோசலிச அமைப்புகளையும் நாடுகளின் மக்களின் ஈர்ப்பையும் நடைமுறையில் சாத்தியமாக்கியது. சோசலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு தற்காலிகமானதேயாகும்.

எனவே கடந்த கால அனுபவங்களில் இருந்து கற்று மாக்சிஸ லெனிசிசத்தை முன்னெடுத்துச் செல்வதே தோழர் மணியத்தை நினைவு கூறுவதற்குரிய அர்த்தமாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மக்கள் போராட்ட அரசியலை மாகாண சபையிலும் முன்னெடுக்க முடியும்


மலையகத்தில் மாற்று அரசியல் பாதைக்கும் வெகுஜன புரட்சிகர போராட்டப்பாதைக்கும் முடிந்தளவு மக்களுக்கு சேவை செய்வதற்கும் எமது புதிய- ஜனநாயக கட்சியின் வழிகாட்டலில் அதன் பிரதேச சபை உறுப்பினராக இருந்து செயலாற்றி வருகின்றேன். எமது கட்சியை ஆதரித்து என்னை வலப்பனை பிரதேச சபைக்கு மக்கள் பிரதி நிதியாகத் தெரிவு செய்தனர். மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகப் பல்வேறு சவால்கள் எதிர்ப்புக்கள் நெருக்கடிகள் மத்தியில் செயலாற்றி வருகின்றேன். இதில் இருக்கும் முக்கியத்துவம் யாதெனில் ஆளும் ஐ.ம.சு.மு கட்சியுடனோ, அல்லது ஐ.தே. கட்சியுடனோ ஜே.வி.பி யுடனோ அணிசேராமல் கடந்த இரண்டு வருடங்களாக வலப்பனை பிரதேச சபையின் உறுப்பினராக மக்களுக்கு சேவையாற்றி வருகிறேன் என்பதாகும்.
எனது முயற்சியின் காரணமாகவே வலப்பனை பிரதேச சபை கூட்டங்கள் சமநேரத்தில் தமிழ் மொழி பெயர்ப்பு செய்யப்படுகின்றது. கூட்ட அறிக்கைகள் தமிழில் கிடைக்கின்றன. வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட வாசிகசாலைகளில் தமிழ் பத்திரிகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனக்கு முதல் அங்கம் வகித்த எந்தவொரு கட்சியைச் சேர்ந்தவர்களால் குறிப்பாக தமிழ் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படாத நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன். இது எமது கட்சியின் கொள்கை வேலைத்திட்டங்களுக்கு கிடைத்த வெற்றியாகும். இவ்வாறான சேவையை மாகாண மட்டத்திற்கும் விஸ்தரிப்பதற்கு எமது புதிய- ஜனநாயக கட்சியின் சுயேச்சைக் குழுவின் "கேத்தல்" சின்னத்திற்கு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேசசபை உறுப்பினருமான தோழர் ச. பன்னீர் செல்வம் குறிப்பிட்டார்.
ஹைபோரஸ்ட்டில் வலப்பனை பிரதேச வாக்காளர்களை சந்திக்கும் நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**புதிய- ஜனநாயக கட்சியின்
வலப்பனை பிரதேச சபை உறுப்பினர்
தோழர் பன்னீர்செல்வம்**

பிரதேச சபை உறுப்பினரொருவருக்கு ஒதுக்கப்படும் பணம் மிகவும் சொற்பமானது. கடந்த இரண்டு வருடங்களாக எனக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் சிறிய சிறிய அபிவிருத்தி வேலைகளை செய்துள்ளேன். ஒதுக்கப்பட்ட பணம் திருப்பி அரசாங்கத்திற்கு அனுப்பப்படும் வகையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளாமல் ஏனோதானோ என்று நாம் இருந்து விடவில்லை.
அன்று புதிய- ஜனநாயக கட்சி வெற்றி பெறாது என்றார்கள். நான் மக்களால் வலப்பனை பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டேன். எமது கட்சி தொடர்ந்து எடுத்து வருகின்ற மக்கள் போராட்ட அரசியலை நான் பிரதேச சபைக்குள்ளும் முன்னெடுத்து வருகிறேன். அதனால் மக்களுக்கு சேவை செய்ய முடிவதுடன் மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும் முடிந்துள்ளது.

எனது முயற்சியினால் வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட ஹைபோரஸ்ட், எம்ரொஸ்ட் ஆகிய கடை வீதிகள் பட்டினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதனால் அவற்றுக்கு பிரதேசசபையின் உட்கட்டமைப்பு வசதிகள் கிடைக்கும் நிலை தோன்றியுள்ளது. அவற்றின் அபிவிருத்திக்குத் தொடர்ந்து பணி புரிவேன்.
மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேயிலைத் தோட்டங்களில் காணி ஒதுக்கப்பட்டு



பேரினவாத நோக்கக் குடியேற்றங்களை ஏற்படுத்த ஜே.வி.பி உறுப்பினர் மேற்கொண்ட முயற்சியை தடுத்து நிறுத்த பலவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்தேன். அதனால் அக் குடியேற்ற முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.
இவற்றையெல்லாம் எனது பிரதேசசபை உறுப்புரிமையினூடாக மக்களின் ஆதரவுடன் உறுதியாக முன்னெடுத்த நடவடிக்கைகள் ஆகும். எனவே மாகாண சபையிலும் முன்னெடுக்கப்பட முடியும். அதற்கு எமது கட்சிக்கு மாகாணசபை உறுப்புரிமை தேவை. எனவே வருகின்ற மாகாணசபைத் தேர்தலில் மத்திய மாகாண சபைக்காக நுவெரெலிய மாவட்டத்தில் சுயேச்சையாக "கேத்தல்" சின்னத்தில் போட்டியிடும் எமது புதிய- ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதன் மூலம் மலையகத்தில் மக்கள் பலத்தை அதிகரிக்க முடியும்.

# அடுத்த கல்வி அமைச்சர் யார்? மலையக ஆசிரியர் ஓட்டம்


மத்திய மாகாண சபைத் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில் அடுத்த கல்வியமைச்சர் அருள்சாமி தான் என்று சில ஆசிரியர்களும் இல்லை இராதாகிருஷ்ணன் தான் என்று சில ஆசிரியர்களும் ஓடித்திரிவதை இப்போது காணமுடிகிறது. இவர்க ளில் பலர் அடுத்து வரப்போகும் கல்வியமைச்சரால் தாம் பழி வாங்கப்பட்டு விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையுடன் இருப்பவர்கள் ஒருவகையினர் மேலும் கடந்த மாகாணசபையில் கல்வி அமைச்சராக அருள்சாமி இருந்த போது அவருடன் கூடிக் குலாவியவர்களும், அருள்சாமியிடம் முக்கிய பதவிகளில் இருந்து சுகம் கண்டவர்களும் இவ்வகையானவர்களில் அடங்குவர். அதிபர் பதவி களை எதிர்பார்த்து இவரது காலைப்பிடித்தால் சரியாக வரும் எனக் கனவு காண்கின்றவர்களும் இவ்வாறு ஓடித்திரிகின்றவர்களில் கணிசமானோர் உள்ளனர். இது இவ்வாறு இருக்க அருளின் அமைச்சரவைக் காரியாலயத்தில் பதவிகளில் இருந்து சுகம் கண்ட வர்கள் சிலர் இராதாகிருஷ்ணனிடம் தஞ்சம் கோரியதாகவும் தெரிகிறது.
இன்னொரு வகையினர் தாம் அருள்சாமி காலத்தில் பழிவாங்கப்பட்டதாகவும் இந்தியாவுக்கு கற்றலுக்காக தமக்கு விரும்பியவர்களையே அருள் அனுப்பிவைத்ததாகவும் கூறி ஆதலால் இராதாவை ஆதரிப்பதாகவும் கூறுகின்றனர். இதற்கு மாறாக அருள் அடுத்த கல்வியமைச்சராக வருவார் ஆதலால் அவரை ஆதரிக்க வேண்டும் என்று ஓடித்திரிகின்ற சிலரும் உள்ளனர். ஆனால் இவ்வாறு ஓடித்திரிகின்றவர்களுக்கு சாதி ரீதியிலான சார்பும் உள்ளதை மறைமுகமாக காணமுடிகிறது.
இந்தச் சூழ்நிலையில் இன்றுவரை எவ்வித உரிமையும் அற்று வாழ்ந்து வருகின்ற தோட்டத் தொழிலாளர்களின் வாரிசுகள் கற்று வந்தால் அம் மக்களின் விடுதலைக்காக உழைப்பார்கள் என்பது பொய்யாய் பழங்கனவாய் போய் விடும் போல் உள்ளது. கற்றவர்கள் என்றுக் கூறித்திரிகின்ற ஆசிரியர்களுக்கு சமூகப் பொறுப்பொன்று உள்ளது என்பதை மறந்து விடுவதும் அவர்கள் தமது தேவையை மட்டுமே முதன்மைப்படுத்தி ஏமாற்றுக்காரர்களுக்குப் பின்பு ஓடித்திரிவதும் சமூக அவலமாகும். ஒருவரை ஆதரிக்கின்ற போது அவரது அரசியல் சார்பு அவர் அங்கம் வகிக்கின்ற கட்சியின் நேர்மை மற்றும் மக்கள் சார்பு குறித்து அக்கறை காட்டாது விடுவது என்பது பெரும் அறிவீனம் போல் தோன்றுகிறது.
நடைபெறுகின்ற யுத்தச் சூழ்நிலையில் பேரினவாதிகளுக்கு சார்பாக உள்ளவர்களுக்கு வாக்களிக்கும் தமது நிலை குறித்து ஆசிரியர்கள் அறிவுடன் சிந்திக்க வேண்டும். மலையக மக்களுக்கும் இயற்கைக்கும் எதிராக உள்ள மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை எதிர்க்காதது மட்டுமில்லாது அந்தத்திட்டத்தைப் பயன்படுத்தி சீமெந்திலும் கல்லிலும், மணலிலும் கொமிஷன் வாங்கி லாபம் சம்பாதிக்கின்றவர்களை சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல்களில் கைதாகின்ற இளைஞர்களின் விடுதலைக் குறித்துப் பேசாதவர்களை தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களை மலையக மக்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை மோசடியால் சுருட்டியவர்களை இன்னும் மலையக மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவர விரும்பாத பண்ணையாளர்கள் போல் செயற்படுகின்றவர்களை மீண்டும் மீண்டும் ஆதரிக்கின்றவர்களை வரலாறு மன்னிக்கும் என்று யாராலும் நம்ப முடியுமா?

# வரலாற்றைப் புரிந்து கொள்வதன் இடர்ப்பாடுகள்

**இலங்கையில் தமிழர், கலாநிதி முருகர் குணசிங்கம், எம்.வி. வெளியீடு, தென்னாசிய ஆய்வியல் மையம் த.பெ. எண் 5317, சுலொரா சிட்னி நியூ சவுத் வேல்ஸ் 2190, அவுஸ்திரேலியா, 2008, பக். 678 (விலை குறிப்பிடவில்லை).**

இலங்கைத் தமிழரின் வரலாற்றைத் தொகுத்துக் கூறுகிற முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த நூலிற் பயனுள்ள தகவல்கள் பல உள்ளன. இத்தகைய நூலைத் தொகுத்து வெளியிட மிகுந்த முயற்சி தேவை. அதேவேளை இத்தகைய நூல்கள் எதிர்காலத்தில் சான்றுகளுமாகக் காட்டப்படுகிற வாய்ப்புள்ளமையால் தகவல்களின் செம்மையும் முடிவுகளில் தர்க்க ரீதியான அணுகுமுறையும் அவசியமானவை.
வரலாற்று நூல்கள் பொதுவாகவே அகவயப்பட்ட சிந்தனையின் பாதிப்புக்குட்பட்டவை என்பது உண்மை. எனினும் தகவல்கள் விசாரித்துத் தெரிந்தெடுப்பதிலும் இடைவெளிகளை நிரப்புவதிலும் ஒரு வரலாற்றாசிரியர் தனது நோக்கிற்கு உடன்படாத புறவயமான உண்மைகளைப் புறக்கனித்தாலும் தனக்கு வசதியான பல வரலாற்று நிகழ்வுகளை அகச்சார்பாக வியாக்கியானஞ் செய்ய முற்பட்டாலும் அது அவரது தகைமையைக் கேள்விக்கு உட்படுத்தச் செய்யும்.
எனினும் சமூக முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ள சூழ்நிலைகளில் வரலாறும் ஒரு அரசியல் கருவியாகிறது. எனவே வரலாற்றாசிரியர்கள் முற்றுமுழுதாக வர்க்க நோக்கு அரசியல் நிலைப்பாடு என்பன கடந்தவர்களாகச் செயற்படுவது அரிது. தமது நிலைப்பாடும் பார்வையும் பற்றி ஒழிவு மறைவின்றியும் உண்மையென அறிந்தவற்றைத் தயங்காமலும் இருப்பார்களாயின் அவர்கள் கூறுகிற விடயங்கள் சமூகப் பயனுடையவையாய் அமையும்.
முருகர் குணசிங்கத்தின் நிலைப்பாடு தமிழ்த் தேசியவாத நிலைப்பாடென்பதில் ஐயமில்லை. எனினும் அவர் பல தமிழ்த் தேசியவாதிகட்குரிய குறுகிய இனப்பகை நோக்கைக் கொண்டவரல்ல என்பதை அவரது எழுத்திற் காணலாம். அவர் பழைமைவாதப் போக்கை நிராகிப்பவராகவும் காணப்படுகிறார். எனினும் சில வரலாற்று நிகழ்வுகளை முன்வைக்கும் போது தனது ஊகங்கட்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்குவது நூலை பலவீனப்படுத்துகிறது.
முக்கியமாகச் சில நிகழ்வுகளின் பின்னணியிலிருந்த காரண காரியங்களை வெறுமனே ஊகங்களாக வெளிப்படுத்துவது ஒரு வரலாற்று நூலுக்கு நல்லதல்ல.

உதாரணமாக ஜி.ஜி. பொன்னம்பலம் தனது 50-50 கோரிக்கையை கைவிட்டுச் சிங்கள அரசுடன் ஒத்துழைக்க ஆயத்தமாயிருந்தார் என்பதை விரிவுபடுத்தி எழுதும் "போது இலங்கையருக்கு பிரித்தானியா டொமினியன் அந்தஸ்து வழங்கப் போகின்றது என்பது டி.எஸ். சேனநாயக்காவுக்கு ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தமையை பிரித்தானிய ஆவணங்களினூடாக அறிய முடிகிறது. இச் சந்தர்ப்பத்தில் விவேகமும் திறமையும் தூர நோக்கும் கொண்ட டி.எஸ். சேனநாயக்கா தமிழர் தலைவரான பொன்னம்பலம் அவர்களுடன் நிச்சயம் பேச்சு வார்த்தை நடத்தியிருப் பார்" என்பது 557ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து




"1945ல் முடிவுக்கு வந்த உலக மகாயுத்தத்தின் பின் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படவுள்ளது என்ற செய்தி அவர்களுக்கு நிச்சயம் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கும்..... டி.எஸ். சேனநாயக்க இரகசிய வாக்குறுதிகளை பொன்னம்பலம் அவர்கட்கும் ஏனைய தமிழ்த்தலைவர்களுக்கும் வழங்கி தமிழ்த் தலைவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படுமென்று நிச்சயமாக வாக்குறுதி அளித்திருப்பார்" என்று கூறப்படுகிறது. இந்த விதமான ஊகங்கள் நூலாசிரியர் முன்வைக்கும் முக்கியமான வாதத்திற்குக் கேடு செய்கின்றன. ஏனெனில் நடந்தவற்றை முன்வைத்து நோக்கங்களையும் பின்னணியையும் ஓரளவுக்கு உய்த்தறியலாம். ஆனால் இன்னின்ன விதமாக நடந்திருக்கலாம் என்று கூறுவதற்கான ஆதாரங்கள் இல்லாத போது வாதங்கள் முழுமையாகவே நம்பக மற்றவையாகின்றன.
தகவல்கள் பற்றிய செம்மையும் குறிப்பாகச் சென்ற நூற்றாண்டின் பிற் பகுதி பற்றிய பல குறிப்புக்களிற் போதாமல் உள்ளது.
1957ல் நாடெங்கிலும் தமிழரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகம் என்ற குறிப்பு (ப.608) சரியானதல்ல "1958 முற்பகுதியில் இலங்கை அரசு யாழ்ப்பாணத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகை பஸ் வண்டிகளை அனுப்பிவைத்தது. இவற்றின் இலக்கத்தகடுகளில் சிங்கள சிறீ எழுத்து புகுத்தப்பட்டிருந்தது" என்று அதே பக்கத்தில் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை விளக்கியுள்ளார். உண்மையில் அரசாங்கம் சிறீ இலக்கத்தகடு பொருந்திய பஸ்களை அனுப்பாமல் அதனை மறித்த தமிழ்த் தலைவர்கள் சிறி இலக்கத்தகடு பொருந்திய கார்களில் பயணம் செய்யத் தொடங்கிப் பல காலம் பிறகுதான் தமிழ் தலைவர்களுடன் உடன்பட்டு அரசாங்கம் சிங்கள சிறீ பஸ்களை அனுப்பியது. அது வரை பழைய பஸ்களில் தான் யாழ்ப்பாண மக்கள் பயணம் செய்ய வேண்டி இருந்தது.
இலங்கைத் தமிழர் வரலாறு என்று கூறப்பட்டாலும் இந் நூலின் பிரதான அழுத்தம் யாழ்ப்பாணக் குடாநாடு சார்ந்த தமிழர் பற்றியதாகவே உள்ளது. மலையகத் தமிழரை இன்னொரு தேசிய இனமென்றும் முஸ்லிம்களைத் தமிழரல்லாதார் என்றும் நூலாசிரியர் கருத்தியதாகக் கொண்டாலும் கிழக்கிலும் மேற்குக் கரையிலும் வாழ்ந்த தமிழரின் நிலைமைகள் பற்றி அதிகம் பேசப்படவில்லை. அதை விடவும் நூல் மிகவும் அழுத்தம் செலுத்திய குடாநாட்டுச் சமூகத்தின் சாதிப் பிரச்சனையும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களும் கவனிப்பும் பெறாமை பாரியதொரு குறைபாடாகும்.
நூலின் தலைப்பு இலங்கையில் தமிழர் என்று இருப்பதனால் மேற் குறிப்பிட்ட குறைபாடுகள் முக்கியமானவையாகின்றன.
எவ்வாறாயினும் குறைபாடானவையாயிருந்தாலும் பயனுள்ள பல தகவல்களை உள்ளடக்கியுள்ள இந்த நூலில் பதிவாகியுள்ள பல்வேறு விடயங்கள் அரசியல் வரலாற்று அக்கறையுள்ள தமிழ் வாசகர்கட்குப் பயனுள்ளவை எனும் வகையில் இந் நூல் வரவேற்கத்தக்க ஒரு முயற்சியாகிறது.

சிவா

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 16

## அரசியல் அடையாளங்கள் உருப் பெறுகின்றன

டொனமூர் யாப்பின் முக்கியமான போதாமையாக அடையாளங் காணப்பட்டது ஏதென்றால் அது இலங்கையின் அரசியல் அதிகாரத்தின் மீது கொலனிய ஆட்சியின் பிடியை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தமை தான். இந்த அடிப்படையிலேயே வாலிபர் அணிகள் (வாலிபர் காங்கிரஸ்) எனும் அமைப்புக்கள் அதனை எதிர்த்தன. யாழ்ப்பாணத்தில் வாலிபர் காங்கிரஸ் பொது மக்கள் மத்தியில் ஊக்கமாகச் செயற்பட்டு டொனமூர் யாப்பை எதிர்த்து அரசுச் சபை (சட்ட சபை) தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்தது போலத் தென்னிலங்கையில் இருந்த அமைப்புக்களாற் செய்ய இயலவில்லை. தென்னிலங்கையில் ஆதிக்கத்தில் இருந்த இலங்கை தேசிய காங்கிரஸ் அதன் தலைமையில் இருந்த பிற்போக்கு வாதிகளின் நெகிழ்வான போக்கையே அனுசரித்தது. 1929ல் இலங்கையருக்கு அதிக அளவிலான அதிகாரங்களை மிக மன்றாட்டமான முறையிலேயே கோரிய இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவர்கள் டொனமூர் ஆணைக்குழு அவர்களது வேண்டுகோள்களை நிராகரித்த பின்பும் கொலனி ஆட்சிக்குக் கீழ்ப்படிவான தமது போக்கைத் தொடர்ந்தனர்.

டொனமூர் ஆணைக்குழுவின் முடிவுகளை ஏற்று அதை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பது என்ற இலங்கை தேசிய காங்கிரஸின் முடிவை ஏற்க மறுத்தவர்களுள் ஈ.டபிள்யூ. பெரேரா முக்கியமானவர். இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவரான அவர் டொனமூர் ஆணைக்குழுவினருடன் இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பாகக் கருத்துரைக்கச் சென்ற தூதுக் குழுவின் தலைவருமாவார். ஒத்துழைப்பதற்கான முடிவை அவரால் ஏற்க இயலவில்லை. பொறுப்பதிகாரமுடைய அரசாங்கமொன்றை வழங்க டொனமூர் ஆணைக்குழு மறுத்ததை அதி வன்மையாகக் கண்டித்த அவர் அகில இலங்கைத் தாராண்மை அணி (லிபரல் லீக்) எனும் அமைப்பை நிறுவினார். அதில் இணைந்த இளம் அரசியல்வாதிகளில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவும் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் முக்கியமானவர்கள். இந்த அமைப்பு வெகு விரைவிலேயே டொனமூர் ஆலோசனைகளுக்கு எதிரான அரசியற் செயற்பாடு என்ற தனது பிரதான நோக்கத்திலிருந்து விலகி வசதி படைத்த நடுத்தர வர்க்கத்தினரது பிரச்சினைகள் பற்றிப் பேசுகிற ஒரு அமைப்பாகிச் சீரழிந்தது.

வடக்கிலே பகிஷ்கரிப்பு இயக்கம் வெற்றி பெற்றதற்கான காரணம் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் ஊக்கம் மிக்க செயற்பாடு என்பதில் ஐயமில்லை. பகிஷ்கரிப்பைச் சிலர் ஆதரித்த காரணம் டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் விளைவாகத் தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்து விடும் என்பதாக இருந்தாலும், வாலிபர் காங்கிரஸ் அந்த நோக்கில் தனது பிரசாரத்தை முன்னெடுக்கவில்லை என்பது முக்கியமானது. வைத்திலிங்கம் துரைசாமி தவிர்ந்த யாழ்ப்பாணத்தின் மேட்டுக்குடி அரசியல்வாதிகளும் பழமைவாதிகளும் குறுகிய தமிழ் இனவாதிகளும் டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்பதா எதிர்ப்பதா என்பதில் மேற்கொண்ட நிலைப்பாடு இலங்கை தேசிய காங்கிரஸ் தலைமையின் நிலைப்பாட்டினின்று அதிகம் வேறுபடவில்லை. அவர்கள் இலங்கையினருக்கு அரச நிருவாகத்தில் பொறுப்பதிகாரம் இல்லாவிட்டாலும் பிரதிநிதித்துவத்தின் மூலம் கிட்டக் கூடிய சலுகைகளையும் தனிப்பட்ட செல்வாக்கையும் கொலனிய அதிகாரத்திடமிருந்து தமக்குக் கிட்டக் கூடிய சிறு சிறு அதிகாரங்களையும் இழக்க விரும்பவில்லை.

இலங்கை தேசிய காங்கிரஸ் தலைமையிலிருந்தவர்கள் வடக்கில் பகிஷ்கரிப்பு இயக்கம் பெற்ற வெற்றிக்குத் தமிழர் பிரதிநிதித்துவம் போதாமையே காரணம் என்று பேரினவாதக் கண்ணோட்டத்தில் விளக்கி, அதன் அடிப்படையில் தேர்தலில் பங்கு பற்றும் முடிவில் தீவிரமாயினர். இந்த முடிவின் மூலம் இலங்கையின் எதிர்காலத் தேர்தல்கள் அனைத்திலும் குறுகிய இனவாதச் சிந்தனைகளே ஆதிக்கஞ் செலுத்துவதற்கான உறுதியான அத்திவாரம் அன்று இடப்பட்டது.

முதலாவது சட்டசபையில் தமிழரது பிரதிநிதித்துவம் மிகவுங் குறைவாக இருந்த நிலையில் கொலனி ஆதிக்கம் வடக்கில் மீளவும் தேர்தல் நடத்துவதற்கான அக்கறை காட்டவில்லை. தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டோர் கெஞ்சி மன்றாடியே சட்டசபைப் பிரதிநிதித்துவத்தைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ் மக்கள் எடுத்த முடிவை மதித்து அதன் அடிப்படையில் ஒரு வெகுசன இயக்கத்தைச் சட்ட சபையின் அரசியல் வரம்புகட்கு வெளியே முன்னெடுக்கத் தக்க ஒரு மனநிலை அன்றைய தமிழ்த் தலைமையில் முக்கியமானவர்களிடம் இருக்கவில்லை. மாறாக வாலிபர் காங்கிரஸ் எடுத்த தீர்மானம் தவறானது என்று மேட்டுக்குடிகள் வற்புறுத்தி அந்த முடிவை நிராகரித்தனர். அதன் பின்பு வாலிபர் காங்கிரஸ் தனது அரசியல் சமூக முக்கியத்துவத்தை இழந்து போயிற்று.

டொனமூர் யாப்பின் கீழான முதலாவது சட்ட சபைக்கு எஸ்.ஏ. விக்ரமசிங்ஹ தெரிவு செய்யப்பட்டமை இடதுசாரி இயக்கத்தின் உருவாக்கத்திற்கு ஒரு முக்கிய பங்களித்தது. கொலனிய எசமானத்துவத்திடம் மன்றாடிப் பெற்ற வடக்கிற்கான தேர்தலின் மூலம் நால்வர் 1934ல் சட்ட சபைக்குச் சென்றனர். அவர்களுள் முக்கியமானவராக ஜி.ஜி. பொன்னம்பலத்தைக் குறிப்பிடலாம்.

இந்தச் சட்ட சபைக்குள்ளே எதிர்கால இலங்கையின் தேசிய இன உறவுகட்குக் கேடாக அமையக் கூடிய பலவேறு விடயங்கட்குக் கட்டியங் கூறுகிற விதமான நிகழ்வுகளைக் காண முடிந்தது. சிங்களப் பேரினவாத அரசியல் தன்னை மேலும் இறுக்கமாக்கிக் கொள்வதற்கான அறிகுறிகள் இலங்கைத் தேசியக் காங்கிரஸில் தெரிய வந்தாலும் அதை வெளிவெளியாக அடையாளப்படுத்துகிறதற்கான சூழ்நிலையை சட்ட சபைத் தேர்தல் முறை உருவாக்கியது. ஏற்கனவே சிங்கள-தமிழ் மேட்டுக் குடிகளின் போட்டி உருவாகி விட்டதன் பின்பு சர்வசன வாக்குரிமையின் அடிப்படையிலான பொதுத் தேர்தல்களில் வாக்காளர்களைத் தமக்குச் சார்பாக அணி திரட்டுவதற்குத் தேசிய இனங்கள் அனைத்தினதும் பொதுவான நலனை வற்புறுத்துவதை விட இன, மத, சாதி அடையாளங்களை இடத்துக்கேற்றபடி வற்புறுத்துவது வசதியாயிருந்தது. இவற்றுள் சாதி என்பதை வெளிவெளியான அரசியல் அடையாளமாக்குவது தேர்தல் அரசியலில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதால் இனமும் மதமும் முக்கியமானவையாக இருந்தன. தென்னிலங்கையின் மேட்டுக் குடிகளிடையே பல தலைமுறைகளாகக் கத்தோலிக்கர்களாக இருந்தோரைப் போலல்லாது சந்தர்ப்பவாத நோக்கங்கட்காக மதம் மாறிய கிறிஸ்தவர்கள் முக்கியமானவர்களாக இருந்தனர். மதம் மாறித் தங்கள் மேலைத் தேயத் தன்மையுடைய பண்பாட்டு அடையாளங்களை மூடி மறைத்துச் சிங்களத் தேசியவாதத்தை முன்னெடுப்பது அவர்கட்கு இயலுமாக இருந்தது. மதம் மாறாதவர்கள் கூடத் தங்கள் முழுப் பேரில் ஆங்கிலப் பேர்கள் ஒன்றிரண்டையாவது கொண்டிருப்பதை வழமையாக்கிக் கொண்டனர். பின்னர் இது நடுத்தர வர்க்கத்தினரிடையிலும் தொற்றிக் கொண்டது.

தமிழரிடையே சைவ வேளாள ஆதிக்கமே ஓங்கியிருந்ததால் கிறிஸ்தவ மேட்டுக்குடியினரது அரசியல் முக்கியத்துவம் குறைவாகவே இருந்தது. முற்போக்குச் சிந்தனையுள்ள கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் மும்முரமாக இயங்கிய போது ஆற்றிய பங்கைச் சட்ட சபைக்குள் ஆற்ற இயலவில்லை.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் இலங்கையின் பலவேறு சமூகங்களையும் ஒன்று சேர்த்து இலங்கைத் தேசியம் ஒன்றைக் கட்டியெழுப்பும் அக்கறையுடையதாக இருந்திருந்தால் மக்களைச் சென்றடைய வேண்டி 1919ம் ஆண்டு அது உருவாக்கிய சிங்கள மகாஜன சபை போன்ற அமைப்புக்களைத் தமிழரிடையிலும் முஸ்லிம்களிடை யிலும் தனது தலைமைத்துவத்தின் கீழேயே உருவாக்கியிருக்கும். அவ்வாறான ஒரு பார்வை இலங்கை தேசிய காங்கிரசை உருவாக்க முன்னின்ற பொன்னம்பலம் அருணாசலத்திடம் இருந்த அளவுக்குச் சிங்கள மேட்டுக்குடிகளிடம் இருக்கவில்லை என்பதையே வரலாறு வற்புறுத்தி வந்துள்ளது.

இரண்டாம் உலகப் போரின் காரணமாகத் தேர்தல் நடத்த இயலாததால் 1936ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது அரசுச் சபை (சட்ட . சபை) 1947ம் ஆண்டு வரை நீடித்தது. 1935ல் உருவான லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பிற் போட்டியிட்டு வென்ற இரு வரும், 1934ல் சட்ட சபைக்குத் தெரிவானது முதல் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவராகத் தன்னை அடையாளப்படுத்தி வந்த ஜி.ஜி. பொன்னம்பலமும் சிங்கள மகாஜன சபையின் வாரிசாக சிங்கள மகா சபையை உருவாக்கிய பண்டாரநாயக்கவும் இலங்கை அரசியலில் எதிர்காலத்தில் வரவிருந்த முக்கியமான மூன்று அரசியற் போக்குக்களை அடையாளப்படுத்தினர். பேரினவாத ஆதிக்கத்திற்குட்பட்டதான இலங்கை தேசிய காங்கிரஸின் அரசியற் தொடர்ச்சியாக யூ.என்.பியைக் கருத இடமுண்டு. ஒரு அரசியற் கட்சிக்குரிய கட்டுக்கோப்பான தன்மையும் தெளிவான அரசியல் வேலைத் திட்டமுமற்ற சிங்கள மேட்டுக்குடிகளின் வர்க்க நலன் சார்ந்த அமைப்பாகவே இருந்து வந்த இலங்கை தேசிய காங்கிரசுக்கும் 1947ல் நடந்த பொதுத் தேர்தலை முன்னிறுத்திப் பலவேறு சிங்களப் பேரினவாத அமைப்புக்களை உள்ளடக்கி 1946ல் உருவாக்கப்பட்ட யூ.என்.பிக்குமிடையே இருந்த பல ஒற்றுமைகள் 1947ம் ஆண்டு தேர்தலில் யூ.என்.பியினரே ஆளை ஆள் எதிர்த்துப் போட்டியிட்டதில் தெரிய வந்தது.

இத்தகைய பின்னணியில் கட்டுக் கோப்பான ஒரு அரசியற் கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி இருந்து வந்தது. இரண்டாவது சட்ட சபைக்கான தேர்தலில் இடதுசாரி வேட்பாளர்களான என்.எம். பெரேராவும் பிலிப் குணவர்த்தனவும் முறையேறுவன்வல்ல, அவிஸ்ஸாவல தொகுதிகளில் பெற்ற வெற்றிக்கு 1934-35 காலப் பகுதியில் இடதுசாரிகள் மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் போது ஆற்றிய சேவையின் பங்கும் முக்கியமானது. முதலாவது சட்ட சபையிலிருந்த எஸ்.ஏ. விக்ரமசிங்ஹவை அவரது மொறவக்க தொகுதியிற் தோற்கடிப்பதற்கு பிற்போக்குவாதிகளது கடும் முயற்சி வெற்றி பெற்றதால் அவர் சட்ட சபைக்குப் போக இயலவில்லை.

எவ்வாறாயினும் இரண்டாவது சட்ட சபைக் காலத்தின் போது நட ந்த உலகப் போர் இலங்கையின் வரலாற்றின் முக்கியமான பல திருப்பு முனைகளைத் தோற்றுவித்தது.

## கார்ல் மாக்சின் மூலதனத்திலிருந்து

இன்று முதலாளித்துவ உலகம் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நிதி நெருக்கடி பற்றி சுமார் 150 வருடங்களுக்கு முன்பே கார்ல் மாக்ஸ் முதலாளித்துவம் பற்றிய தனது தெளிவான ஆய்வில் எடுத்துக் கூறியிருந்தார். சோசலிசம் தோல்வி கண்டு விட்டது அதுபற்றி ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லையெனக் கூறும் நிபுணர்கள் முதலாளித்துவம் தோல்வியடையவில்லையென்றே இன்றும் வாதிட முன்நிற்கின்றனர். முதலாளித்துவ உலகம் 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டிலும் பல தடவைகள் கடுமையான நெருக்கடிகளை தாண்டி வந்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு இரண்டு உலக யுத்தம் மூலமும் சிறுசிறு பிராந்திய யுத்தங்கள் மூலமும் தற்காலிகத் தீர்வு கண்டு வந்துள்ளதே தவிர நிரந்தர தீர்வைக் காணவியலவில்லை. காரணம் முதலாளித்துவத்திற்கு தனது நெருக்கடிக்குத் தீர்வு காணும் ஆற்றல் இல்லை. அவ்வப்போது நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை கடலில் கொட்டியும் நிலங்களில் போட்டு உழுதும் நாசமாக்குவது முதலாளித்துவத்தின் இயல்பு. இத்தகைய முதலாளித்துவம் மீள் பரிசீலனைக்குட்படுத்தப்படத் தேவையில்லை என்றே ஏகாதிபத்தியத் தலைவனான புஷ் கூறுகிறார். இதனை மறுவார்த்தைகளில் நம் நாட்டிலும் மீட்டுக்கொள்கிறார்கள். சக்தி ஒளிபரப்பில் வெள்ளிக் கிழமைகளில் தோன்றும் யூ.என்.பி. பிரமுகரும் பொருண்மிய நிபுணருமான கலாநிதி ஹர்ஷா டி சில்வா இன்றைய நெருக்கடி சூழலில் கூட சோஷலிச அமைப்பை பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையில்லை என்று புலம்பியிருக்கிறார்.

ஆனால் அவர்களுக்குத் தேவையில்லையென்றாலும் மக்களுக்கு மாக்சிசமும் சோசலிசமும் தேவைப்படுகிறது. கார்ல் மாக்சின் 'மூலதனம்' என்ற நூலில் இருந்து ஒரு சிறு பகுதியை கீழே தருகிறோம்.

'மூலதனத்தின் ஆங்கிலப் பதிப்பின் 3ம் அத்தியாயத்தின் 478-479ம் பக்கங்களிலிருந்து :-

"கடனிலேயே தங்கி நிற்கும் அமைப்பில் தொடரும் மீள் உற்பத்தியானது கொடுப்பனவு தொடர்பில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும். சடுதியாக கடன் நிறுத்தப்பட்டு ரொக்கத்தினூடாகவே கொடுப்பனவு சாத்தியமாகும்.மேலெழுந்த வாரியாக பார்த்தால் முழுநெருக்கடியும் கடன்-ரொக்கம் என்ற நிலைக்கு இட்டுச் செல்கின்றது. உண்மையில் இது உண்டியல்களைப் பணமாக மாற்றும் விடயம் சம்பந்தப்பட்டது. இந்த உண்டியல்களில் பெரும்பாலானவை கொள்வனவு விற்பனையைப் பிரதிபலிக்கின்றன. இவை சமுதாயத்தின் தேவைக்கு மிகமிக அதிகமாக இருப்பதே நெருக்கடிக்கான அடிப்படைக் காரணம். அதே சமயம் ஏகப் பெரும்பாலான உண்டியல்கள் பரிமாறப்படும் போது மோசடி இடம்பெறுகின்றது. இது அம்பலமாகும் போது வீழ்ச்சி ஏற்படுகிறது. அத்துடன் பிற மக்களின் மூலதனத்தில் ஊகம் எனப்படுவது (Speculation) சரிவராதபோது பண்டம், மூலதனம் கீழ்மட்டத்திற்கு மதிப்பிறக்கப்படுகிறது. அல்லது முற்று முழுதாக விற்பனை செய்ய முடியாது போகிறது. இல்லாவிடில் நல்ல பெறுபேறு, லாபம் ஏற்படாது போகிறது. முற்று முழுதான செயற்கை முறையான மீள் உற்பத்தி செய்முறையின் நிர்ப்பந்தப்படுத்திய விரிவாக்கத்தை ஒரு வங்கியின் உதவி கொண்டு நிவர்த்தி செய்ய முடியாது. பாங் ஒவ் இங்லண்ட் போன்றவற்றால் (மத்திய வங்கிகளால் சகல சூறையாடுபவர்களின் பற்றாக்குறை மூலதனத்தை கடதாசிகள் மூலமும் (அதாவது வெறுமனே அச்சடிக்கப்பட்ட நோட்டுக்கள்) மதிப்பிறங்கிய பண்டங்கள் அனைத்தையும் முன்னைய பெயரளவு பெறுமதியில் கொள்வனவு செய்தாலும் காப்பாற்ற முடியாது." என்றார் மாக்ஸ்.

இந்த நிதி நெருக்கடி பற்றி கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ என்ன கூறுகிறார் :-

"தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அமெரிக்க நிர்வாகம் மேற்கொள்ளும் கொடூரமான நடவடிக்கை மூலம் அதிக பண வீக்கம் ஏற்படும். தேசிய நாணயங்கள் மதிப்பிறங்கும். சந்தைகளில் அதிக துயர்தரும் இழப்புக்கள் ஏற்படும். பிரதான ஏற்றுமதிப் பண்டங்களின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என்பதுடன் சமனற்ற பரிமாற்றங்கள் அதிகம் ஏற்படும். ஆனால் இது மக்களுக்கு உண்மையைப் புரிய வைக்கும். உணர்வைத் தூண்டும். அதிக கிளர்ச்சிகளையும் புரட்சிகளையும் உருவாக்கும்" கார்ல் மாக்சும், காஸ்ரோவும் கூறியவையே நாம் இன்று நிதர்சனமாய் பார்க்கிறோம். அமெரிக்காவின் மத்திய வங்கியான பெடரில் றிசேவ் 70000 கோடி டொலர்களைக் கொடுத்து பெரிய நிறுவனங்களை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பிரிட்டனின் பாங் ஒவ் இங்கிலண்ட் உட்பட பல்வேறு நாடுகளின் மத்திய வங்கிகளும் முதலாளிகளின் இழப்பை ஈடுகட்ட முன்வந்துள்ளன. இதன் காரணமாகப் பணவீக்கம் அதிகரித்துள்ளது. நமது நாட்டின் தேயிலை குறைந்த விலைக்கே ஏலத்தில் விற்பனையாவதால் ஏலத்திற்கு கொண்டு சென்ற தேயிலையை விற்காமல் மீளவும் களஞ்சிய சாலைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. தைக்கப்பட்ட ஆடைகளுக்கு முன்னர் கொடுத்த விலையில் 65 வீத விலையில் தருமாறு கோரப்பட்டுள்ளது. நமது பொருளாதாரம் ஏகாதிபத்தியப் பொருளாதாரத்துடன் பிணைக்கப்பட்டதன் அபாய விளைவுகளையே நாம் அனுபவித்து வருகிறோம்.

ஜீ. எஸ்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# புஷ் மீது காலணிகள் வீச்சு

ஜோஜ் புஷ் மீது தனது காலணிகளை எறிந்த ஈராக்கியப் பத்திரிகையாளர் முன்தாஸர் அல்-ஸைடி முழு அரபு உலகிலும் கொண்டாடப்படுகிற ஒருவராக இருக்கிறார். இது எதைக் குறிக்கிறது?

ஜோஜ் புஷ் அரபு மக்களால் எவ்வளவு வெறுக்கப்படுகிறார் என்பதைக் குறிக்கிறது எனலாம். ஆனால் அது முழுமையான உண்மையல்ல. அமெரிக்க அரசாங்கத்தினதோ அதன் ஆக்கிரமிப்புப் படைகளினதோ சார்பில் பேச வந்த எவர் மீதும் எவரும் எதை எடுத்து எறிந்திருந்தாலும் அது மெச்சப்பட்டிருக்கும். எனவே தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு ஜோஜ் புஷ் என்ற தனிமனிதருக்கு மட்டுமல்ல. அவர் அடையாளப்படுத்தி நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் தெரிவிக்கப்படுகிற எதிர்ப்பாகவே அதைக்கொள்ள வேண்டியுள்ளது. இக் காரணத்தினாலேயே தன்னைக் கொல்லும் முயற்சிகட்குப் பின்னாலிருந்து வந்த அமெரிக்க சனாதிபதியையும் தனிப்பட்ட முறையிற் கண்டிக்காதவரான ஃபிடெல் கஸ்றோ இந்தக் காலணி வீசுதலைப் பாராட்டியிருக்கிறார்.

ஜோஜ் புஷ்ஷை ஒவ்வொரு ஈராக்கிய குடிமகனும் தனிப்பட்ட முறையில் வெறுக்க நியாயம் உண்டு என்பது உண்மை. ஆனால் அந்த வெறுப்பு ஜோஜ் புஷ் என்ற தனிமனிதனின் செயலாகத் தங்களுக்கு நேர்ந்த கொடுமையை கருதவில்லை. ஜோஜ் புஷின் இடத்தில் நாளை பராக் ஒபாமா வந்த பிறகும் அமெரிக்க ஆக்கிரமிப்பு தொடருமானால் ஒபாமாவையும் ஒவ்வொரு ஈராக்கியரும் அதே அளவுக்கு வெறுப்பர்.

காலணிகளை வீசிய அல்-ஸைடியை கைது செய்தவர்கள் அவரை மூர்க்கத்தனமாக தாக்கியிருக்கின்றனர். அவர் மன்னிப்பு கேட்டு விட்டார் என்று சொல்கின்றனர். ஆனால் அதை அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் ஏற்க மறுக்கின்றனர். சித்திரவதை மூலமும் மிரட்டல் மூலமும் பெறப்படுகிற வாக்கு மூலங்களை நல்ல நீதியுள்ள நாடுகளில் நீதிமன்றங்கள் ஏற்க மாட்டா. அது போலவே துன்புறுத்திப் பெற்ற மன்னிப்புக்கோரலும் பெறுமதியற்றது. அவர் மீதான வழக்கு விசாரணைக்கு வரும்போது அமெரிக்காவின் பாதங்களாகச் செயற்படும் ஈராக்கிய அரசாங்கப் பிரமுகர்களதும் நீதி நிர்வாகத்தினரதும் முகமுடிகள் சில கிழியும்.

இந்தக் காலணி வீச்சைப் பற்றிப் பெருமைப்படுகிற சிலர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் 1962ல் நடத்திய கூழ் முட்டை வீச்சைக் கண்டிப்பவர்களாக இருக்கின்றனர். இரண்டுக்கும் பொதுவான ஒரு நியாயம் இருப்பது அவர்கட்கு விளங்காதா? காலணிகளோ கூழ் முட்டைகளோ அழுகிய பழங்களோ வீசப்படுகின்றனவென்றால் அவற்றின் பின்னால் உள்ள எதிர்ப்புகளும் அதற்கான காரணங்களுமே காணப்பட வேண்டியவையாகும்.





"ஆயிரம் வெட்டுக்காயங்கள் பட்டும் இறப்பதற்கு அஞ்சாதவன் சக்கிரவர்த்தியைக் குதிரையில் இருந்து வீழ்த்தத்துணிவான்." இது ஒரு சீனப் பழமொழி. அத்தகைய துணிவுடன் உலக ஆதிக்க வெறித் தலைவனாகவிருந்த ஜோர்ஜ் புஷ்சிற்கு காலணிகளைக் கழற்றி வீசிய ஈராக்கிய ஊடகவியலாளர் அல்-ஸைடியை படத்தில் காணலாம்.

## "சே" யின் நினைவு

தோழர் 'சே'யை நினைப்போம்
அவர் வாழ்ந்த வாழ்வை மதிப்போம்
அவரின் அனுபவ ஒளியைப் பெறுவோம்
இவ்வுலகை அதிர வைப்போம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு
மரண பயத்தை கொடுத்த 'சே'
இன்று எம்முடன் இல்லை.
அவரின் கருத்து
எம்மை வளர்த்துள்ளது
இன்னும் படிப்போம்
இன்னும் வளர்வோம்
மாக்சியத்தை உயர்த்திப் பிடிப்போம்
மானுட விடுதலையைக் காண்போம்

தருணம் முந்திய மரணம்
தரணிக்கு தந்தது சோகம்
அவர் கருத்தோ பெற்றது வேகம்
முக்கண்டத்தையும் இணைத்து
பரந்த உறவைத் தந்தது

கியூப மக்களுடன் இணைவோம்
உலக மக்களாய் ஆவோம்
ஏகாதிபத்தியம் ஒழிப்போம்
புதிய உலகை அமைப்போம்.

இரண்டு மூன்று வியட்னாம்
வேண்டுமென்றார் 'சே'
பல நூறு கியூபா
வேண்டுமென்போம் நாம்
கனா மட்டும் காணாது
கருத்திலும் கொள்வோம்
புரட்சி செய்வோம்
புதிய உலகை அமைப்போம்.

உதயதீபன்

# யுத்தமும் பெண்களின் பொறுப்பும்

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடை பெற்று வரும் யுத்தத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தை எட்டி இருக்கும். 15 லட்சத்திற்கு மேல் இடம் பெயர்ந்துள்ளனர். யுத்தத்தினால் பெண்களும் அதிகளவில் இறந்துள்ளனர். உயிருடன் இருக்கும் பெண்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தந்தையை, சகோதரனை, கணவனை, பிள்ளைகளை இழந்த பெண்களெனவும், வறுமை, பாலியல் துன்புறுத்தல் போன்றவற்றால் பலவாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தினால் இறக்கும் இலங்கையின் முப்படையினர் 'ரணவிரு' என்று அழைக்கப்படுகின்றனர். இறக்கும் ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்கள் "மாவீரர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர். இரண்டு தரப்பினருக்கும் அன்பு, காதல், பாசம் என்பன இயல்பான உணர்வுகள் இல்லாமல் இல்லை. அவர்களின் சகோதரிகள், தாய்மார் காதலர்கள், மனைவிமார் போன்றோருக்கும் இயற்கையான மனித உணர்வுகள் இல்லாதவர்கள் இல்லை. தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே தமிழ் இளைஞர்களும், இலங்கையின் அரச படையினரினதும் ஆயுத முரண்பாடாக மாறியது. இன்றும் நடைபெறும் நேரடி மோதல், கடத்தல்கள், காணாமல் போதல் கைதுகள் மூலம் அதிகமான பாதிப்புகளுக்குள்ளாவது பெண்களே. தமிழ் பெண்களும், முப்படை வீரர்களின் தாய் சகோதரிகள் மனைவிமார் என்ற ரீதியில் சிங்களப் பெண்களும். தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கைக்கு ஆதரவாக குரல் எழுப்பி சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் தாய்மார், மனைவிமார், சகோதரிகளும் இன்றும் பலவிதமான பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர். இலங்கையை ஆண்ட வெள்ளையர்களைப் போன்று அவர்களுக்குப் பின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட 'கறுப்பு வெள்ளையர்களும்' இலங்கை மக்களை இனரீதியாகப் பிரித்தே ஆண்டு வருகின்றனர். அவர்களின் ஆட்சி முறையில் முக்கியமானது தேசிய சிறுபான்மையினரை இனரீதியாக ஒடுக்குவதாகும்.

இச்சிறிய நாட்டின் வளங்களைப் பகிர்ந்து கொண்டு சமத்துவமாக வாழும் உரிமை இன ரீதியாக மறுக்கப்படுவதாலேயே இன்றைய யுத்தம் நடைபெறுகிறது. இவ் யுத்தத்தில் சிங்கள இளைஞர்கள் நாட்டை பாதுகாப்பது என்ற பேரிலும் உரிமைப் போராட்டம் என்ற பேரில் தமிழ் இளைஞர்களும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர் .

இலங்கை வாழ் அனைத்து இனத்தினரும் ஐக்கியமாக வாழ யுத்தம் தடையாக இருக்கிறது. யுத்தத்தை கொண்டு நடத்துவதிலும் மக்களிடையே இனங்களிடையே தொடர்ந்து பிளவை ஏற்படுத்துவதிலும் சிங்கள ஆளும் வர்க்கத்தினர் முனைப்பாக செயற்படுகின்றனர். இரு புறத்திலும் குறுகிய தேசிய வாதிகளே தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் ஐக்கியப்படுவதற்கு தடையாகவே இருந்து வருகின்றனர். இந்த யுத்தத்திற்கு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவு தொடர்ந்து இருந்து வருகிறது.

இந்நிலையில் இந்த கொடிய யுத்தத்தால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் ஆளும் வர்க்கத்தினர் யுத்தத்திற்கு தீர்வு காண்பர் என்று நம்பிக் கொண்டிராமல், இந்த யுத்தத்திற்கு காரணமான பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான தலையீட்டையும் பங்களிப்பையும் செய்ய முன்வரல் வேண்டும்.

அதற்கான கலந்துரையாடல்களைஆரம்பிப்பது நல்லது.

(கே.கி. சூனிக்காவின் சிங்கள கட்டுரையின் சாராம்சம்)

# கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

செஞ்குருவி

## • மாணவர்களுக்கு ராணுவ சிந்தனை

பாடசாலைகளிலும் அவற்றுக்கு வெளியிலும் மாணவர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது என கண்டிப்பு உத்தரவு இட்டது இன்றைய அலசாங்கம். கடந்த ஜனவரி இரண்டாம் திகதி கிளிநொச்சியை ராணுவம் கைப்பற்றிய வெற்றியை சகல பாடசாலைகளிலும் ராணுவத்தைப் போற்றி வெற்றி நிகழ்ச்சி செய்யும் படி கல்வி அமைச்சரே பகிரங்க வேண்டுகோள் விடுத்தார். இது மாணவர்களை அரசியலுக்கும் அப்பால் பேரினவாத ராணுவ சிந்தனைக்கு உட்படுத்தும் செயல் முறை என்பதை எத்தனை பேர் அறிவார்கள். இதன் அபாயம் எதிர் காலத்தில் தான் வெளிப்படும். அப்போது யாவும் புரியும்.

## • அங்கும் இங்கும் ஒரே வார்த்தைகள்

ராணுவத்தினர் புயல் மழையையும் பொருட்படுத்தாது தியாகத்துடன் கடமையாற்றி கிளிநொச்சியைக் கைப்பற்றிய முன்னுதாரணத்தை பன்னிரண்டு லட்சம் அரசாங்க ஊழியர்கள் பின்பற்றி மன உறுதியுடன் கடமை புரிய வேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் கிளிநொச்சி வெற்றியைக் கொண்டாடிய நிகழ்வில் கூறினார். டபிள்யூ புஷ்சும் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க ராணுவத்தின் உறுதி தியாகத்தைப் புகழ்ந்து கூறிய வார்த்தைகளும் இதனை ஒத்த வைகள் தான் என்பது நினைவிற்கு வருகிறது.

## • சின்ன அம்மாவின் கவலை

கிளிநொச்சி கைப்பற்றிப்பட்டதைக் கண்டித்துப் பெருங்கவலை தெரிவித்திருக்கிறார் தமிழகத்தின் சின்ன அம்மாவாகி வரும் கனிமொழி கருணாநிதி. அந்தக் கவலையையும் கண்டனத்தையும் தனது தந்தைக்குத் தெரிவித்து பழைய இராஜினாமாக் கடிதத்தை திகதி மாற்றி மத்திய அரசியல் இருந்து வெளியேறி இருக்கலாமே. தந்ததைக்குச் சளைக்காத அரசியல் நடிகை என்பதைக் கனிமொழி மெய்ப்பித்து வருகிறார். இந்த சின்ன அம்மாவாகி வரும் கனிமொழியின் பேச்சுக்கு வாய் பிளக்க ஒரு கூட்டம் இருப்பது தான் பரிதாபம்.

## • அடிமைகளாய் இருக்க அடிபிடி

மலையகத்தில் மாகாணசபைத் தேர்தலில் தத்தமது சின்னங்களைக் கைவிட்டு ஆளும் கட்சிச் சின்னத்தில் இ.தொ.கா வும், ம.ம. முன்னணியும் ஒரே பட்டியலில் போட்டியிடுகின்றன. அதே வேளை இவ்விரு தரப்பும் நேரடி மோதலில் ஈடுபடவும் மலையக மக்களைப் பிளவுபடுத்தவும் முன் நிற்கின்றன. இவர்களுக்கிடையில் போட்டி என்ன வென்றால் பேரினவாத எசமானருக்கு யார் கூடிய அடிமை சேவகம் செய்வது என்பது தான். மலையகத்தின் பிற்போக்குத் தலைமைகளுக்கு ஒரு போதும் அடிமை விசுவாசம் விட்டுப் போகமாட்டாது என்பதை அறிய மலையக மக்கள் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ?

## • பேரினவாத அகங்காரம்

கிளிநொச்சியை இலங்கை ராணுவம் கைப்பற்றிய கையோடு வெற்றி முழக்கம் செய்ய ஜாதிக ஹெல உறுமய ஊடக மாநாடு நடாத்தியது. அதில் கருத்துரைத்த அதன் தலைவர் அத்துரலிய ரத்தின சாரதேரர் முன்பு வன்னியில் 1500 பௌத்த விகாரைகள் இருந்ததாகவும் அவை யாவும் அழிக்கப்பட்டன என்றும் அங்குள்ள குளங்கள் எல்லாம் சிங்கள மன்னர்களால் முன்பு கட்டப்பட்டவைகள் எனவும் கூறி இருக்கிறார். பௌத்த பேரினவாதத்தின் உள் நோக்கு முதலில் கிழக்கே மையம் கொண்டது. "கிழக்கின் உதயத்தின்" ஊடாக அது தன் காரியங்களை சத்தம் இன்றிச் செய்து வருகிறது. அதன் மற்றொரு கைங்கரியத்தை "வடக்கின் வசந்தத்தின்" மூலம் நிறைவேற்றப் போகிறது என்பதையே ஹெல உறுமயத் தலைவரின் பேச்சு முன்னறிவிப்புச் செய்து நிற்கிறது. வீடு சுடும் இராசாவிற்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரி போன்று அரசாங்கத்தின் பேரினவாத வெறித்தனத்திற்கு அதனுடன் இணைந்து நின்று ஜாதிக ஹெல உறுமய செயலாற்றி வருகிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன இருக்கப் போகிறது.

## • தமிழர்கள் யூதர்கள் அல்லவே

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஒபாமாவிற்கு புலம் பெயர்ந்த தமிழர் சார்பாகச் சில உயர்வர்க்கத் தமிழர்கள் கடிதம் எழுதியுள்ளனர். அதில் இலங்கைத் தமிழர்களை யூதர்களுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர். இலங்கையில் தமிழர்களின் தேசிய இன அடையாளத்தை மறுத்து இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகிறார்கள். எனவே ஒடுக்கப்பட்டு வரும் தமிழர் சார்பாக கடிதம் எழுதியிருந்தால் கூட அதில் நியாயம் இருப்பதாக ஏற்க முடியும். அவ்வாறு அல்லாது யூதர்களுடன் ஒப்பிடுவதன் உள் நோக்கம் சியோனிச இஸ்ரேலை அடிமனதில் இருத்தித்தான் என்பது தான் அவலமானது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அரசாங்கமா நீதிமன்றமா?

## முற்றி வரும் மோதல்

மோகன்

உலகச் சந்தையில் பெற்றோலியம் விலை கூடிக் கொண்டு போன போது முன் கூட்டியே விலை நிர்ணயித்து வாங்க உடன்பட்டு அதன் மூலம் பணத்தைச் சேமிக்கிற நோக்கத்தில் 'ஹெட்ஜிங்' என்று சொல்லப்படுகிற உலகச் சந்தைச் சூதாட்டத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டது. இது ஒழுங்கீனமானது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் முறைப்பாட்டை ஏற்றுக் கூட்டுத்தாபனத் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ∴பௌஸியும் பதவி நீக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியிருந்தார். மேற்கொண்டு அம்பலத்துக்கு வந்த தகவல்களின் மூலம் மத்திய வங்கி ஆளுனர் முதலாக அமைச்சரவையினர் உட்படப் பலவேறு குழறுபடிகள் வெளிச்சத்துக்கு வந்தன. கூட்டுத்தாபனத் தலைவர் பதவி விலகிய போதும் சனாதிபதிக்கும் பிரதம நீதியரசருக்குமிடையிலான முறுகல் மேலும் முற்றியது. இந்தப் பின்னணியில் உலகச் சந்தையில் பெற்றோலியத்தின் விலை வேகமாகச் சரிவு காணத் தொடங்கியது. அதைச் சரிவரக் கையாளாததால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. (7500 கோடி ரூபா என அந்த இழப்பு மதிப்பிடப் பட்டுள்ளது)

மறுபுறம் பெற்றோலியத்தின் உலகச் சந்தை விலை ஏறிய போது வேகமாக ஏற்றப்பட்டு வந்த பெற்றோலின் விலையை உலகச் சந்தை விலைக் குறைப்புக்கமைய விலையைக் குறைக்கத் தவறிவிட்டதற்கு எதிராக மீண்டும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அவ் வழக்கில் பெற்றோல் விலையை நூறு ரூபாவாகக் குறைக்கும் படி பிரதம நீதியரசர் ஆணை பிறப்பித்தும் அரசாங்கம் அதை ஏற்க மறுத்தது. நீதிமன்ற ஆணையை அரசாங்கம் ஏற்க மறுக்கிற போது அரசியலமைப்பும் சட்ட நிருவாகமும் தொடர்பான ஒரு நெருக்கடி ஏற்படுகிறது. இது இன்னொரு தீர்க்க இயலாத அதிகார மோதலாகிக் கொண்டு போகிற வேளையில் பெற்றோலிய விற்பனையில் ஒரு பெரும் பகுதியைத் தன்வசங் கொண்டுள்ள லங்கா இந்தியன் ஒய்ல் கொம்பனி நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று விலையைக் குறைக்க உடன்பட்டுள்ளது. இதன் விளைவாக அரசாங்கத்திற்கு மேலுஞ் சங்கடமான நிலைமை உருவாகியுள்ளது. அரசாங்கம் இதை எப்படிக் கையாண்டாலும் 1978 முதலாக அரசாங்கம் சட்ட ஒழுங்கு, நீதி நிருவாகம் ஆகியவற்றில் நியமன ங்கள் முதலாக நீதிமன்றத் தீர்ப்புக்களை மதிப்பது வரையிலும் நடந்து வந்துள்ள முறை ஏற்கத்தக்கதாக இருந்ததில்லை. நாட்டின் அரசியலிலும் சட்டம் ஒழுங்கு அரச நிருவாகம் என்பனவற்றிலும் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் வெகு விரைவில் நாட்டின் அதிகாரங்களைப் பற்றிய மேலுங் குழப்பமான நிலைமைகட்கே இட்டுச் செல்லும்.

சில காலமாக நீதிமன்றத்தின் மூலம் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட்ட தொழிலாளரின் வேலை நிறுத்த உரிமைக்கு ஆப்பு வைத்து வந்தது. அப்போதெல்லாம் நீதிமன்றத் தீர்ப்புக்கள் தொழிலாளரின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றனவா என்ற விடயம் பாராளுமன்றத்தின் அக்கறைக்குரியதாக இருக்கவில்லை. ஏனென்றால் பிரதான அரசியற் கட்சிகளில் எதற்குமே தொழிலாளரின் அடிப்படை உரிமைகள் பற்றிய அக்கறை இல்லை.

நீதிமன்றம் பாடசாலை அனுமதிகள் தொடர்பாகவும் சமையலுக்கான எரிவாயு விலை தொடர்பாகவுங் கூடத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இவ்விதமாக நீதி மன்றம் குறுக்கிடலாமா இல்லையா என்பன அரசியல் யாப்புடனும் நாட்டின் சட்ட முறையுடனும் தொடர்புடைய விடயங்கள். என்றாலும் சுயாதீனமாகச் செயற்பட வேண்டிய சட்டவாக்கல் (பாராளுமன்றம்), நீதி நிருவாகம், அரச நிருவாகம் ஆகிய துறைகளிடையே ஒன்றின் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்களில் இன்னொன்றின் குறுக்கீடு ஆரோக்கியமானதல்ல. இதை இயலுமாக்கியது 1978இன் அரசியல் யாப்பும் ஏறத்தாழ வரையறையற்ற அதிகாரங் கொண்ட சனாதிபதி முறையுமாகும்.

கடந்த முப்பது ஆண்டுகளாக உருவாகி வந்த அரச நிருவாக அராஜகத்தை 1994ல் ஏற்பட்ட ஆட்சி நிருவாகத்தால் மாற்ற இயலவில்லை. அதன் பின்பான ஆட்சி மாற்றங்களாலும் மாற்ற இயலவில்லை. நாட்டின் அரசியல் மட்டுமன்றி நீதி நிருவாகமும் ஊழல் ஒழுங்கீனங்களைக் கொண்டதாகவே உள்ளது. எனினும் அண்மைய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் பொது மக்களது வரவேற்புக்குரியனவாக உள்ளளவில் அரசாங்கத்தால் இப்போதைய பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் வரை நீதித் துறை மீது கை வைக்க இயலாத நிலை தொடரும் என்றே கூற வேண்டும். பிரதம நீதியரசர் மீது பாராளுமன்றம் பதவி விலக்கற் தீர்மானம் (குறைகேள் பிரேரணை) கொண்டு வருகிறதான மிரட்டல் கூட மக்கள் மத்தியில் எதிர்ப்பைக் கிளறி அரசாங்கத்துக்கு மேலுஞ் சங்கடமான ஒரு நிலைமையை உருவாக்கலாம். எனினும் ஒரு நீதவான் நீதிமன்ற நீதவானுக்குள்ள அதிகாரங் கூட சனாதிபதிக்கு இல்லை என்று சனாதிபதி முறைப்பட்டுள்ளார். எனவே சனாதிபதி இப் பதவி விலக்கலில் தீவிரமாக உள்ளார் போலவே தெரிகிறது.

வெறுமனே படைகள் போரை வெல்லுகின்றன என்ற நம்பிக்கை ஒன்றின் மீது மட்டுமே தனது நிலைப்பைத் தக்க வைத்துள்ள அரசாங்கம் ஒவ்வொரு பிரச்சனையிலும் தனது நிலைப்பாட்டைப் போரின் அடிப்படையிலேயே நியாப்படுத்த வேண்டியுள்ளது. தொடர்ந்தும் நடைபெறுகிற நிதி நிருவாக ஒழுங்கீனங்களும் ஊழல்களும் அதிகாரத் துஷ்பிரயோகங்களும் ஊடகத் துறையினர் மீதான தாக்குதல்களும் உரிமை மீறல்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக் கெதிரான நடவடிக்கைகளும் எக்காலத்துக்கும் போரைக் காட்டி நியாயப்படுத்தக் கூடியவையல்ல.

ஆனால் அரசாங்கத்தின் மீதான விமர்சனங்கள் இன்றைய சூழலில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாததன் காரணத்தை நாம் சிந்திக்க வேண்டும். எல்லாக் குற்றங்களையும் மூடி மறைக்கப் போர் ஒரு வலுவான மூடுதிரையாக உள்ளது. அதைக் கிழித்து விழுத்தப் போரில் அரசாங்கம் ஒரு பெருந் தோல்வியையோ பாரிய பின்னடைவையோ சந்திக்க வேண்டும். உடனடியாக அவ்வாறு நடக்கிற வாய்ப்புக் குறைவு என்றாலும் அரசாங்கம் சொல்கிற விதமாகப் போர் நிலவரங்கள் இல்லை. எனவே ஊடகங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு நிலைமையும் உருவாகியுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே அரசாங்கம் தனது அதிகாரத்துக்கு நீதி மன்றம் தடையாகவும் அ்தேவேளை நீதிமன்ற நடவடிக்கைகள் மக்களிடம் வரவேற்பைப் பெறுகிற விதமாகவும் அமைகிற போது, அடுத்து வரவுள்ள மாகாண சபைத் தேர்தல் அரசியற் பலப் பரீட்சைகளையும் பொதுத் தேர்தல் மூலம் தன்னை மறுபடியும் வலுப்படுத்துகிறதற்குள்ள திட்டங்களையும் அவை பாதிக்கின்றன. எனவே பிரதம நீதியரசர் ஓய்வு பெறு முன்னமே அவரைப் பதவியிலிருந்து இறக்குவதற்கான ஒரு பாராளுமன்றத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தில் ஒரு பகுதியினர் அவசரப்படுகின்றனர். இதற்கு அமைச்சரவைக்குள்ளேயே பெருந் தயக்கங்கள் உள்ளன. எனவே பதவியிறக்குவதற்கான தீர்மானம் வெற்றி பெற்றாலும் பெறா விட்டாலும் அது ஒரு பெரிய அரசியல் சூதாட்டமாகலாம்.

அதன் விளைவாக மக்களிடையே செல்வாக்குடைய ஒரு புதிய அரசியற் பிரமுகராக பிரதம நீதியரசர் உருமாறலாம். எனினும் அடுத்த சில மாதங்களில் போர் அரசாங்கத்திற்குச் சாதகமாகவோ அதிகளவிலான இழப்புக்கள் இல்லாமலோ மக்களின் மத்தியில் தனது ஆதரவை இழக்காத வரையும் அரசாங்கத்தின் காய் நகர்த்தல்களால் அதிகங் கேடு வராது. பாகிஸ்தானில் பிரதம நீதியரசர் விலக்கப்பட்ட போது நடந்தது போல இங்கே எதுவும் நடக்க வாய்ப்பில்லை. ஆனால் நாடு எதிர்நோக்கவுள்ள பயங்கரமான பொருளாதார நெருக்கடி முதிர முன்னமே இங்கே யார் எசமான் என்பதை நிறுவுவதற்குச் சனாதிபதி காட்டுகிற அவசரம் அரசாங்கம் எதிர்காலத்திற் கடைப்பிடிக்கப் போகிற அடக்குமுறைப் போக்குக்குக் கட்டியங் கூறுகிறது.

# ஆள் — அமைப்பு — ஆளுமை

## சமூக அமைப்பும் ஆளுமையும் 1

- சி. சிவசேகரம் -

மனிதர் ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே அமைந்த பல விதமான பண்புகளும் ஆற்றல்களும் உள்ளன. அவற்றை நெறிப்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் அவர்கள் தமது ஆளுமையை விருத்தி செய்கின்றனர். ஆளுமை என்ற சொல் அதிகாரம், மேலோங்கிய நிலை என்ற பொருட்களிற் பயன்பட்டாலும் இங்கே முக்கியமாக ஒருவரது பல்வேறு குண நலன்களின் தொகுப்பாகவே அச் சொல் பயன்படுகிறது. ஆங்கிலத்தில் "பேர்சனாலிற்றி" என்று வழங்குகிற சொல்லுக்குரிய பொருளிலே அந்த அம்சத்தைக் கொள்ளலாம். அத்துடன் அவரது சமூகச் செயற்பாடுகளிலும் பல்வேறு பங்களிப்புக்களிலும் தன்னை வெளிப்படுத்தும் விதத்தையும் உள்ளடக்கியே அதைக் கருதுகிறேன். ஆளுமை என்பது ஒருவர் தனக்காகத் தானே விருத்தி செய்கிற ஒன்று என்ற கருத்துச் சிலரிடம் உண்டு. இவ்வாறான கருத்து மனிதரைச் சமூகத்திலிருந்து பிரித்து நோக்குகிற ஒரு கண்ணோட்டத்தின் விளைவானது. இதன் விளைவாகத் தனிமனித ஆளுமை என்பது சமூகம் விதிக்கிற தடைகட்கு எதிராகச், சமூகத்தை மீறி ஒருவர் தனக்காக விருத்தி செய்கிற ஒரு விடயமாகிறது.

சமூகத்திற்கும் தனி மனிதர் ஒவ்வொருவருக்குமிடையிலான உறவு பல வகையான முரண்பாடுகளைக் கொண்டது. ஒரு சமூகம் விருத்தி பெறுகிற போது தனி மனிதருக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு சிக்கலானதாகவும் நெருக்கமானதாகவும் அமைகிறது. தனி மனித இருப்பு என்பது சமூகத்தின் இருப்பிலிருந்து பிரிக்க இயலாததாகிறது. சமூகத்தின் முன்னேற்றம் தனி மனிதர்களது ஆற்றல்களின் விருத்தி மீதும் அவர்களுக்கும் சமூகத்திற்கும் இடையில் உள்ள உறவின் மீதுமே தங்கியுள்ளது. மனித ஏற்றத் தாழ்வுகளை ஏற்று அவற்றை இயற்கை நியதியாகவோ இயற்கைக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியின் நியதியாகவோ விளக்குகிற சமுதாயங்கள் தனி மனிதரது ஆளுமையின் விருத்தியைக் கட்டுப்படுத்த முனைகின்றன. மனித ஆளுமையின் விருத்தி சமூகத்தின் கட்டுக் கோப்பைக் குலைக்கக் கூடிய திசைகளிற் செல்லாத விதமாகப் பலவாறான கட்டுப்பாடுகள் எல்லாச் சமூகங்களிலும் ஏதோ வகையிற் செயல்படுகின்றன என்பது உண்மை. நிலவுடைமைச் சமுதாயத்திலும் அடிமை நிலைச் சமுதாயத்திலும் இன்னாருக்கு இன்னவை என்றவாறான தொழில் சார்ந்த கட்டுப் பாடுகளும் கல்வி, கலை இலக்கிய ஈடுபாடுகள் என்பன சார்ந்த கட்டுப்பாடுகளும் பெருமளவும் வெளி வெளியாகவும் நேரடியாகவும் நடைமுறையில் உள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தனிமனித ஆளுமையின் விருத்தி சில வேளைகளில் மேற்கூறிய விதமான கட்டுப்பாடுகளை மீறியே நிகழ இயலுமாகிறது.

எவ்வாறாயினும் சமூகத்தில் அதிகாரத்தில் உள்ளவர்களது தேவைகட்கமையப் பலவாறான கலைகளும், தொழில்நுட்பங்களும், இலக்கிய வடிவங்களும் விருத்தி பெறுகின்றன. காலத்துடன் நீண்டகாலம் நிலைத்து நிற்கிற கட்டிடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் என்பன முதலாகக் காவியங்களும் பிற செவ்வியல் இலக்கிய வடிவங்களும் சமுதாயத்தின் அதிகார நிறுவனஞ் சார்ந்து விருத்தி பெறுகின்றன. அவற்றையொட்டித் தனி மனித ஆளுமைகள் விருத்தி பெறுகின்றன. நெறிப்படுத்தப்பட்ட முறையான பயிற்சி என்பது தொழில் சார்ந்த குலக் கல்வி மூலம் வழங்கப் பெறுகிறது. பெருமளவும் அந்த வரையறைகட்கும் வழிகாட்டல்கட்கும் உட்பட்டே ஒவ்வொரு துறை சார்ந்தும் தனிமனிதர்களது ஆளுமை விருத்தி பெறுகிறது. சமூகத்தின் அதி சிறிய தனி அலகாக, சமூகத்தின் நலனுக்கும் விருத்திக்கும் இசைவாகச் செயற்படுகிற சமூக மனிதராக ஒவ்வொருவரதும் விருத்தி அவரது ஆளுமையாக அமைகிறது. அதில் அவர் சமூகஞ் சார்ந்து செயற்படுகிற ஒவ்வொரு தளமும் தனது பங்கைச் செலுத்துகிறது. குடும்பம் என்கிற சமூக அலகு ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது.

நிலவுடைமையின் கீழ் இன்று காணும் தனிக் குடும்பங்களைப் போலன்றி நெருங்கிய உறவுகளைக் கொண்ட விரிவான கூட்டுக் குடும்பங்களே அதிகம் இருந்தன. சிதறுண்ணாத கிராமியச் சமூகங்களில் இன்றும் பல குடும்பங்கள் ஒன்றுபட்டு வாழுகிற பகுதிகள் முதலாக ஊர்கள் என்பனவும் முக்கியமான சமூக அலகுகளாகின்றன. சாதி, தொழில், வர்க்கம் என்கிற விதமான பிரிவுகள் ஒரு புறம் தாமே தனித்தனி அலகுகளாகவும் குறிப்பிட்ட சமூக உற்பத்தித் தேவைகள் சார்ந்து ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய அலகுகளாகவும் அமைகின்றன. அவ்வாறான ஒவ்வொரு அமைப்பினுள்ளும் சமூக உறவுகள் வரையறுக்கப்பட்டுத் தனிமனித நடத்தை நெறிப்படுத்தப்படுகிறது. யார் எதை எங்கே எவ்வாறு எப்போது செய்யலாம் என்பன பற்றிய இறுக்கமான கட்டுப்பாடுகள் எல்லாவிடத்திலும் இருக்க வேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு சமூக அலகினுள்ளும் அதிகார அடுக்குகள் உள்ளன. அவை நேரடியான அதிகாரப் படி வரிசையாகத் தெரியாத போதும், விதிக்கப்பட்ட கடமைகள், பொறுப்புக்கள், பணிகள் என்கிற விதமாகச் சமுதாய அலகில் ஒவ்வொருவரது இடமும் பெரும்பாலும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டு விடுகிறது.

முதலாளியம் சமூக உற்பத்தியின் பெரும்போக்காகத் தன்னை நிலை நிறுத்தும் போக்கில் நிலவுடைமைச் சமூகத்தில் உடைவுகளை ஏற்படுத்தியது. முழுமையான முதலாளிய முறை உருவான சூழ்நிலையில் முதலில் நிலவுடைமைச் சமூக உற்பத்தி முறையும் உற்பத்தி உறவுகளும் தகர்ந்தன. அடுத்து நிலவுடைமைச் சமூக உறவுகள் தகர்ந்தன. நிலவுடைமைக் கருத்தியல் படிப்படியாகச் சிதைவுண்டது. எனினும் அதன் முழுமையான அழிவு முதலாளியத்திற்குத் தேவையற்றது. அதன் சில கூறுகள் முதலாளியத்துக்குப் பயனுள்ளவை. எனவே ஒவ்வொரு முன்னேறிய முதலாளிய சமுதாயத்திலும் அதன் விருத்திப் பாதைக்கமைய நிலவுடைமைக் கருத்தியலின் சில கூறுகள் தொடர்ந்தும் ஆதிக்கத்தில் உள்ளன. பண்பாடு, மதம் என்கிற பேர்களில் நிலவுடைமைக் கருத்தியல் தொடர்ந்தும் இருந்து வருவதை நாம் காணலாம்.

கொலனியச் சூழலில் உருவான முதலாளியம் அந்நியப் பெரு முதலாளிய ஆதிக்கத்தின் அடிப்படையிலானது. அன்று கொலனிய முறையினதும் பின்பு நவகொலனிய முறையினதும் தேவை சார்ந்து விருத்தி பெற்ற முதலாளியத்துக்கும் நிலவுடைமைக்கும் இடையே சமரசம் காண முடியுமாயிருந்தது. குறை விருத்தி பெற்ற முதலாளிய முறை ஒன்றின் மூலம் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளால் தமது சுரண்டலை உச்சப்படுத்த முடிந்தது. எனவே கொலனிய நாடுகளின் முதலாளியம் நிலவுடைமைச் சமூக அமைப்பின் பிற்போக்கான பல அம்சங்கள் தொடர்ந்தும் இருப்பதைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகிறது.

நிலவுடைமையின் மிச்ச சொச்சங்கள் முதலாளிய முறையின் மூலமாக அல்லாது அதற்கு எதிரான போராட்டங்களின் மூலமே நீக்கப்பட்டன. இத்தகைய சூழ்நிலைகளில் தனி மனிதரின் ஆளுமையின் விருத்தி பல வேறு முரண்பட்ட தாக்கங்கட்குட்பட்டே இயலுமாகிறது.

நம்முடையது போன்ற ஒரு பின்தங்கிய முதலாளியச் சமூகத்தில் எஞ்சியுள்ள நிலவுடைமைக் கருத்தியலுக்கும் வளர்ந்து வரும் முதலாளியச் சிந்தனைக்கும் அதன் போக்கிலான பலவேறு சமூகச் சீரழிவுகட்கும் மத்தியில் தனி மனிதரின் ஆளுமை எவ்வாறு அம்மகிறது என்பதை ஆராய்வதே இக் கட்டுரைத் தொடரின் நோக்கம். குறிப்பாகத் தனிமனிதரின் ஆளுமையின் விருத்தியிற் சமூகத்திற் செயற்படும் பலவாறான அமைப்புக்களின் பங்களிப்பைச் சற்று விரிவாக ஆராயவும் இத் தொடர் இடமளிக்கும்.

வளரும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# முல்லைத்தீவு பேரவலத்திற்கு உள்ளான மக்களும் பொது மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்

வடக்கின் விடுதலைக்கு வன்னிப்போர இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டதாகப் பேரினவாத ஒடுக்குமுறையாளர்கள் எக்காள மிட்டு நிற்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறிய நிலப்பரப் பிற்குள் "பயங்கரவாதம் முடக்கப்பட்டு இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருப்பதாக" பேரினவாதப் பரப்புரையாளர்களும் சிங்கள ஆங்கில ஊடகங்களும் சங்கநாதம் செய்த வண்ணமுள்ளன. புலிகள் இயக்கத்தின் பின் நகர்வு தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் முரசறைகின்றன.

நமது அக்கறையும் கவலையும் இன்று முல்லைதீவின் நிலப்பரப் பினுள் அகப்பட்டுள்ள நான்கு லட்சம் மக்களின் பாதுகாப்பும் உயிர் வாழ்வுமாகும். அவர்கள் இந்நாட்டின் மக்கள். அவர்களுக்கு வாழும் உரிமை உட்பட அனைத்து அடிப்படை உரிமைகளும் உண்டு. அத்தகைய மக்களை அந்நிய மண்ணிற்கு உரியவர்கள் போன்று உணவு உடை இருப்பிடம் மருந்து- மருத்துவம் கிடைக்கச் செய்ய விடாது சுற்றி வளைப்பிற்குள்ளும் அரசாங்கப் படைகள் வைத்துள்ளன. இம் மக்களைப் புலிகள் இயக்கம் மனிதக் கேடய மாக வைத்துள்ளனர் என்ற குற்றச் சாட்டை அரசாங்கம் முன் வைத்துள்ளது. ஆதலால் அம் மக்கள் பாதுகாப்பாகத் தமது மீட் கப்பட்ட பகுதிக்கு வருமாறு கூறி ராணுவம் ஒரு "பாதுகாப்பான வலயம்" ஒன்றை கிளிநொச்சி கிழக்கிற்கும் உடையாளர் கட்டிற்கு மேற்காகவும் 35 சதுர மைல் இடத்தை தேவிபுரத்தில் ஒதுக்கியுள்ள தாக அறிவித்துள்ளது. இருப்பினும் அப்பிரதேசத்தை நோக்கி மக்கள் வருவதாக அறிய முடியவில்லை. புலிகள் இயக்கம் மக் களைத் தடுக்கிறதா? அல்லது மக்கள் தமக்கு எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தில் வர மறுக்கிறார்களா என்பதும் அறிய முடியவி ல்லை. இருப்பினும் புலிகள் இயக்கம் தமது பாதுகாப்பிற்கு மக் களைத் தம்முடன் இறுக்கி வைத்திருக்கவே செய்வர் என்பது தெரிந்ததே. இவ்வாறு அரசாங்கத்தின் இறுதித் தாக்குதல் உக்கிர வியூகத்திற்குள்ளும் புலிகளின் தற்காப்பு நிலைக்கு மத்தியிலும் நாலும் லட்சம் மக்கள் அகப்பட்டு அவலங்களை அனுபவித்து நிற்கின்றனர். கடந்த முப்பது வருட கால யுத்தத்தில் எத்தனை தடவைகள் இது போன்ற அவலங்களை வடக்கு கிழக்கு மக்கள் அனுபவித்து விட்டனர். அவையாவற்றையும் விட தற்போதைய முல்லைத்தீவு அவலம் பேரவலத்தின் மேல் பெரும் அவலமாகும். நாளாந்தம் வீசப்படும் விமானக்குண்டு வீச்சுக்கள் பல்குழல் பீரங்கி களில் இருந்து ஏவப்படும் குண்டுகள் பீரங்கிக் குண்டுகள் மக்களைப் பலியெடுத்து வருகின்றன. வீடுகளில் இருந்து மக்கள் வெளியேறி விட்டனர். வன்னியில் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் கிராமங்கள் சுடுகாடாகிக் கிடக்கின்றன. தினம் இறப்போரின் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளன. சிறுவர்கள் குழந்தைகள் முதியோர் பெண்கள் நேயாளிகள் ஆகக் கூடிய துயரங்களை அனுபவித்து நிற்கின்றனர். வன்னி மக்கள் மட்டுமன்றி முழுத் தமிழ் மக்களும் தமது எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்ற ஏக்கத்துடனும் யோசனைக





ளுடனும் இருந்து வருகின்றனர். அடுத்து என்ன என்ற பெரும் கேள்வியே அனைத்து தமிழ் மக்களையும் உறுத்தும் விடயமாகி உள்ளது. பேரினவாத முதலாளித்துவ சக்திகள் வெற்றி வெற்றி என எக்களமிடுகின்றன. அதேவேளை கடந்த முப்பது வருடப் போராட்டத்தின் பலாபலன் என்ன என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் விடை தேட வேண்டிய கட்டத்திற்குள் தள்ளப்பட்டு நிற்கின்றனர். இதற்கு புலிகள் இயக்கம் மட்டும் பாத்திரவாளிகளாக முடியாது. அவர்கள் பிரதான பங்குதாரிகளாகும் அதேவேளை தமிழ்க் குறுந் தேசியவாதத்தை வளர்த்த ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. தமிழரசு, தமிழர் கூட்டணி அதன் பின் ஆயுதம் ஏந்திய தமிழர் அமைப்புக்கள் அனைத்தும் பொறுப்பாளிகளாகவும் பதில் சொல்ல வேண்டியவர்களுமாவர். இது பற்றி விரிவாகப் பேசுவதற்கு இது வல்ல தருணம். இப்பொழுது நமது கவனம் நாலு லட்சம் தமிழ் மக்கள் முல்லைத்தீவின் முற்றுகையில் இருந்து விடுவிப்பதேயாகும். இதற்கு இந்தியா தயாரில்லை என்பதை உணவு பணம் கையளித் ததன் மூலம் வெளிப்படுத்தி விட்டது. அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய உயர் அதிகாரியான சிவசங்கர் மேனன் தெளிவாகப் பதில் கூறி இருக்கிறார். யுத்த நிறுத்தத்தை வற்புறுத்தப் போவ தில்லை எனக் கூறியுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன. அப்படியாயின் இந்தியா துரோகம் செய்வதாக இலங்கைத் தமிழர்கள் உணர்கின்றனர். மேலும் சர்வதேச சமூகமும் அக்கறையின்றி இருந்து வருகின்றது என்றே நம்புகின்றனர். இது ஏன்? அவர்களின் உள்நோக்கங்கள் வேறு வேறானவையாகும். இதனை முன் உணர் ந்து கொள்ளாது இந்தியா மீதும் சர்வதேச சமூகத்துடனும் குருட்டு நம்பிக்கை வைத்தன் விளைவை இன்றாவது உணர தமிழர் தலைமைகள் தாயாரக இல்லாது இருப்பது இன்றைய சோகத்தின் ஒரு பகுதி சராம்சமாகும். மறு புறத்தில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளை ஒரு பொருட் டாகவோ கண்முடித்தனமாக முன்னெடுக்கப்பட்டன. இதனால் பேரின வாதத்தை தூண்டி சிங்கள மக்களைத் தனிமைப்படுத்த ஆளும் பேரினவாத முதலாளித்துவ ஆட்சியினருக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இதனால் தமிழ் மக்களது கோரிக்கைகள் பயங்கர வாதமாகக் காட்ட உதவியது. அன்றி நீண்ட காலத்தில் கைகொடுத்து உதவக் கூடிய சக்திகள் என்றோ தமிழர் பழைமைவாதத் தலைமைகள் நம்பியது கிடையாது. அவர் களைத் தொடர்ந்து அரங்கிற்கு வந்தவர் களும் நேர்மையான இடதுசாரி சக்திகளை யும் பரந்து பட்ட உழைக்கும் சிங்கள மக்க ளையும் எதிர்கால நட்பு சக்திகளாக தூர நோக்கில் நம்பியதில்லை. வெறுமனே அவ் வப் போது உதவும் தனிநபர்களாகப் பார்க் கும் தந்திரோபாயமாகவே அணுகப்பட்டது. அத்துடன் சிங்கள சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் தொடுக் கப்பட்டன.

இவற்றையெல்லாம் தமக்குச் சாதகமாகக் கொண்டே பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் தனது இறுதித் தாக்குதல் எனக் கூறி முல் லைத்தீவைச் சுற்றி வளைத்து "மீட்புப்போரில்" இறங்கி நிற் கிறது. கிளிநொச்சி வீழ்ந்த பின் முல்லைத்தீவுக்கான தாக்குதல் இன்று வாழ்வா சாவா என்ற கொடிய சூழலுக்குள் நாலு லட்சம் மக்களைத் தள்ளியுள்ளது. ஆதலால் பொது மக்கள் மீதான வான் தரை வழித்தாக்குதகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும். அவர்களுக்குரிய உணவு உடை இருப்பிடம் மருந்து மருத்துவம் வழங்கப்பட வேண்டும். அதேவேளை புலிகள் இயக்கம் மக்களின் விருப்பப்படி முடிவெடுத்து சுதந்திரமாக நடந்து கொள்ள அனுமதிக்க வேண்டும். மக்களைப் பலாத்காரப்படுத்தி எதனையும் சாதிக்க முடியாது ஏன்பது இனியாவது உணரப்பட வேண்டும். எனவே தான் நாம் உரத்துக் கூறுவது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப் பினரும் நாலு லட்சம் பொது மக்களின் உயிர்வாழும் நடமாடும் சுதந்திரத்தின் மீதும் பாதுகாப்பாக வாழும் உரிமைக்கும் உரிய உத்தரவாதம் வழங்க வேண்டும் என்பதாகும்.

பூபதி

# இஸ்ரேலின் மிலேச்சத்தனத்தால் காஸா எரிகிறது

காசா நிலப்பரப்பானது பலருக்குப் பலவிதமான பொருள்படும். 15 இலட்சம் பாலஸ்தீன ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் 350 சதுர கி. மீட்டர் நிலப்பரப்பில் உள்ளனர். வடக்கிலிருந்து தெற்கிற்கு துவிச்சக்கர வண்டியில் செல்வதாயின் மூன்று மணித்தி யாலங்களில் செல்ல முடியும். கிழக்கிலிருந்து மேற்கிற்கு போவ தற்கு 25 நிமிடங்கள் போதும். இந்தச் சிறிய காசா நிலப்பரப்பு இன்று சுடுகாடாக மாற்றப்பட்டுள்ளது.

இச்செய்தி எழுதிக் கொண்டிருக்கையில் 1000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டும் 5000 பேர் காயப்பட்டும் உள்ளனர். 14ம் நூற்றாண்டு முஸ்லீம்களுக்கு காசா என்பது புனித யுத்தம்- ஜிகாத். ஒட்டமான் சாம்ராஜ்யத்தின் (1302) ஸ்தாபகரான ஒஸ்மான் காசா பிரதேசத்தில் பிறந்தவராவர். அமெரிக்கா வழங்கிய அதிநவீன விமானங்களைக் கொண்டு இஸ்ரேல் தாக்குதல்களை நடத்துகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் வெனிசூலாவின் ஜனாதிபதி கியூகோ சாவேஷ் இஸ்ரேலிய தூதுவரை நாட்டிலிருந்து வெளியேற்றினார். அதைத் தொடர்ந்து பொலிவியாவும் இஸ்ரேலியத் தூதுவரை வெளியேற்றியது. ஆனால் எகிப்திய சர்வாதிகாரி ஷொஸ்னி முபாரக், சவுதி, ஜோர்தானிய மன்னர்கள் அமெரிக்காவின் அடிவருடிகளாகச் செயற்படுவதுடன் ஹமாசின் ரொக்கட் தாக்குதலால் தான் இஸ்ரேல் தாக்குதல் தொடுத்ததெனக் கூறுகின்றனர். பாலஸ்தீன மக்களைப் பாதுகாக்கும் எண்ணம் எகிப்துக்கு இருந்தால் அது காசாவுடனான றாபா எல்லையைத் திறந்திருக்க வேண்டும். அது மட்டுமல்ல இஸ்ரேல் காசாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு சில நாட்கள் முண்பு கெய்ரோவுக்கு விஜயம் செய்த இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் சிப்பி லிவ்னி எகிப்தின் ஜனாதிபதி முபாரக்கை சந்தித்து பேசியுள்ளார். இஸ்ரேல் காசா மீதான தாக்குதலுக்கு எகிப்து பச் சைக் கொடிகாட்டியதாகவே விமர்சனம் செய்யப்படுகிறது. எகிப்தின் தற்போதைய ஆட்சியாளரான முபாரக் பற்றி அரபுலக மக்கள் ஒரு கணிப்பு வைத்துள்ளனர். ஈராக்கின் சதாம் ஹீசைனைவிட மிக மோசமான கொடுங்கோலனாகவே முபாரக் கணிக்கப்பட்டுள்ளார். ஆனாலும் முபாரக்கை கவிழ்க்க வேண்டி தேவை அமெரிக்காவுக் கில்லை.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மனித உரிமைகள் தொடர்பாக வெளியிட்ட 2007ம் ஆண்டிற்கான அறிக்கையில்: "முபாராக் ஆட்சியின் கீழ் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன. அந்த நாட்டில் 1967ம் ஆண்டிலிருந்து அவசர காலச் சட்டம் தொடர்ச்சியாகவுள்ளது. ஆயுதப்படையினர் நினைத்த மாதிரி ஆட்களைக் கைது செய்தல், தடுத்துவைத்தல், சித்திர வதை செய்தல் என்பன தொடர்கின்றன. பத்திரிகைச் சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை, இன்ரநெற் பார்க்கும் உரிமை வரையறுக்கப் பட்டுள்ளது. பெண்கள் துஷ்பிரயோகம், பெண்களின் உறுப்புகள் சிதைக்கப்படும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன" என்று கூறியது. இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக அதிக அமெரிக்க உதவியைப் பெறும் நாடாக எகிப்து விளங்குகிறது. தற்போதைய நிலைக்கு ஹமாஸ் இயக்கமே காரணம் என மேற்குலகம் கூறுகிறது. ஆனால் காஸாவை இஸ்ரேல் முற்றுகையிட்டுள்ளதை அடக்கியே வாசிக் கின்றனர். சென்ற வருடம் யூன் மாதத்தில் ஆறுமாத மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிற்கு ஹமாஸ் இணங்கியது. அந்த உடன் பாட்டில் காசா முற்றுகையை இஸ்ரேல் விலக்கி கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையும் இருந்தது. 2006ம் ஆண்டில் ஹமாஸ் தேர்த லில் வென்றதைத் தொடர்ந்து இஸ்ரேல் காசா மக்கள் மீது ஏதோ ஒரு வகை நெருக்குவாரத்தைக் கொடுத்து வந்துள்ளது.

இஸ்ரேல் மீது ரொக்கட் தாக்குதலை ஹமாஸ் நிறுத்தியிருந்தது. ஆனால் இஸ்ரேல் அவ்வப்போது போக்கு வரத்து மையங்களை



"ஒரு கண்ணில் வெண்ணையும் மறுகண்ணில் சுண்ணாம்பும்" என்றொரு முதுமொழி உண்டு. இங்கே ஐ.நா. வின் செயலாளர் நாயகம் இரண்டு கண்களிலும் சுண்ணாபுடன் காட்சி தருவது போன்று ஒரு கண்ணில் அமெரிக்கக் கொடியையும் மறுகண் ணில் இஸ்ரேலியக் கொடியையும் அணிந்திருக்கும் காட்சி. இது லெபனானின் ஹிஸ்புல்லா இயக்க ஆதரவாளர்கள் பெய் ருட்டில் உள்ள ஐ.நா காரியாலயத்திற்கு முன்னால் நடாத்திய ஆர்ப்பாட்டத்திற்கு முன் ஒட்டிய சுவரொட்டியாகும்.

மூடியும் மேற்குகரை ஹமாஸ் போராளிகளைக் கைது செய்தும் கொன்றும் வந்தது.

இவற்றை விட ஒப்பந்தத்தை மீறும் வகையில் காசா மீது சென்ற நவம்பர் மாதம் விமானத் தாக்குதல் மேற் கொண்டது. ஹமாஸ் இயக்கம் பயன்படுத்தும் சுரங்கப்பாதையை இலக்குவைத்ததாக இஸ்ரேல் கூறியது. இதன் காரணமாகவே ஹமாஸ் டிசம்பரில் முடிவடைந்த ஒப்பந்தத்தை புதிப்பிக்காது விட்டது. இதன் காரணமாக மோதல்கள் அதிகரித்தன.

ஐ.நா வின் மேற்பார்வையில் ஜபாலியா அகதி முகாமில் உள்ள பாடசாலை மீது இஸ்ரேல் தாக்கியதில் 40 பேர் உயிரிழந்தனர். அந்தப் பாடசாலையை ஹமாஸ் போராளிகள் பயன்படுத்தியதாக இஸ்ரேலும் மேற்குலகும் கூறின. ஆனால் ஐ.நா வின் நிவாரண வேலைக்கான முக்கியஸ்தர் ஜோன் ஜிங் இதை முற்றாக நிராகரித்த துடன் அந்தப் பாடசாலையில் ஹமாஸ் போராளிகளின் நடவடிக்கை எதுவும் இடம் பெறவில்லையெனக் கூறியுள்ளது இங்கு கவனிக்க த்தக்கது. காசா மீதான தாக்குதல்களைப் பற்றி கவலைப்படும் பல் வேறு நாட்டுத் தலைவர்கள் இஸ்ரேலைக் கண்டிக்கத் தயங்கு வதேன்?

இஸ்ரேனின் ஆக்கிரமிப்பு கண்மூடித்தனமான குண்டு வீச்சைக் கண்டிக்காமல் எல்லா நாட்டுத் தலைவர்களும் கவலை மட்டும் தெரிவித்து நீலிக் கண்ணீர வடிக்கின்றனர். இஸ்ரேலைக் கண்டிப்பது அமெரிக்காவை கண்டிப்பதாய் அமையும் என்பதால் கவலை மட்டும் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க மேற்குலகச் செல்லப் பிள்ளை யான இஸ்ரேல் சியோனிச வெறித்தனத்துடன் கடந்த இருபது நாட்களுக்கு மேல் மிலேச்சத் தனதாக்குதல்களை நடாத்தி வரு கிறது. ஆகாய- தரை வழிகளில் நடாத்தப்படும் இத் தாக்குதல்க ளால் பாலஸ்தீனிய மக்கள் தமது மண்ணிற்கான போராட்டத்தைக் கைவிடாது முன்னெடுக்கின்றனர். அரபுலகத் துரோகத்தனங்கள் காட்டிக் கொடுப்புகள் மத்தியில் வீரம் மிக்க பாலஸ்தீன மக்கள் ஆயுதப் போராட்டத்தையும் வெகுஜன எழுச்சிகளையும் முன்னெடு



இஸ்ரேலியத் தாக்குதலாலும் தடைகளாலும் காஸா வீதியில் சமைக்கும் ஒரு தந்தையையும் குழந்தை யையும் காணலாம்

த்து வருகின்றனர்.

காஸாத் தாக்குதலை நம் நாட்டு பேரினவாத ஒடுக்குமுறை அர சாங்கம் கண்டிப்பதாக அறிக்கை விடுகிறது. அதேவேளை சியோ னிச இஸ்ரேலிய மிலேச்சத்தனத்தை தமிழ்த் தேசியவாதத் தலை மைகள் எதுவுமே கண்டிக்கத் தயாராக இல்லை. காரணம் அவர் களது அடிமனிதல் படிந்திருப்பது இஸ்ரேலிய சியோனிச ஆதரவும் பாசப் பிணைப்புமாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## நாறும் அமெரிக்கா

அண்மையில் பெண்களுக்கு எதிராக வன்முறை இடம் பெறும் நாடுகளின் பட்டியல் ஒன்று சர்வதேச அமைப்பு ஒன்றினால் வெளியிடப்பட்டது. எதிலும் முதலாவதாக இருக்க விரும்பும் அமெரிக்கா அதன் விளைவாலோ என்னமோ இந்தப் பட்டியலிலும் முதலிடம் வகிக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அமெரிக்காவிலேயே அதிகம் நடைபெறுகின்றன. அமெரிக்காவில் வருடமொன்றிற்கு 96,000 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதில் 80%தொடர்பில் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இதற்கான காரணங்களை ஆராயும் அந்த அறிக்கை முக்கியமான இரண்டு அவதானிப்புகளை செய்கிறது. முதலாவது அமெரிக்காவில் சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது மிகவும் பணச் செலவான ஒரு செயற்பாடாகும். இலவசமாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது, அவ்வாறு வழக்கு தாக்கல் செய்தாலும் வழக்கு நீண்ட காலத்துக்கு இழுபடும். எனவே நீதி கிடைப்பதற்கு மிகவும் பணம் செலவழிக்க வேண்டும். நீதியை பணமே தீர்மானிக்கிறது. அறிக்கை சொல்லும் இரண்டாவது காரணம் அமெரிக்கா நீதித்துறை பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்குகளை அக்கறையாக கருத்தில் கொள்வது இல்லை. இதனால் பாலியல் வல்லுறவு வழக்குகளுக்கு தீர்ப்புகள் ஒழுங்காக வழங்கப்படுவதும் இல்லை. உலகெங்கும் மனித உரிமைகள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் அறிவுரை சொல்லும் அமெரிக்கா தன் நாட்டு மக்களுக்கே மனித உரிமைகளை வழங்குவது இல்லை. இதுதன் எலி தான் போக முடியவில்லை விளக்குமாற்றையும் தூக்கி கொண்டு போன கதையோ!

## கிரிக்கெட்டும் அரசியலும்

மும்பை பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் இருந்து மீதம் இருந்த போட்டிகளில் விளையாடாது புறப்பட்ட போது விளையாட்டையும் அரசியலையும் ஒன்றாக பார்க்கக் கூடாது என்றும் விளையாட்டு மக்களை ஒன்றாக இனைக்கும் அம்சம் என்றும் கூறப்பட்டது. இதனால் இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியா வந்து விளையாட வேண்டும் என கேட்கப்பட்டது. அதன்படி இந்தியா வந்து இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியா மண்ணில் விளையாடியது. ஆனால் இந்திய அணி பாகிஸ்தான் செல்ல முடியாது என்றும் அரசியல் நிலவரம் சரியாய் இல்லாத நிலைமை தொடர்வதால் இந்திய அரசாங்கம் தங்கள் கிரிக்கெட் அணியை பாகிஸ்தான் சென்று கிரிக்கெட் ஆடாமல் பார்த்து கொண்டது. இதன் பின் இலங்கை அணி பாகிஸ்தான் சென்று அதே காலபகுதியில் இந்தியா அணி விளையாட மறுத்ததை தாங்கள் விளையாடுவதாக ஒப்புகொண்டது. இப்பொது இந்தியா கிரிக்கெட் சபை இலங்கை அணி பாகிஸ்தான் சென்று ஆட கூடாது என வேண்டுகோள் விடுத்து இருக்கிறது. கிரிக்கெட்டும் அரசியயலும் கலக்க கூடாது என்று சொன்னவர் யார்.?

## கண்ட செய்தியும் கடை சரக்காகுமாம்

அண்மையில் தமிழ் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி படிக்க கிடைத்தது. அது என்னவென்றால் மின்வெட்டுக் காரணமாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒபாமா விடுமுறையைக் களிப்பதற்காக குடும்பத்தினருடன் ஹவாய் தீவுக்குச் சென்று தங்கியிருந்த போது மின்னலுடன் கூடிய மழை பெய்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட தனது குடும்பத்தினருடன் 12 மணித்தியாலம் இருளில் சிக்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்திக்கு எமது தமிழ் ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. உலகில் 65%மக்கள் தினமும் மின்சாரம் இல்லாமல் உயிர் வாழ்கிறார்கள். ஒரு மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருப்பது எல்லாம் செய்தியாகி போகிறது. சொந்த நாட்டில் மின்சாரம் இல்லாமல் அவதிப்படுவோரை விட 12 மணித்தியாலம் இருளில் சிக்கியிருந்த ஒபாமா முக்கிய வெளிநாட்டு செய்தி. பத்திரிகா தர்மம் என்பது இது தானோ.

## வருத்தமும் வன்மையான கண்டனமும்

பாலஸ்தீனத்தில் ஹமாஸின் கட்டுப்பாட்டிலுள்ள காஸாப் பகுதியில் இஸ்ரேல் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. காஸாவில் தொடரும் விமானத் தாக்குதல்களால் இதுவரை 307 பேர் பலியாகியுள்ளனர். இவ்வளவு உயிர்கள் காவு கொள்ளப்பட்ட பிறகு இப் பிராந்தியத்தில் நிலவும் வன்முறைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் அழைப்பு விடுத்துள்ளார். இஸ்ரேலின் நடவடிக்கையை கண்டிக்காத அவர் பிராந்தியத் தலைவர்கள் அமைதிப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் பான் கேட்டுக்கொண்டுள்ளார். இவர்கள் இதை தவிர என்ன செய்து இருக்கிறார்கள். வருத்தம் தெரிவிப்பதும் வன்மையாக கண்டிப்பதும் தவிர.

## பொய்யும் புனை கதையும்

புவிவெப்பமடைதலுக்கு எதிரான கொள்கை அளவிலான இலக்குகளை எவ்வாறு வெற்றிகொள்ள முடியுமென்ற இணக்கப்பாட்டுடனான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதன் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. காலநிலை மாற்றம் தொடர்பான புதிய உடன்படிக்கைக்கு உலகின் சார்பில் தலைமை வகித்துச் செல்ல அமெரிக்கா தயாராகி உள்ளதாக தெரிவித்துள்ளார் என செய்திகள் வெளியாகின. தலைமை வகித்துச் செல்வது இருக்கட்டும், முதலில் அமெரிக்கா கையொப்பம் இடாமல் இருக்கும் கியோடோ உடன்படிக்கையில் கையொப்பம் இடுவது எப்போது.?

# சோசலிச கியூபாவின் 50 வருடங்கள்



1959ஆம் ஆண்டு சேகுவேராவுடன் இணைந்து பிடல் காஸ்ரோ தலைமையில் கியூப் புரட்சி வெற்றி பெற்றது. வெற்றி பெற்று ஐம்பது வருடங்களையும் கியூபா எட்டி விட்டது. அதன் புரட்சிப் பாதை மூலம் கியூபா சாதித்தது எவை? சாதித்துக் கொண்டிருப்பது எவை? என்றெல்லாம் கற்க வேண்டிய தேவையும் புரிதலும் அவசியமாக உள்ளது .

அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்ப்பது நமக்கு இலகுவில் புரியும். கியூபாவில் நடந்து கொண்டிருப்பது மக்களுக்கான ஆட்சி முறை. அமெரிக்காவில் நடந்து கொண்டிருப்பது பணக்காரருக்கான ஆட்சிமுறை. அதாவது அமெரிக்காவுக்கு எதிராகத் தினமும் சளைக்காமல் கியூபா கம்யூனிஸ்ட் கட்சியும் மக்களும் போராடுகையில் உலக அரங்கில் கியூபாவை தனிமைப் படுத்த அரசியல் கைதிகளிடம் கியூப அரசாங்கம் மனித உரிமைகளை மீறி நிற்கின்றது என்பதைக் குற்றச்சாட்டாக முன்வைத்து வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். அதற்கு கியூப அதிபர் ஃபிடல் காஸ்ரோவிடம் ஒரு நிருபர் கேட்ட போது அவர் இப்படிக் கூறினார். “ஒரு கைதியிடமோ அல்லது காவலில் வைக்கப்பட்ட ஒரு மனிதனிடமோ வன்முறையை பயன்படுத்தாத புரட்சிகர இயக்கம் உலகிலேயே எங்களுடையது ஒன்றுதான். மேலும் 28 வருடங்களாக மக்களுக்கெதிராக காவல் துறையை பயன்படுத்தாத ஒரே நாடும் கியூபாதான். கியூபாவில் இதுவரை ஆர்ப்பாட்டங்கள் காவல் துறையை கொண்டு முறியடிக்கப்படவில்லை அல்லது நாய்களையும், கண்ணீர் புகைக் குண்டுகளை யும், இறப்பர் தோட்டாக்களையும் கொண்டு மக்களுக்கெதிராக பயன்படுத்தப்பட்டதோ இல்லை. கியூபாவில் ஒரு கைதி கூட விலங்கிடப்பட்டதோ அல்லது அடித்து துன்புறுத்தப்பட்டதாகவோ, கொல்லப்பட்டதோ கிடையாது. கியூபாவின் சிறையிலிருந்து வெளியேறும் மனிதர்கள் உலகின் மிக ஆரோக்கியமானவர்களாக இருக்கின்றார்கள்” என தோழர் ஃபிடல் காஸ்ரோ கூறியுள்ளார். அமெரிக்காவை ஆள்பவர்களும் அவர்களை முண்டுறுத்தும் பன்னாட்டு வணிக நிறுவனங்களும் உலகின் அனைத்து வளங்களையும் கைப்பற்றும் பேராசையால் உலக நாடுகளை தனது காலடிக்கு கொண்டு வரப் பல வகையில் முனைகின்றது. அது சாத்தியப்படாத போது பல வடிவங்களில் யுத்தத்தை நடத்துகின்றது.

அதாவது இன்று ஈராக்கில் நடப்பது போன்று அல்லது ஏழை நாடுகளை மிகப்பெரும் கடன் திட்டங்களின் வழியே கடன் பெற வைத்து நிரந்தர கடனாளியாக மாற்றி அவற்றின் சொந்த அரசியல் நிலைகளைச் சிதைத்து அமெரிக்காவின் கைப்பாவையாக மாற்றுகிறது. மேற்கூறிய வழிகள் சரிவராத விடத்து தனது குள்ளநரி வேலையின் மூலம் மக்கள் தலைவர்களைக் கொல்வது சதித்திட்டம் தீட்டுவது அதுவும் சரிவராத போது கொடூர நவீன ஆயுதங்கள் கொண்டு இராணுவ நடவடிக்கையில் நேரடியாகவே இறங்குவது அதன் நடைமுறையாகும். அமெரிக்க ஆளும் அதிகார வர்க்கம் மற்றைய நாடுகளில் எவ்வாறு வளங்களை கொள்ளையிடலாம் தலைமைகளை எப்படித் தமது கைப்பொம்மை ஆக்கலாம் எனத் திட்டம் தீட்டியபடி இருக்க கியூபாவானது முப்பதினாயிரம் (30000) மருத்துவர்கள் 70 நாடுகளில் சென்று மக்களின் உயிர் காக்கும் கடமையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அமெரிக்காவின் லட்சக்கணக்கான இராணுவத்தினர் நவீன ஆயுதங்கள் தளபாடங்களுடன் பிற நாடுகளில் ஊடுருவி சட்டத்திற்கு புறம்பான ஆக்கிரமிப்புப் போர்களில் மக்களின் உயிர்களைப் பறிக்கின்றனர். அதுமட்டுமன்றி லத்தின் அமெரிக்க நாடுகளில் மூன்று லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கண்பார்வை பெற கியூப மருத்துவர்கள் இலவச அறுவைச் சிகிச்சை செய்யும் தருணத்தில் அமெரிக்காவோ பத்து லட்சத்திற்கு மேற்பட்ட ஈராக்கிய மக்களை கொன்று ஈராக்கின் எண்ணெய் வளத்தை கொள்ளையிட்டுச் செல்கிறது.

மேலும் கியூப மருத்துவர்களும் நடமாடும் மருத்துவமனைகளும் சுகாதாரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சேவைசெய்ய அதனது நாடுகளுக்கு சென்று கொண்டிருக்கும் தருணத்தில் அமெரிக்காவும் அதனது ஆளும் தரப்பும் மயக்க மருந்து செலுத்தப்பட்ட கைவிலங்கு பூட்டப்பட்ட கைதிகளை ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு ரகசியமாக மாற்றிக் கொண்டிருக்கின்றது. கேடுகெட்ட அமெரிக்காவின் சிறைக் கொடுமைக்கு குவாண்டனாமோ இன்றைய உதாரணமாகும்.

கியூபா ஆண்டு தோறும் ஆயுதங்களுக்கு செலவிடும் தொகையைக் குறைத்து அதன் மூலம் உலகில் நோய் கண்டு இறக்கும் ஒரு பத்து லட்சம் குழந்தைகளை காப்பாற்ற முன்நின்று வருகின்றது. ஆனால் குழந்தைகள் பாதுகாப்பு பற்றிய ஐக்கிய நாடுகளின் வரையறையை ஏற்காத இரண்டு நாடுகளில் அமெரிக்கா ஒன்று மற்றையது சோமாலியாவாகும்.

கியூபாவில் ஒரு முறை புயல் வீசி சேதம் ஏற்பட்டபோது அமெரிக்கா உதவிக்கரம் நீட்டியது. ஆனால் கியூபா சொன்ன பதில் “நன்றி வேண்டாம்” எங்களிடம் எல்லாம் இருக்கிறது என்பதாகும். ஆனால் அமெரிக் காவில் கற் றினா சூறாவளி ஏற்பட்ட போது கியூபாவிடமிருந்து (1200) வைத்தியர்களை அமெரிக்கா பெற்றுக் கொண்டது. காரணம் மக்களுக்கான மருத் துவமும் கொள்ளையும் கியூபாவிடம் இருக்கிறது. அமெரிக்காவிடம் சுரண்டலுக்கான அக்கறையும் அரக்கத்தனமும் தான் மேலோங்கிக் கிடைக்கின்றது. இவ்வளவுக்கும் கியூபாவின் சனத்தொகை இரண்டு கோடிக்கு அண்மித்ததாகவே காணப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவின் சனத்தொகை 24 கோடி ஆகும்.

பொது மருத்துவம் மிக நன்றாக உள்ள நிலையில் உள்ள நாடு கியூபா மட்டுமே ஆகும். ஒரு மருத்துவருக்கு பதினைந்து நோயாளி எனும் நிலை அங்கு காணப்படுகின்றது. இதை ஐக்கிய நாடுகள் ஆய்வறிக்கையே கூறி நிற்கிறது.

கியூபாவின் கல்வி அனைவருக்குமான பொதுக்கல்வி எனும் நிலையே காணப்படுகின்றது. கியூபாவில் எழுகின்ற எல்லா பிரச்சனைகளையும் ஆய்வு செய்வதுதான் கியூபப் பல்கலைக்கழங்களின் ஆய்வும் படிப்பும் ஆகும். அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் வெளிநாடுகளில் இருந்து உணவு இறக்குமதி நின்று பாதிப்பு ஏற்பட்டது. அதனால் கியூப பல்கலைக் கழகங்கள் உள்நாட்டு உணவு உற்பத்திக்கு புதிய விதைகளைக் கண்டு பிடிக்கக் கூடிய ஆராய்ச்சிகளை விவசாயத் துறையில் செய்து கொண்டன. நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்துக்குமானதாகவே கியூபாவில் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை காணப்படுகின்றது. அமெரிக்க ஆளும் வர்க்க சுரண்டல் கும்பல்களுடன் இலாபம் குவிக்கும் வணிக நோக்கில் கல்வியோ பொருளாதாரத் திட்டமிடலோ கியூபாவில் இடம்பெறுவதில்லை.

அடுத்து சமூகக் கட்டுமானம் என்பதை நோக்குவோமானால் வேலை வாய்ப்பில் ஆண் பெண் சமத்துவம் பேணப்படுகிறது. வேலை செய்வோரில் 40% க்கு மேல் பெண்கள். வேலை செய்யக்கூடிய வயதில் இருக்கும் பெண்களில் பாதிப்பேர் இப்போது வேலையில் இருக்கிறார்கள். 1970 இல் கால்வாசிப்பேர் தான் வேலையில் இருந்தார்கள். வைத்தியர்களில் பாதிப்பேரும் மருத்துவமனைத் தலைவர்களில் பாதிப்பேரும் பெண்கள். உயர்தர விஞ்ஞானிகளில் 53 சதவீதம் பேர் பெண்கள். சட்டசபை உறுப்பினர்களில் கால்வாசிப் பேர் அங்கம் வகிக்கின்றனர். அரசியலில் மிக அதிகமாகப் பெண்கள் பங்கேற்கும் நாடு கியூபா தான்.

வளர்ச்சி குன்றிய நாடாக இருந்தாலும் சரி, வளர்ச்சி அடைந்த நாடாக இருந்தாலும் சரி வேலையில்லாப் பிணி பிடித்து வாட்டும் இந்த உலகில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களை இன்னும் அதிகமாக ஓய்வூதியம் கொடுப்பதுடன் திரும்ப வேலைக்கு வாருங்கள் என்று அழைக்கிறது கியூபா. முதுமை பிணி, அங்கக்குறைபாடு போன்ற காரணத்தினால் வேலை செய்ய முடியாமல் இருக்கும் மக்களுக்குப் பொருளாதார சமூகப் பாதுகாப்பை முழுமையாக அளிக்கிறது. கியூபாவின் அரசியல் சட்டம். நகர்புறத்துக்கும் கிராமப் புறத்துக்கும் இடையே காணப்படும் வருமான ஏற்றத் தாழ்வு பெரு மளவு குறைக்கப்பட்டிருக்கின்றது. கியூப மக்களின் சாதனைகளில் பெருமை கொள்வது அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பும் நுகர்வோர் கலாச்சார சமூக அமைப்பை நிராகரித்து நிற்பது ஆகும். அதனைக் கூறுமிடத்து டாக்டர் ஆல்வாரிஸ் இப்படி எழுதியுள்ளார். “மக்களின் சாதனைகளில் பெருமை கொள்வது கியூபாவின் விஞ்ஞானிகள் சமூகம். பஸ்ஸில் அல்லது சைக்கிளிலோ வேலைக்குச் செல்வது குறித்தோ மற்றைய மக்கள் எதிர்கொள்ளும் சிரமமான சூழலில் வாழ்வது குறித்தோ அவர்கள் வெட்கப்படுவதில்லை. மேலும் அமெரிக்கா உருவாக்குகின்ற நுகர்வோர் கலாச்சார சமூக அமைப்பை மாதிரியாகக் கொண்டு ஏழை நாடுகள் பின்பற்றிய அதே தவறை நாங்கள் செய்யவில்லை. எங்களது அரிய செல்வாதாரங்களைக் கொண்டு பகட்டான பொருட்களை அல்லது ஆடம்பரக் கார்களை வாங்கும் தவறுகளை நாங்கள் செய்யமாட்டோம்.” நுகர் பொருட்களை விற்கும் செயல்களை அமெரிக்காவின் பலகோடி மதிப்பு மிக்க தகவல் துறை செய்து வருகின்றது. அப்படியானால் அமெரிக்காவைக் காட்டிலும் கியூபா எதில் மேன்மையுற்று நிற்கின்றது எனும் கேள்விக்கு டாக்டர் ஆல்வாரிஸ் இவ்வாறு பதில் கூறுகின்றார் “அரசியலில் ஊழல் இல்லை. போதைப்பொருட்களுக்கு எவரும் அடிமை இல்லை. இளைஞர்களுக்கு கல்வி இல்லாமலில்லை, வறுமை இல்லை சுகாதார மேம்பாட்டுடன் இருக்கிறது கியூபா” எனப் பதில் தருகிறார்.

முழு நிறைவு கண்ட ஒரு நாட்டில் வாழ்கின்றோம் என்னும் திருப்தி நிலை அன்றாடம் மேலோங்குவதுடன் நிம்மதியுடனும் திருப்தியுடனும் வாழ்ந்து வரும் நிலை அங்கு இருக்கின்றது. மனித குலத்தின் மேன்மைக்காக ஃபிடல் கஸ்ட்ரோவும் கியூபாவினது மக்களும் இந்த நூற்றாண்டின் சிறந்த முன்மாதிரிகளையும் செயற்பாடுகளையும் முன்வைத்துள்ளனர். அவை சோசலிசத்தினது வெற்றியாகும். மாமேதை மார்க்ஸ் சொன்னது போல் முதலாளித்துவம் தனக்குத் தானே சவக்குழியை வெட்டிக்கொள்ளும் என்பது எவ்வளவுக்கு நிதானமாக உள்ளது.

கியூபாவிடமிருந்து கம்யூனிஸ்ட்டுகளும் முற்போக்கு வாதிகளும் ஜனநாயக சக்திகளும் நிறையவே கற்க வேண்டிய தேவையும் அவதானிப்புகளும் உள்ளன. ஏனெனில் போராட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்படும் சோசலிச அமைப்பில் தான் உண்மையான சமத்துவம் மலரும் ஏகாதிபத்தியத்தை முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்கு கியூபாவிடமிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு முன்னேறுவோம் .

**யுகசக்தி.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சாதியத்திற்கெதிரான போராட்டங்களும் புலம்பெயர்ந்த பகல் வேஷக்காரர்களும்

சஞ்புகன்

இலங்கையிலே சாதியம் மிகக் கொடுமையாக நடைமுறையிலிருந்த பகுதி யாழ்ப்பாணக் குடாநாடு தான். தென்னிலங்கையில் அந்நியக் குறுக்கீடு நேர்ந்த சூழல் ஒரு குறிப்பிட்ட சாதியின் முழுமையான சமுதாய ஆதிக்கத்திற்கு ஆப்பு வைத்தது. எனவே தான் சாதிய ஒடுக்குமுறையைப் பல்வேறு சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் தணிக்க இயலுமாயிற்று. சர்வசன வாக்குரிமையும் குறிப்பாக 1956ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் சாதி அடிப்படையிலான சமூக ஒடுக்குமுறையைப் தணிப்பதில் முக்கிய பங்காற்றினாலும் சாதியையும் சாதியச் சிந்தனையையும் ஆதிக்கத்தையும் இன்னமும் முற்றாக ஒழித்து விடவில்லை.

யாழ்ப்பாணக்குடாநாட்டுச் சூழல் வித்தியாசமானது. அங்கே சாதியத்தின் பிடிப்பு சகல துறைகளிலும் வலுவாக இருந்தது. எனவே அங்குதான் சாதியத்திற்கெதிரான போராட்டங்கள் முனைப்பாக இருக்க நேர்ந்தது. சாதியத்திற்கெதிரான போராட்டங்களின் மையமாக யாழ்பாண குடாநாடே இருந்தது என்பதில் ஐயமில்லை. சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் என்ற நூல் 1989ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்பட்டது. அது இலங்கையில் சாதியத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதற்கெதிரான போராட்டங்களையும் பொதுப்படக் கூறி அதன் அதி உச்சக்கட்டமான தீண்டாமைக்கெதிரான வெகுஜனப்போராட்டத்தின் வரலாற்றுப் பின்னணியையும் வளர்ச்சியையும் நிறைவையும் இந்நூல் விவாதித்து. அதன் இரண்டாவது திருத்திய பதிப்பு தமிழகத்தில் வெளியிடப் பட்டதனால் இலங்கையில் என்ற சொல் நூலின் பேருடன் சேர்க்கப்பட்டது. இந்த நூலும் எம்.சி. சுப்பிரமணியத்தின் வாழ்க்கை பற்றிய நூலொன்றும் பாரிசிலும் லண்டனிலும் 2008 செப்ரெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றுள் சாதியமும் அதற்கு எதிரான போராட்டமும் பற்றியதே அதிகம் பேசப்பட்டதில் வியப்பில்லை. என்றாலும் பிரான்சில் நடந்த கூட்டத்தில் விமர்சனம் போதாது என்று கூறி லண்டனில் நடந்த கூட்டத்தில் விமர்சனம் என்ற பேரில் சிலரால் ஏதேதோ எல்லாம் பேசப்பட்டன. அவற்றில் நூலை வாசித்து விளங்கிப்பேசப்பட்டது எவ்வளவு என்பது அண்மையில் அந்நிகழ்வுகளின் "தூ" இணையத்தளத் தொகுப்பு மூலம் ஓரளவு தெரியவந்தது. வக்கிரமான கருத்துக்களைக் கூறியவர்களில் அரசியல் பின்னணியையும் புலம் பெயர்ந்த சூழலில் அவர்களது செயற்பாடுகளையும் அறிந்தவர்கட்கு அவர்களின் வன்மம் விளங்கும்.

தலித் தலித்தியம் என்ற சொற்கள் இலங்கையின் போராட்டங்களின் பயன்பட்டவையல்ல. தமிழகத்துத் தலித்தியவாதிகள் கொண்டாடுகிற டானியல் என்றுமே அச் சொல்லைத் தன் நூல்களிற் பயன்படுத்தவில்லை. அவர் பஞ்சமர் என்ற சொல்லை பயன்படுத்தினார். தாழ்த்தப்பட்டோர் என்ற சொல்லே அவர்கள் தாழ்ந்தோர் அல்ல தாழ்த்தப்பட்டோர் என்ற உண்மையான நிலையை உணர்த்துகிறது. என்ற அடிப்படையில் தாழ்ந்தோர் கீழ்ச்சாதி எளியசாதி பஞ்சமர் என்பவற்றாற் குறிக்கப்பட்டோர் ஆதிக்கக்காரரால் தாழ்த்தப்பட்டோர் என்ற வரலாற்று உண்மையை அச் சொல் குறிப்பிட்டதால் அதையே இலங்கையின் இடதுசாரிகள் அனைவரும் பயன்படுத்தினர் எனலாம். தலித் என்ற சொல் அடிநிலை என்பதைக்குறிப்பது அது மராத்தியிலிருந்து வந்தது. அது தமிழகத்துக்கு வருமுன்னமே சாதியத்திற் கெதிரான போராட்டங்கள் தமிழகத்தில் நடைபெற்று வந்துள்ளன. சாதியத்திற்கெதிரான போராட்டத்தின் வர்க்கத்தன்மையை வடிகட்டி விலக்குவதற்காகவே தமிழகத்தின் "தலித்திய வாதிகள்" செயற்பட்டுள்ளனர் என்பது தான் வரலாற்று உண்மை. அவ்வாறு வர்க்க நீக்கங் செய்யப்பட்ட அரசியல் தலித் அரசியலாக வளராமல் தமிழகத்தில் சாதி அரசியலாகிப் பிளவுப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு தலித்தியத்தைப் புலம் பெயர்ந்த சூழலில் உள்ள சிலர் உள்வாங்கிக் கொண்டனர். அவர்களிற் பெரும்பாலான வர்கட்கு ஈழத்துச் சாதியமும் போராட்டங்களும் பற்றி எதுவுமே தெரியாது. ஏனென்றால் அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்த் தேசிய வாதத்தின் வழியில் சென்று தான் சாதியம் இன்னும் சாகவில்லை என்று கண்டவர்கள். அவர்கள் தமது தேசிய வாதத்தின் போக்கில் உள்வாங்கிய மாக்சிஸ எதிர்ப்பு இன்னமும் அவர்களை நீங்கவில்லை. அவர்களுடன் இடதுசாரி விரோத வன்மம் பிடித்த சிலர் கூட்டமைத்து "கௌரவ" தலித்துகளாகப் பம்மாத்துப் பண்ணி வருகிறார்கள்.

இலங்கையில் மேர்ஜ் என்கிற என்.ஜி.ஓ. நிறுவனத்தின் "சரிநிகர் சஞ்சிகையின்" குளு குளு அறையிலிருந்து நாள்தோறும் கணனியில் ரோஹண விஜேவீரவின் படத்தை ஆராதனை செய்து வந்தவரான சரவணன், தனிப்பட்ட காரணங்கட்காக நவசமசமாஜக் கட்சியின் ஆதரவாளராகவும் இருந்து வந்தவர். (அக்கட்சி தலைவர் விக்கிரமபாகுவின் விடுதலைப்புலி ஆதரவு இன்னொரு விடயம்) அந்தப் பின்னணியிலேயே அவரது மாக்ஸிச லெனினிசச எதிர்ப்பும் சரிநிகரில் அவரது தலித்தியக் குறிப்புகளில் மாக்சிச வாதிகளின் வரலாற்று பங்களிப்பு

> **தலித்தியம் பேசும் புலம் பெயர்ந்த கனவான்களே தாழ்த்தப்பட்ட மக்களின் யதார்த்த வாழ் நிலையை கவனத்தில் கொண்டு பேசுங்கள்!**

பற்றிய இருட்டடிப்பும் இடம்பெற்றன. இப்போது இந்த நூலை ஒரு கட்சி பிரசார நூலாக காட்ட முயன்றிருக்கிறார். இதில் அதிசயம் என்ன?

பாரிஸில் சோபா சக்தி இந்த நூல் எம்.சி. சுப்பிரமணியம் சாதி ஒழிப்பிற்காக எதுவுமே செய்யவில்லை என்று கூறுவதாகச் சொல்லியிருந்தார். அவர் நிச்சயமாக நூலை வாசிக்கவில்லை என்பேன். எம்.சி. சுப்பிரமணியம் திரிபுவாதிகளுடன் நின்றதன் விளைவாக 1966 ஒக்டோபர் எழுச்சி தொடர்பாக தவறுகள் செய்தார் என்று சுட்டிக்கபட்டப்பட்டுள்ளதே ஒழிய அவரது பங்களிப்புகள் நூலில் மறுக்கவோ மறைக்கவோ படவில்லை. 1964க்குப் பிறகு தமிழரிடையே சாதியத்திற்கெதிரான போராட்டத்தை மாக்ஸிச லெனினிசச வாதிகளே முன்னெடுத்தனர் என்பதை அவரால் ஏற்க இயலவில்லை.

மாதவியின் கருத்து நூலில் கூறப்பட்டுள்ள ஒரு அடிப்டையான உண்மையான மேநிலையாக்கம் பெற்றவர்கள் சாதிய எதிர்ப்பில் பின்நிற்பதையும் தமது சாதி அடையாளத்தை மழுப்புகிற தன்மையையும் பற்றிய குறிப்பைத் தவறாக வியாக்கியானம் செய்கிறது. சமூக நீதிக்குப் போராடப் பின்னிற்பதைக் கூறுவது எவரையும் சமூகவிரோதிகளாகப் காட்டுகிற முயற்சி என்பது நீதியற்றது.

எல்லாரையும் மிஞ்சிய வன்மம் மு. நித்தியானந்தனுடையது. இவருடைய திருகுதாளங்கள் பற்றிச் சில ஆண்டுகள் முன் புதிய பூமியில் எமுதப்பட்ட பிறகு பதில் கூற வக்கில்லாமல் தனது உளறல்களை சில காலம் அடக்கியிருந்த இவர் இப்போது மறுபடியும் விஷம் கக்கத் தொடங்கியிருக்கிறார்.

இந்திய தலித்தியவாதிகள் பற்றிய சிவசேகரத்தின் குறிப்புகள் வஞ்சக நோக்கமுடையவை என்று கூறி தலிக் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் சுய கௌரவத்தை சிறப்பாக வலியுறுத்துகிற பதம் என்று சொல்லியிருக்கிறார். அச்சொல் தாழ்நிலையில் உள்ளவன் என்ற கருத்துடையது என்று அவருக்கு ஒருவேளை தெரியாது. ஒரு சிரேஷ்ட விரிவுரையாளராக வரக் கூடிய போதிய கல்வித் தகுதி பெறாமல் தன்னைப் பேராசிரியர் என்று பிறரை சொல்ல வைத்து பூரித்து போகிற இந்தப் பம்மாத்து பேர்வழிக்கு எந்த விஷயத்திலும் ஆழமான அறிவோ அக்கறையோ இல்லை என்பது இன்று புலம் பெயர்ந்த சூழலில் அம்பலப்பட்டு போன விடயம் என்றாலும் அங்கே மேடை கிடைத்தாலும் ஓடிப்போய் அதற்கேற்ற விதமாக தீவிர இடதுசாரி, புலி ஆதரவாளன், புலி எதிர்ப்பாளன், மாக்ஸிச விரோதி என்ற வேடங் கட்டி ஆடுவதற்கு மட்டும் ஒரு திறமை உண்டு "அவை காற்று கலைக்கழகத்தில்" ஒட்டிக் கிடந்த போது மேடையில் நிண்டு நடிக்க முடியாவிட்டாலும் வாழ்க்கையில் மிக நன்றாகவே நடித்து வருகிறார். இந்தப் புத்தகத்தைச் சாதாரணமானவர்கள் பார்க்க நேர்ந்தால் சிவசேகரமும் செந்திவேலும் மட்டும்தான் சாதியப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள் என்ற கருத்துத் தான் உருவாகும் என்று அவர் கூறிய போது அவருடைய தண்ணீர் தொட்டி நிதானம் எப்படி இருந்தது என்று கூட்டத்தில் இருந்தவர்கள் கவனித்திருக்கக் கூடும். மிகக் கவனமாக எழுதப்பட்ட நூலை வாசிக்காமல் அதுபற்றி உளறுவதும் இரவல் வார்த்தைகளை சொந்த அறிவு மாதிரிப் பேசுவதும் அவரைச் சூழவுள்ள ஒரு சிலருக்கு கிறுகிறுப்பூட்டினாலும் நூலை வாசித்த எவருக்கும் இந்த வெறுங்குடத்தின் கலகலப்பு விளங்கிவிடும்

பெரியார் அம்பேத்கார் போன்றோர் வெகுஜனப் போராட்டம் செய்யாதவர்கள் என்று சிவசேகரம் கூறுவதாக இன்னொரு புலுடா. அந்த விதமான சாடையிற் கூட எதுவுமே எங்கும் சொல்லப்படாத போது, ஏன் இந்தப் பொய்? ஏனிந்த வன்மம் பிடித்த அயோக்கியத்தனம்?

சண்முகதாசன் பற்றிய சில குறிப்புகள் திருந்திய பதிப்பில் குறைக்கப்பட்டுள்ளதிற் குற்றங் காண்கிறார். அன்றைய சூழலில் நூலாசிரியர்கட்கு முக்கியமாக்கப் பட்டவை இன்று விவரமான விவரணத்திற்கு அவசியமற்றவை என்பதாலே சுருக்கப்பட்டன. இதில் நோக்கங் கண்டுபிடிப்பதது போதாமல், தோழர் எஸ்.ரி. என். நாகரத் தினத்துக்கு முதற் பதிப்பு சமர்ப்பிக்கப்பட்டது, இப்பதிப்பு அதைச் செய்யவில்லை என்று வலிந்து நோக்கத் தேடுகிறார். முதற் பதிப்பு நூல்வடிவு பெற்ற போது தோழர் எஸ்.ரி.என். இறந்து சில நாட்களாகின. எனவே அவரது மறைவு நினைவு நிகழ்வொன்றில் அது அவருக்கு சமர்ப்பணமாக வெளியிடப்பட்டது. இம்முறை அவர் பற்றிய குறிப்புகள் நூலினுள் முன்னை விட விரிவாக உள்ளன என்பது இந்தப் போலிப் பேராசிரியருக்கு எப்படி விளங்கும். வாசிக்காமலே விமர்சிக்கிற வல்லமை வீண்போகலாமா.

நித்தியானந்தனுக்கு வஞ்சகம் என்ற சொல்லுக்கு பொருள் தெரியாது போலிருக்கிறது. அதனால் தான் எதையெதையோ எல்லாம் வஞ்சகம் என்கிறார். அவருடைய நடத்தையை அவரது இடதுசாரி வேடம், புலி வேடம், புலி எதிர்ப்பு வேடம், தலித் வேடம், போன்ற பல வேடங்களினூடும் முதுகுக்குப் பின்னால் கதைக் காவித் திரிகிற சில்லறைப் புத்தியையும் கண்டு கொண்டவர்கள் வஞ்சகத்தின் ஒரு ஒட்டுமொத்த வடிவமே அவர் என்று நன்றாக அறிவார்கள்.

இந்த விதமான கூட்டங்கள் நூல் பற்றிய ஒரு விரிவான ஆய்வையும் விளக்கத்தையும் தர வல்லன என நான் எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் குறைந்தபட்ச நேர்மையுடன் நூலின் குறைநிறைகளை கூறக் கூடிய எவருமே லண்டன் 'அறிமுக ஏற்பாட்டாளர்கட்கு' கிடைக்கவில்லையா? தூ! வெட்கக் கேடு!

**பின்குறிப்பு**

இந்தியாவில் சாதி வெறிக் கெதிராக யார் முன்னின்று போராடுகிறார்கள் என்பதைக் கொஞ்சம் விசாரித்தால் தமிழகத்தின் தலிந்தியப் பிரமுகர்கள் பலரது முகமூடிகள் கழரும். ஐரோப்பியத் தலித்தியவாதிகள் புலி எதிர்ப்பாளர்களாக இருக்கையில் அவர்கள் மெச்சும் தமிழகத் தலித்திய வாதிகள் என்.ஜி.ஓ. தலித்திய வாதிகள் ஓரிருவர் போக புலி ஆதரவாளர்களாகக் கூடத் தோன்றிக், கருணாநிதியுடன் கை கோர்த்து உலாவுகிறது ஏன் என்பதும் அப்போது விளங்கும்.

# தீரா நதியில் அச்சேறாத ஒரு மடல்

செப்டெம்பர் 2008

"குமுதம் தீரா நதியில்" கைலாசபதியை மெச்சி அ. முத்துலிங்கம் எழுதிய பண்பாடான நீண்ட குறிப்பும் திருமதி கைலாசபதியுடனான அவரது உரையாடலின் ஒரு பகுதியும் வெளிவந்தன. கைலாசபதியுடன் அரசியல் உடன்பாடற்ற வருமான முத்துலிங்கம் கைலாசபதியின் ஆளுமையைச் சிலாகித்து எழுதியதைத் தாங்கிக் கொள்ள இயலாமல் ஒக்டோபர் 'தீரா நதியில்' முகம்மது என்பவர் வலிந்து கைலாசபதியைத் தாக்கி அவர் சாதித் தடிப்புடையவர் என்று கூறி நிலவிலே பேசுவோம் சிறுகதை பற்றிக் குறிப்பிட்டதோடு கைலாசபதி தனக்கு வேண்டியவர்களையும் தன் கட்சிக்கு உடன் பாடானவர்களையும் மட்டுமே ஊக்குவித்தார் என்றும் எழுதியிருந்தார். இவற்றை மறுத்து நான் பிரதி எடுத்துக் கொள்ளாமல் தீரா நதிக்கு எழுதிய மடலில் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்தியிருந்தேன்.

"நிலவிலே பேசுவோம்" என்கிற கதை கைலாசபதி சிறுவயதினராக இருந்த போது வந்தது. அக்கதையில் வருகிற பெரிய மனிதர் அவராக இருந்திருக்க இயலாது. அக்கதையை வலிந்து அவருடன் தொடர்பு படுத்தியவர் எஸ். பொன்னுத்துரை. விஜயபாஸ்கரன் இலங்கைக்கு வந்தபோது கைலாசபதி வீட்டில் அவருக்கு விருந்தளி த்த போது பேச்சுத்துணைக்கு மேலும் ஒருவராக தேவன் அழைக்கப்பட்டிருந்தார். விருந்தின் பின்பு இடதுசாரிகளைச் சீண்டி விடுகிற விதமாக நீங்கள் எல்லாருமிருக்க ஏன் என்னை அழைத்தார் என்று தேவன் கேட்ட பின்ணனியில் டொமினிக் ஜீவா அதற்கு சாதிய நோக்கங் கற்பித்துப் பேசியதையே பொன்னுத்துரை தனது பொய்ப்பிரசாரத்திற்கு வாய்ப்பாக்கிக் கொண்டார். டானியல் அதைப்பற்றி எந்தவிதமான கவலையுங் காட்டவில்லை. ஏனென்றால் கைலாசபதி வீட்டிற்கு சாதி வேறுபாடின்றி எல்லாரும் போய் வருகிறவர்கள் என்ற உண்மை அவருக்குத் தெரியும். கைலாசபதி வீட்டு உபசரிப்புப் பேதம் பாராட்டதது என்றும் அவருக்குத் தெரியும். கைலாசபதி ஜீவா டானியல் இருவரையும் சேர்த்து அழைத்தால் இரு வரும் மோதுவார்கள். விருந்தாளிக்கு சங்கடம். ஒருவரை விட்டு மற்றவரை அழை த்தால் அது வேறொரு பிரச்சினை. எனவே கட்சிமட்டத்திலுள்ளவர்களைச் சந்திக்க வேறு வாய்ப்புகள் இருந்த விஜய பாஸ்கரனுக்குக் கட்சி சாராத ஒரு படைப்பாளியை கைலாசபதி அறிமுகம் செய்ய முற்பட்டார். இதற்கு அப்பால் போய் கைலாசபதிக்குச் சாதிய முத்திரை குத்துகிற தேவை பொன்னுத்துரைக்கு இருந்த காரணம் அவரது தனிப்பட்ட வன்மமும் இடதுசாரி எதிர்ப்புமேதான். தனது தமிழக உறவுகளை இவ்வாறான வக்கிரங்கட்குப் பொன்னுத்துரை பயன்படுத்தத் தவறவில்லை.

நிலவிலே பேசுவோம் விடயம் மட்டுமன்றிப் தன்மீதான பல்வேறு அவதூறுகளையும் கைலாசபதி அறவே புறக்கணித்தார். அவ்வாறான தனிப்பட்ட தாக்குதல்கட்கு அவர் பதில் கூறுவது அவற்றை கௌரவிப்பது ஆகும் என்பதே அவரது நிலைப்பாடாக இருந்து வந்தது. எனவே நிலவிலே பேசுவோம் அவரைப்பற்றியதல்ல என்பது அவரது காலத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. கதையை எழுதிய என்.கே. ரகுநாதன் இரண்டு மூன்று ஆண்டுகள் முன்னரே அதைப் பற்றி ஒரு குறிப்பு எழுதியதால் கைலாசப்தி பற்றிய அந்த அவதூற்றை மூன்று தசாப்தங்கட்குப் மேலாகப் பரப்பப் பொன்னுத்துரைக்கு வாய்ப்பிருந்தது. 1990களில் குற்றச்சாட்டை பரப்பிய மு. பொன்னம்பலம் போன்ரோரை மறுத்து நான் எழுதியிருக்கிறேன். அதற்கு முன்பும் பின்பும் பிறகும் எழுதியிருந்தனர். எனினும் கைலாசபதியை நிந்திப்பதையே நோக்கமாகக் கொண்டவர்களை நிறுத்த இயலவில்லை. அவர்களது யோக்கியம் அப்படி.

கைலாசாதி தனக்கு நெருக்கமானோரையும் கட்சிக்கு நெருக்கமானோரையும் மட்டுமே ஊக்குவித்தார் என்பதைப் பொய்ப்பிக்க முத்துலிங்கமே போதுமான சான்று. அவரை விட சிரித்திரன் "சுந்தர்" முதலாகப் பலரைக் குறிப்பிடலாம். தினகரனில் அவர் பொறுப்பிலிருந்த இரண்டாண்டுகளில் அவர் ஈழத்து எழுத்தாளர்களை ஊக்குவித்தளவு வேறெந்த பத்திரிகை ஆசிரியரும் தனது முழு வாழ்நாளிலும் செய்ததாகக் கூறுவது கடினம். கைலாசபதி தனது நிலைப்பாடுபற்றி எவருக்கும் கருத்துக் குழப்பம் இருக்கக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாகவே இருந்தார் அதனாலேயே அவர் சிலரால் வெறுக்கப்பட்டார். அதே வேளை அவரை ஏற்காதோராலும் அவர் மதிக்கப்பட்டார்.

என்னுடைய சொந்த அனுபவத்தைக் கூறுவதனால் நான் அவரை 1976 வரை சந்திக்கவில்லை. அதன் பிறகு கூட ஓரிரு சந்திப்புகளே நடந்தன. எனினும் என்னைச் சந்திக்க முதலே "களனி" சஞ்சிகையில் புனைபேரில் வந்த என் கவிதையை எழுதியது யாரென்பது விசாரித்து நான் என்று கேள்விப்பட்டபோது கடித மூலம் அதை உறுதிப்படுத்திய பின்பே அதைப்பற்றி கட்டுரை ஒன்றில் படைப்பின் அடிப்படையில் அக்கவிதை பற்றி ஒரு குறிப்பை எழுதினார். முகம் தெரியாத படைப்பாளிகளை தேடி விசாரித்து அறிவது அவரது அக்கறையாக இருந்து வந்துள்ளது. கைலாசபதி பற்றி தீரா நதிக்கு அக்கறை இல்லை. அது குமுத நிறுவனத்தின் போலி இலக்கிய முகம். கைலாசபதி பற்றிய குறிப்பு அங்கு வந்த காரணம் அங்கே ஒழுங்காக எழுதுகிற முத்துலிங்கம் தான். கைலாசபதி பற்றிய அவதூற்றை பிரசுரிக்க கூசாத தீரா நதிக்கு அதற்கான என்பதிலைப் பிரசுரிக்கக் அக்கறை இல்லை. இவ்வாறு தமிழகத்தில் பொன்னுத்துரை பரப்பிய பொய்கள் பரவி நிலைக்கத் தீரா நதி போன்ற வியாபார ஏடுகளும் உடந்தையாகின்றன. தமிழகத்தில் இருந்து வரும் ஈழத்தில் அக்கறையுள்ள இலக்கிய ஏடுகளின் கவனமெல்லாம் புலம்பெயர்ந்த தமிழரின் கையிலுள்ள பணத்தின் மீது தான் என்பது நமக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டப் படுகிறது. நாம் விழித்துக் கொள்வது எப்போது.

சி. சிவசேகரம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

ஜனவரி - பெப்ரவரி 2009

# புதிய பூமி


இணையத் தளம் : Website: www.ndpsl.org






## ஐ.அமெரிக்கவே வெளியேறு
## புஷ்க்கு சப்பாத்து வீச்சு







அமெரிக்கக் கொலை வெறியனுக்கு சப்பாத்துக் கழற்றி எறிந்த ஈராக்கிய வீரப் புதல்வன் முந்தாஸர் அல் - ஸைடியை விடுதலை செய்யக் கோரி ஈராக்கிய மக்கள் சப்பாத்து ஆர்ப்பாட்டம் நடத்துவதைப் படத்தில் காணலாம்





இது தான் மக்கள் போராட்டம்

மேற்கு வங்கத்தின் மிண்டாப்பூர் மாவட்டத்தில் தமது நிலப் பகுதிக்குள் அரசு - தனியார் நிறுவனங்களையும் பொலீசையும் வர விடாது தடுத்து ஆதிவாசி மக்கள் தமக்கேயுரிய எதிர்ப்புப் போராட்டம் நடாத்தி வருகிறார்கள்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL. 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.